சுவிஸ்

வானவில்

2011



J/ UDUPPIDDY AMERICAN MISSON COLLEGE
& GIRLS' COLLEGE P P A
SWITZERLAND

PALMYRA
பல்மேறா

Consulting & Translation
ஆலோசனை & மொழிபெயர்ப்பு

V. RATNAKUMAR
Seebahnstrasse 85
8003 Zurich

Tel : 044 / 451 62 22
079 / 311 55 29

Fax : 044 / 451 62 23
079 / 669 11 06

E-Mail : palmyra@gmx.ch , tamilberatung@gmx.com

ஆங்கில, தமிழ் மற்றும் கணித வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

சுவிஸ்

வானவில்

2011

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

கல்லூரிக் கீதம்

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

வாழிய வாழிய வாழியவே உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரி
- வாழிய

அனுபல்லவி

ஏழிசை போலவும் இன்றமிழ் போலவும்
இசைபல திசைதொறும் இசைவுற
- வாழிய

சரணம்

ஓது கலைத்துறை யோடுவிஞ் ஞானமும்
ஓங்கு முயிர்நலந் தாங்குமெய்ஞ் ஞானமும்
நாத இசையொடு நங்கள் சமூகமும்
நாடும் வளம்பெறப் பீடும் பெருக்கி
- வாழிய

உத்தம ஒழுக்கமும் உண்மை விழுப்பமும்
உயிரினும் மேலாய் உன்னு தகவதும்
சுத்த மனத்தொடு தொண்டுசெய் ஊக்கமும்
சோம்பலில் லாவுழைப் போம்பலும் பெருக்கி
- வாழிய

தன்னலம் நீக்கி இன்னலைப் போக்கித்
தாயத்திரு நாட்டினுக் காய்த்தினம் வாழ்ந்திடும்
உன்னத வீரரை ஓய்விலா தாக்கி
ஊழிதொ றூழி ஊழிதொ றூழி
- வாழிய

ஆக்கம்:

உடுப்பிட்டி மணிப்புலவர் : காங்கேசு நீலகண்டன்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

கல்லூரிக் கீதம்

இராகம்: சிந்துபைரவி தாளம்: ஆதி

பல்லவி

எங்களது கல்லூரி வாழ்க, உடுப்பிட்டிப்
பெண்களது கல்லூரி வாழ்க, வாழ்க
எங்களது கல்லூரி வாழ்க

சரணங்கள்

சீலம் செழிக்கும் உயர் தெய்வ சிந்தனையோடு
ஞாலம் புகழ் கற்பு நாற்குண நலங்களும்
காலம் கடந்து வளர் கலைகளும் பயிலவே
கருணையே அவதாரமாய் வந்த கடவுளே
- எங்களது கல்லூரி வாழ்க.

நல்லார் இணக்கமொடு நற்போத ஞானமும்
சொல்லிலே வாய்மையும் தூய்மை பொலி சாந்தமும்
எல்லா அறங்களிலும் ஏற்றமும் வளரவே
இறைவனின் திருநாமம் இதயத்தில் மிளிரவே
- எங்களது கல்லூரி வாழ்க.

ஆனந்த மயமான அன்பு நிறை சூழலில்
ஆகில குலசிறு மணிகள் அனைவோரும் இசைவுகொள
எளிமைபுணர் இளமை செறிகலைகள் அழகுவிரி
ஒளியெங்கணும் காண ஒளியையே ஈகின்ற
- எங்களது கல்லூரி வாழ்க.

கல்லூரியோடு நாம்

உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, மகளிர் கல்லூரி சுவிஸ்சலாந்து பழைய மாணவர் சங்கத்தில் இவ் வருடத்திற்கான தலைமைப் பதவியை நான் வகிப்பதையிட்டு பெருமைப்படுகிறேன்.

1998/2000 ஆண்டுகளில் தான் நாம் இச் சங்கத்தை அமைக்கத் தீர்மானித்தோம். அமைத்தோம். எம் சக்திக்கு அப்பாற்பட்ட காரணிகளால் உடனடியாக சங்கத்தின் நோக்கத்திற்கேற்ப செயற்பட முடியாத சூழ்நிலை உருவாகியிருந்தது. இருந்தாலும் எம்மை வளர்த்தெடுத்த தாய்க்கு மகுடம் சூட வேண்டும் என்று அடி மனதில் கிளர்ந்திருந்த ஆதங்கம்தான் இன்றைய சங்கத்தின் உருவாக்கம். நீண்டகால இடைவெளியின் பின் 2002 ம் ஆண்டு எனது பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. அக் காலத்தில் அங்கு அதிபராயிருந்த திரு.கி.நடராஜா அவர்கள் எனக்கு நீண்ட காலம் பழக்கமானவராக இருந்ததால் பல விடயங்களையும் பற்றித் தெரிந்து கொண்டதோடு அதிபரின் வேண்டுகோளிற்கிணங்க பாடசாலையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்ற ஆதங்கமும் ஏற்பட்.டது. அச்சமயத்தில் பதில் அதிபராக இருந்தவரும் தற்போதைய அதிபருமான திரு.தருமலிங்கம் ஆசிரியரும் அறிமுகமானார். என் பாடசாலை சென்றபோது தீவிரமான யுத்தத்தின் தழும்புகள் பாடசாலையில் பதிக்கப்பட்டிருந்ததை வேதனையுடன் கண்டு கொண்டேன். இத் தருணத்தில் சுவிசுக்கு வருகைதந்திருந்த திரு. வசந்தகுமார் அவர்களின் தொடர்பும் வானவில் நிகழ்விற்கு அத்திவாரமிட்டன. 2006 ம் ஆண்டு திரு.சி கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் முதலாவது வானவில் நிகழ்வு நிகழ்ந்தேறியது. இந் நிகழ்ச்சின் மூலம் தான் பழைய மாணவர்களை ஒருங்கிணைக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் முதல் நிகழ்விற்கு வெளிநாட்டில் இருந்தும் இலங்கையில் இருந்தும் பலரும் சமூகமளித்து நிகழ்ச்சியைப் பெருமையூட்டி யிருந்தார்கள். திரு. தில்லைநடராசா(முன்னைநாள் கல்வியமைச்சின் செயலாளர்), கலாநிதி. வசந்தகுமார், திரு.முத்து இரத்தினானந்தன், திரு.P.தருமலிங்கம் ஆசிரியர், திரு.தி.யோகசாமி ஆசிரியர், திரு.வ.அழகலிங்கம் ஆசிரியர், திருமதி மணி ரீச்சர், திரு த. உதயகுமார், திரு இ.ஜெயராசா, திரு.ம.மோகனதாஸ், செல்வி சீதா வேலுப்பிள்ளை ரீச்சர், திரு.சின்னத்தம்பி எனப் பலரும் வந்திருந்தமை எமக்கு ஒரு உத்வேகத்தை ஊட்டியதாக அமைந்திருந்தது. இதில் திரு.வசந்தகுமார் அவர்களின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்திருந்தது. தற்போது பழைய மாணவர் சங்கங்கள் என வேறு பாடசாலைகளுக்கும் சுவிசில் உருவாக்கப்பட்டுள்ளது. இவை யாவும் நாம் புலம்பெயர்ந் திருந்தாலும் நாட்டின் இனத்தின் மீது கொண்டுள்ள பற்றின் வெளிப்பாடாகவே கண்டு மகிழ்கின்றேன்.

எமது சங்கத்தின் அடுத்த தலைவராக மிகவும் செயற்பாட்டாளராக விளங்கிய திரு.யோகேந்திரா அருண்(பாபு) தெரிவு செய்யப்பட்டு தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றினார். அதைத் தொடர்ந்து பரம்சோதி செல்வச்சோதி அவர்களும் தலைமைப் பொறுப்பை ஏற்று சங்கத்தின் நோக்கம் நிறைவேற சீராக வழிநடத்தினார். இவருக்கு வலது கரமாக யோகசாமி ஆசிரியரின் புதல்வர் கோபு செயற்பட்டார். அதன்பின் பின் எமது பாடசாலைச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான

திருமதி. தர்மகுலராசா நந்திமலர். சுவிர்சலாந்து அரசாங்கத்தில் தற்போது பெரும்பான்மை அமைச்சர்கள் பெண்களாவார்கள். அதற்கு இலக்கணம் வகுத்தாற்போல பெண்களால் வீட்டில் மட்டுமல்ல திட்டமிடல்களிலும் ஆளுமை பேண முடியுமென தனது சேவை மூலம் எமக்கு நிரூபித்துக் காட்டியவா இவர். மிகவும் கண்ணியமான செயற்பாட்டை தளரா மனதுடன் உறுதியாக நிறுவிக் காட்டினார். இக்காலத்தில் காலத்தின் தேவையாகவும் உலகம் பூராவும் பரந்துபட்டு வாழும் பழைய மாணவர்கள் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்ற எமது சங்கத்தின் நோக்கத்திற்கமைய இணையத்தளம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற தனது நோக்கத்தை திரு. வேலுப்பிள்ளை ஞானேஸ்வரன் முன்மொழிந்திருந்தார். அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட பாரிய சேவைக்கு செயல் வடிவம் கொடுத்த பெருமை திரு. இந்திரசித் சிவசோதிலிங்கத்தையே சேரும். அவர் கணணித் துறையில் பெற்றிருந்த தகைமை எமது சங்கத்திறகான உடனடி இணையத்தள உருவாக்கத்திற்கு வழிவகுத்திருந்தது. இங்கு எம்மில் பலரும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் செயற்பாடுகளை அவதானிக்கையில் எமது சங்கத்தின் முதற் செயலாளராக அமர்ந்த செயல் ஆளுநர்தான் திரு.பெரியதம்பி ஜெகநாதன் இவர் சுவிசில் பிரபல்யமான சமூக சேவையாளராகவும், சூரிச் முருகன் ஆலயத்தின் தலைவராகவும் அமைந்துள்ளமை எமது பாடசாலையின் பெயர் விளங்க இன்னோர் காரணமாகின்றது.

'தம்பியுள்ளான் படைக்கு அஞ்சான்' என்ற முதுமொழிக்கு உதாரணமாக எம்மில் அனைவராலும் செல்லமாக அழைக்கப்படும் தம்பி என்ற பதத்திற்குரிய கணேசமூர்த்தி நிர்மலதாசன் தனது ஓய்வு நேரங்களையெல்லாம் சங்க வளர்ச்சிக்காக அர்ப்பணித்து எமக்கெல்லாம் இன் முகத்துடன் செயற்படுபவர். பொறுமைக்கு இலக்கணமாய் பலரின் சாடுதல்களையும் தன்னகத்தே உள்வாங்கி பிறர்மனம் நோகாது பேசும் வல்லமை பெற்றவர் எமது ஆரம்ப காலப் பொருளாளராகவும் தொடர்ந்து செயலாளராகவும் பணிபுரிந்த குழந்தைவேலு ஜெயசீலன் ஒற்றுமையான செயற்பாட்டிற்கு உறுதுணையாக இருந்தவர். நிகழ்ச்சிக் காலங்களில் நிர்வாக ஒழுங்குகளை தகைமையுடன் மேற்கொள்ளும் லோகநாதன் மஞ்சுளா, தெய்வேந்திரன் பரமேஸ்வரி, திருமதி. தேவராசா ஆகியோரையும் அவர்களின் செயற்பாட்டுத் திறனையும் பாராட்டாமல் இருக்க முடியாது. வானவில் நிகழ்விற்கு கடந்த ஆண்டு வரை மண்டபப் பொறுப்புகளை செய்து தந்தவர் திரு ந.லோகநாதன். இப்படிப் பலரும் தங்கள் வளங்களை பாடசாலைக்கு அர்ப்பணித்துச் செயற்படுகிறார்கள்.

1852 ம் ஆண்டு எமது பாடசாலை அ.மி. கல்லூரியும், 1868 இல் உருவான மகளிர் கல்லூரியும் எமது ஊரின் விருட்சங்களாகத் திகழ்கின்றன. அவற்றில் பயின்ற மாணவ மாணவியர்கள் நாடுதழுவிய ரீதியில் பல வல்லுநர்களாக இருந்துள்ளார்கள் இருக்கிறார்கள் என்று நாமும் பெருமைப்படுகிறோம். திரு சண்முகசுந்தரம் ஆசிரியரின் கடந்தவருட சுவிஸ் வருகை எமக்கெல்லாம் ஒரு கொண்டாட்டமாகவும் பெருமையாகவும் அமைந்திருந்தது.

சுவிற்சலாந்து பலஇன மக்கள் கொண்ட ஒரு நாடு. 80 இலட்சம் மக்கள் சனத் தொகையைக் கொண்டதாகும். இதில் கிட்டத்தட்ட 20 இலட்சம் வெளிநாட்டவர் தொகையாக உள்ளது. இங்கு மாநில ரீதியாக தனி நிர்வாக ஒழுங்கு உள்ளதால் எமது அங்கத்தவர்கள் இணைவும் அப்படியே உள்ளது. மாநில ரீதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. செங்காகளன் மாநிலத்தில் எமக்கு உதவியாக

இருப்பவர் நடராஜா யோகநாதன். வயது ரீதியாக ஓய்வு பெற்றாலும் எமக்காக ஓயாமல் உழைத்துக்கொண்டிருப்பவர் திரு. மகாலிங்கசிவம். இவ்விதம் தம்பிப்பிள்ளை சிவம், பரமசிவம், இப்படிப் பலரும் பல இடங்களிலும் இருந்து திரட்டப்படும் முயற்சிகள் வானலையில் வானவில்லில் ஒன்று குவிக்கப்படுகின்றது. தற்போது எமது சங்கத்தின் செயலாளராக திருமதி. விமலா சிவசுப்பிரமணியம் செயற்பட்டு வருகிறார். இவர் சமூக சிந்தனை உள்ள ஒருவராகவும் இங்குள்ள சுவிஸ் தமிழ் பெண்கள் அமைப்பில் நீண்டகால உறுப்பினராக உள்ளார். இன்று பல முயற்சிகளிலும் பங்கெடுத்துக் கொண்டு செயற்படும் திரு. சந்திரசேகரம் இரவிச்சந்திரன் உபதலைவராக செயற்படுவது இன்றைய சூழ்நிலையில் செயலூக்கம் உற்றதாக அமைகின்றது. பலரையும் பல திக்குகளுக்கும் சென்று பலரையும் சந்தித்து இணைத்துக்கொள்ளும் ஆற்றல் இவரின் தனித்தன்மையாக விளங்குகிறது. பலரின் ஒத்துழைப்புகளும் தான் வானவில் நிகழ்வு சுவிசில் பெயர் விளங்கக் காரணமாகின்றது. இதற்கு துணையா நிற்கும் முக்கியமானவர்களில் ஒருவர் கந்தசாமி இராதாகுமார். இவர் ஓய்வு உறக்கம் இன்றி உழைக்கும் ஒரு வல்லுனர்.

முக்கியமாக இன்று எமது பழைய மாணவர் சங்கம் சுவிசில் அமைந்திடவும் எமது கல்லூரியின் பெயரளவில் நாம் அறிந்து கொண்ட கல்விமான்கள் பலருடனும் நாம் நேரடியாகப் பழகும் சூழ்நிலையையும் ஏற்படுத்தி எதுவும் முடியும் என சுவிற்சலாந்தில் விளங்கும் ஒருவராக இருக்க கணபதி துணை என நாம் துணிந்து நிற்க உதவுபவர்தான். திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை. இவ்விதம் இன்னும் பலர் இலைமறை காயாக வாழ்ந்தாலும் அனைவரின் ஆற்றல் மிகு உழைப்பையும் நமது மகிழ்ச்சிக்கும் கல்லூரி வளர்ச்சிக்கும் நாடி செயற்படுகின்றது உடுப்பிட்டி பழைய மாணவர் சங்கம். வானவில் மலர் அழகுடன் பொலிவுற ஆக்கங்கள் தந்தவர் பலர். பொருளுதவி செய்த வர்த்தகர்கள், பொது மக்கள் என உள்ளார்கள் பலர். எல்லாவற்றிற்கும் மேலாக அவற்றினை தொகுத்து அழகான வானவில் மலராக எங்கள் கைகளில் பெறச் செய்த திரு. தில்லை நடராஜா அவர்கட்கும் திரு. வித்தியாதரன் அவர்கட்கும் என்றும் எமது நன்றிகள்.

'கற்றோர் சமுதாயமே எதிர்காலத்தின் விருட்சம் அவ் விருட்சத்தை நோக்கி நகர்ந்திட ஒன்றுபட்டு உழைத்திடுவோம்"

வி. இரத்தினகுமார்
தலைவர்
உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
சுவிற்சலாந்து கிளை.

சொந்த மண் வாசனைதரும் சந்தோஷம்

உடுப்பிட்டி ஆண்கள் பாடசாலை, பெண்கள் பாடசாலை இவை இரண்டும் எமது கிராமங்களின் அறிவுக் கண்கள். கல்வியை மட்டுமல்லாது ஒழுக்க நெறியையும், எமது பண்பாட்டு விழுமியங்களையும் கற்பிக்கின்றன. "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக(கற்கத் தகுந்த நூல்களை குற்றமறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற பின்பு கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்கவேண்டும்) என்ற வள்ளுவரின் வாக்கிற் அமைய எமது கல்லூரிகளில் கல்வி கற்ற கல்விமான்கள் பலர் இருப்பது எமக்கும், அடுத்த தலைமுறையினருக்கும் ஓர் எடுத்தக் காட்டாகும். நாம் புலம் பெயர்ந்திருந்தாலும் எமது மண்வாசனையில் இருந்து விடுபடாது கல்விச் செல்வத்தின் மகிமையை உணர்ந்து பழைய மாணவர் சங்க சுவிஸ்கிளை நிறுவப்பட்டு அதன் ஊடாக நாம் கல்வி கற்ற கல்லூரிகளிற்கு எம்மால் இயன்ற பணியை செய்வதற்கு வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பழைய மாணவர் சங்க சுவிஸ்கிளை தலைமைப் பதவியை வழங்கி அதன் ஊடாக நான் கற்ற கல்லூரிகளிற்கு என்னால் இயன்ற பணியைச் செய்வதற்கு அரிய வாய்ப்பினை நல்கிய சுவிஸ்கிளை நிர்வாகத்தினருக்கும், அது சார்ந்த எல்லோருக்கும் இம்மலரின் ஊடாக எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இது என் வாழ்நாளில் கிடைத்த ஓர் அரிய பாக்கியமாகக் கருதுகிறேன்.

நந்திமலர் தர்மகுலசிங்கம்
முன்னாள் தலைவி

வாழ்க வானவில்

"ஆயிரம் கை மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை" என்பது போல ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து ஐரோப்பாவில் வாழ்ந்தாலும் பாரம்பரிய கலைகளைப்பேணி அக்கலைகளைத் தமது சிறார்களினூடாக பாதுகாத்து பெருமிதம் கொள்கிறார்கள். அந்த வகையில் நான் உடுப்பிட்டி அயற் கிராமமாகிய வல்வெட்டியில் பிறந்து வழர்ந்து ஆரம்பக் கல்வியை அங்கே கற்று பின் உடுப்பிட்டி மகளீர் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து கற்றேன். அப்போது அதிபராக இருந்த செல்வி மான், திருமதி. இராஜேந்திரசிங்கம் கணித ஆசிரியையாகவும் செல்வி முத்து உடற்பயிற்சி ஆசிரியையாகவும் திருமதி நீலகண்டன் தமிழ் ஆசிரியையாகவும் மற்றும் பாட ஆசிரியர்களையும் மறக்க முடியாது. அவர்களின் முயற்சியை நான் இடம் பெயர்ந்தாலும் இந் நாட்டில் எமது தாய் மொழியாம் தமிழை இங்கே பிறந்து வளர்ந்த சிறார்களுக்கு கற்பித்து வருகிறேன். அவர்கள் நன்றாக தமிழ் மொழியை ஆர்வமாகப் படித்து வருகிறார்கள். அத்துடன் இங்கே நடைபெறும் தமிழ்ப் பரீட்சையில் பங்கு பற்றி நல்ல பெறுபேறு பெறுகிறார்கள். நாம் இங்கே இடம் பெயர்ந்து வந்தாலும் நாம் படித்த பாடசாலையை மறக்காமல் ஒங்வொரு வருடமும் நடைபெறும் வானவில் நிகழ்விற்கு எம்மால் இயற்றளவு பங்களிப்பு செய்வேன்.

திருமதி பரமேஸ்வரி (பவானி) தெய்வேந்திரம்
முன்னாள் செயலாளர்
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி
தமிழ் ஆசிரியை
சூரிச் - சுவிஸ்

International Forum
Of
UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE
&
GIRLS' COLLEGE PPA

International Co-ordinator
Dr. T. Vasanthakumar
Canada

International Representatives:

Mr. S. Thillainadarajah
Sri Lanka

Mr. S. Kanapathipillai
Switzerland

Mr. R. Jeyarajah
London, UK

Dr. M. Thangarajah
Dr. S. Jeyaseelan
Australia

Dr. Geetha Raguparan
United States of America

Mrs. Selvarani Shanthakumar
France

Mr. V. Alagalingam
Germany

Mr. N. Nithiyananthan
Norway

Mr. T. Vijayakumar
Newzealand

சர்வதேச அரங்கிலே.....

வடமராட்சிக் கல்வி பாரம்பரியத்தில் ஊற்றுக்காலகளான உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி என்பவற்றின் பெருமையினைப் பட்டைதீட்டி, மெருகேற்றிப் பிரகாசிக்க வைக்கும் சுவிஸ் வானவில் நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் அகமகிழ்வடைகின்றேன்.

கனடாவில் ஆரம்பித்து, 2005ம் ஆண்டு ஆகஸ்ட் 1ம் திகதி முதல் சர்வதேச பழைய மாணவர் சங்க ஒன்றியமாக சர்வதேசத்திற்கும் வியாபித்துள்ள வானவில் நிகழ்வு ஒர அர்த்தம் பொதிந்த நிகழ்வாகும். பலவர்ணங்களும் இணைந்து வானவில்லாகக் காட்சியளிப்பது போல, பல்நாட்டுப் பழைய மாணவர்களும் இணைவதும் வானவில் போன்றதே.

வானவில்லைக் கண்டதும் சிறார்கள் மழையின் வருகையின் அடையாளமாகக் கொள்வர். அதேபோல், எமது கல்லூரிகளின் வானவில் நிகழ்வு எனக் கேட்டதும் எமது கல்லூரிச் சிறார்கள் நிதி மழையின் வருகையின் அடையாளமாகக் கொள்வது, வழக்கமாகிவிட்டது! ஆம்! கல்லூரிக் காலங்களில் வகுப்பு நிகழ்வுகளிலும் மற்றைய விழாக்களிலும் பங்குபற்றி உற்சாகத்தோடு காரியமாற்றிய அதே மாணவர்கள் கல்லூரிக் காலம் முடிந்த பின்னும், வேறு பாதையில் பிரிந்து வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் ''வானவில்'' என்ற பெயரால் சர்வதேச ரீதியில் ஒன்றாயிணைந்து, கல்லூரிகட்குத் தேவையான நிதி திரட்டி, புலம்பெயர் மண்ணிலே தரமான கலை வளர்த்து தரைமட்டமாக்கப்பட்ட வகுப்பறைகளை, கிடுகுக் கொட்டில்களாக மாற்றி, இன்று மாடிக் கட்டிட வகுப்பறைகளாக மாற்றியமைத்து, மாணவர்களை கல்வியிலும் மற்றைய துறைகளிலும் பிரகாசிக்க வைக்கும் பணிக்குப் பின்புலமாகவிருந்து செயற்படும் பழைய மாணவர் சங்கங்களின் செயற்பாடுகள் குறித்துப் பெருமைப்படுகின்றேன்.

கனடா, கொழும்பு, சுவிஸ், இலண்டன் என்ற வரிசையில் இவ்வருடம் முதல் அவுஸ்திரேலியாவும் இணைந்திருப்பது எமது ஒற்றுமைக்குப் பலம் சேர்க்கின்றது. சர்வதேச ரீதியில் கிளைச்சங்கங்கள் உருவாக்கி, இச்சங்கங்களுக்கிடையே தொடர்புகளை யேற்படுத்த, கல்லூரிகளின் அபிவிருத்தியை மேம்படுத்துவதில் சர்வதேச பழைய மாணவ சங்க ஒன்றியம் நன் பணிகளைத் தொடர, சுவிஸ் கிளையினருடைய வளர்ச்சியும் அது கல்லூரிகட்கு வழங்கி வரும் ஆதரவும், வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்!.

அன்புடன்

த. வசந்தகுமார்

85, Havagal Crescent, Markham, Ontario L3P 7G6 Canada Tel: 905.415.2244
www.uamcollege.com, www.ugirlscollege.com Email : info@uamc.ca

கனடாக்கிளை - 2011

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்க செயற்குழு

UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE & GIRLS' COLLEGE PPA

Canada
Est. 1989

Patron
Mr. E. Srinathan

President:
Mrs. Indra Kethees

Vice Presidents:
Dr. T. Vasanthakumar
Mr. P. Navanathan

Secretary:
Mr. S. Sundaramoorthy

Asst. Secretary:
Mrs. J. Selvarathinam

Treasurer:
Mrs. K. Arulmoli

Asst. Treasurer:
Mr. S. Sukumar

Committee:
Mr. N. Kamalanathan
Mr. Kanaha Manoharan
Mr. S. Balendran
Mr. M. S. Amalkumar
Mr. T. Navaratnam
Mrs. R. Kulaveerasingam
Mr. B. Jeyakumar
Mr. R. Santhanathan

Editor:
Mr. M. S. Perinbanayakam

Auditor:
Mr. M. Mohanathas

Board of Trustees:
Miss. Seetha Veluppillai
Mr. M.S. Perinbanayakam
Mr. V. Puvanachandran
Mr. V. Sornalingam
Dr. T. Vasanthakumar

வாழ்த்துச் செய்தி

அன்புடையீர்!

வானவில் விழாவிற்கு வாழ்த்துச்செய்தி எழுதுகின்ற வேளையில் நான் சுவிஸ் நாட்டில் வாழும் எங்கள் கல்லூரிகளின் பழைய மாணவராகிய நீங்கள் கல்லூரிகளின் பெயரால் ஒன்றிணைந்து வானவில் நிகழ்ச்சியை நடாத்துவதோடு, எமது கல்லூரிகளின் வளர்ச்சியிலும், நலன்களிலும் காட்டிவருகின்ற முனைப்பையும் கண்டு மிகவும் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

எனது மனதில் பசுமரத்தாணியாக நிறைந்திருக்கும் கல்லூரி நாட்களை மீண்டும் நினைவு கொள்ளுவதற்கும், தாய் மண்ணில், புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் கல்லூரி உறவுகளுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்கும் பலமாக அமைத்தது வானவில் என்றால் மிகையாகாது. எமக்கு அறிவைப் புகட்டிய பாடசாலைகளின் பெருமையை நீங்கள் வானவில் நிகழ்வு மூலம் புலம்பெயர் நாட்டில் அனைவருக்கும் பறைசாற்றுவதோடு, எமது கலாசாரத்தையும், தமிழ் மொழியையும் அடுத்த தலைமுறையும் அறிந்து கொள்ளும் வகையில் ஆண்டுதோறும் தரமான நிகழ்ச்சிகளுடன் கட்டுக் கோப்புடன் வானவில் நடாத்துவது மிகச் சிறப்பானதாகும். அத்துடன் கல்லூரிகளின் இன்றைய தேவைகளை நன்கு உணர்ந்து வருடா வருடம் நீங்கள் அளித்து வருகின்ற உதவிகளும் நன்றியோடு பாராட்டப்பட வேண்டியதாகும்.

கல்லூரி அன்னைக்கு பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளை ஆற்றும் பணி தொடர மனதார வாழ்த்துவதோடு, வானவில் சிறப்புற எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்

இந்திரா கேதீஸ்

145 Brenda Crescent, Scarborough, Ontario, M1K 3C8 Canada
Tel: 416 261 0866

J/UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE

Valvettiturai

ESTD 1852

Principal
MR. K. THARMALINGAM
B.Sc, Dip in Edu.

Deputy Principal
MRS. V. KAILAIYANGIRISELVAM
Maths (Trd)

வாழ்த்துச் செய்தி

தாயத்து நினைவுகளோடு புகலிட தேசங்களில் வாழ்ந்துவரும் எண்ணற்ற இதயங்களின் வாழ்த்துதல்களே எங்கள் கல்லூரியின் சுவர்களில் எதிரொலிக்கின்றது. கூர்மையான அவதானிப்போடு தாம் பயின்ற கல்லூரித் தாயின் பாதக் கமலங்களை விழிகளில் ஒற்றிக்கொள்ளத் துடிக்கும் புலம்பெயர் உறவுகளை எண்ணும் போது இதயமுகடுகளில் இன்பச் சேவல்கள் கூவுகின்றன.

பண்பாட்டின் பிரதிபலிப்பாக, கலாசாரத்தின் அச்சாணியாக தமிழ்தம் வாழ்வியலின் நிழற்பிரதியாக "வானவில்" நிகழ்வினை நடாத்தி சஞ்சிகையினை வெளியிடுவ தனையிட்டு அகம் மகிழ்கின்றோம். ஆல விருட்சமாக அழகியல் கலைகளை வளர்த்தெடுக்கும் போதுதான் விழுதுகளான வெளிச்சக்கோடுகள் யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும் விழுகின்றன.

நவீன புலமைப் புலங்களின் நுண்ணிழைகளின் வழியே பயணிக்க வைத்த உங்களின் செயற்றிறன்களை வாழ்வின் இறுதிமூச்சுவரை நினைத்திருப்போம். தேசங்களால் பிரிந்து சுவாசங்களால் இணைந்து இறுதி மூச்சுவரை எங்களுக்காக வாழும் உங்களின் சிந்தனைகளையும், செயல்வடிவையும் வாழ்த்துகின்றோம்.

K.தர்மலிங்கம்
அதிபர்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

தொடர்ந்து சிறப்புடன் வளர்க

சங்கத்தை கட்டுக்கோப்போடு நடாத்தி, அங்கத்தவர்களை செம்மையாக ஒன்று சேர்த்து, ஒருவரோடு ஒருவர் கருத்து மோதல்களை மறந்து, கனிவுடன் ஒன்றாக இணைந்து, விட்டுக் கொடுத்து, வீண் விவாதங்களைத் தவிர்த்து, ஏற்றத் தாழ்வுகளைச் சமன்படுத்தி இவ்வாறு எத்தனையோ வேறு பிரச்சனைகளுக்கு அற்புதமான தீர்வு கண்டு,

வருடாந்த வானவில் நிகழ்ச்சியை "ஆகா" என்று எல்லோராலும் புகழக் கூடிய வகையில் நடாத்தும் எமது சுவிஸ் கிளையை, அதன் அங்கத்தவர்களை பாராட்டி வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். பெருமிதம் கொள்கிறேன்.

மேலைத்தேசங்களில் எமது இனத்தவர்களுக்கிடையே எமது கலாச்சாரம் படிப்படிப் படியாக அருகிக்கொண்டு போகும் இக்கால கட்டத்தில்

எங்கள் கல்லூரி அன்னையரின் பிள்ளைகளது பிள்ளைகளுக்கு, இவ்வானவில் நிகழ்ச்சிகள், எமது கலாச்சாரம் தொடர்ந்து உயிர்ப்புடன் இருக்க வழிவகுக்கும் என்பதை நினைக்கும் போது மனம் குளிர்கிறது. அளவு கடந்த மனநிம்மதியைத் தருகின்றது.

எங்கள் கல்லூரிகளின் வளர்ச்சியைத் தொய்யவிடாது, இறுக்கி அணைத்துச் செல்லும் சுவிஸ்கிளைக்கு, தாய் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் நான் பேருவகை அடைகின்றேன்.

க.சண்முகசுந்தரம்
தலைவர்
உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபரும் பழைய மாணவர் சங்கத்தலைவியுமான திருமதி. லி. நே. யோசெப் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

பிறந்த மண்ணின், பெற்ற கல்வியின் கல்விக் கூடங்களை நினைவு கொண்டு, வானவில் நிகழ்வினை வருடந்தோறும் கொண்டாடும், எம் இனிய பழைய மாணவர்கள், தமது இரு கண்களாக, யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியையும் மதித்து, தாம் பெற்ற கல்வியின் பூரிப்பை வெளிப்படுத்துவதாக அமைகின்றது "வானவில்" நிகழ்வு. இந்நிகழ்வு இனிதே நடைபெற வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வானத்தில் தோன்றும் வானவில் ஏழு வர்ணங்களைக் காட்டுகின்றது. எமது பாடசாலை அன்னையின் பிள்ளைகள் தமது கல்வி, கலை, கலாச்சாரங்களை வானவில் வர்ணஜாலங்களாக வெளிப்படுத்துவதை நினைத்து அவர்களை மனதார வாழ்த்துகின்றேன்.

நடந்து வந்த பாதையைத் திரும்பிப்பார்க்கின்ற அரிய பணியினைச் செயற்படுத்தும் விதமாக, சுவிஸ் பழைய மாணவர்கள், எமது பாடசாலையின் பௌதீகவள, கல்வி அபிவிருத்திப் பணிகளில் தம்மை ஈடுபடுத்தி, அதற்கான பொருளாதார வளத்தினை உவந்தளிப்பது எமது கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றுகின்றது என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

வானவில் நிகழ்வினை, யாவரும் ஒருங்கிணைந்து சிறப்பான முறையில் நிகழ்த்துகின்ற எமது பழைய மாணவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில், எமது பாடசாலை மாதாவின் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

திருமதி. லி. நே. யோசெப்
அதிபர்
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE

Past Pupils' Association - Australia Branch

சிட்னி (அவுஸ்திரேலியா) கிளையின்
வாழ்த்துச் செய்தி

வானவில் 2011 நிகழ்ச்சியைக் கொண்டாடும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியினதும் உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியினதும் பழைய மாணவர் சங்கத்தின் சுவிஸ் கிளைக்கு எமது கிளையின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய கால கட்டத்தில் இலங்கை வாழ் தமிழ் மக்கள் தங்கள் கல்வி கற்கும் ஆற்றலையும் கல்வித் தராதரத்தையும் விருத்தி செய்வத மிக முக்கியமாகிறது. இந்த முன்னேற்றத்திற்கு உலகெங்கும் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் ஆற்றும் பணி அளப்பரியது.

வரலாற்று ரீதியாக கல்வியின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் தமிழர்கள் நன்றாக உணர்ந்தவர்கள். எனவேதான் தங்களது உணவுக்கு அடுத்தபடியாக தமது பிள்ளைகளின் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் கல்வியின் முக்கியத்துவத்தை கூறும் பாரதியாரின் பாடல் வரிகள் என நினைவிற்கு வருகின்றது.

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றுதல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
இன்ன யாவினும் ஆயிரம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

நீண்டகாலமான எமது பாடசாலைகளின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் முன்னின்று உழைத்து வரும் சுவிஸ் கிளையின் அங்கத்தவர்களும் நிர்வாகிகளும் பெரிதும் பாராட்டுக்குரியவர்கள்.

இந்த ஆண்டு மாசி மாதத்தில் சிட்னியில் நாற்பது அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது கிளை எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை செலுத்தத் தொடங்கியுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன்.

பா.மாணிக்கவாசகர்
தலைவர்,
சிட்னி (அவுஸ்திரேலியா) கிளை

எனது ஊரும் அதன் சிறப்பும்.



வடமராட்சியில் உடுப்பிட்டி என்றாலே அனைவருக்கும் நினைவில் வருவது இரு கல்லூரிகளுமே. எனது ஊரின் சிறப்புக்குக் காரணம் இரு கண்களாக விளங்கும் உடு.அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் உடு. மகளிர் கல்லூரியுமே. இவற்றை விட வயல்வெளிகளும் கோவில்களும் பல்தொழில் விற்பன்னர்கள் வாழும் இடம் என்பதாலும் உடுப்பிட்டி பெருமை பெறுகின்றது.

இவற்றுடன் நமது அயல் ஊர்களுமே நம் ஊருக்குப் பெருமை சேர்க்கின்றன. வல்வெட்டித்துறை, வல்வெட்டி, கெருடாவில், மண்டான், நவின்டில், கம்பர்மலை, கரணவாய் ஆகிய அயற்கிராமத்தவர்கள் நம் கல்லூரிகளில் கல்வி கற்க வருவதாலும் நம்மூருக்குப் பெருமையுண்டு.

நாம் எல்லோரும் கல்லூரிகளில் ஒற்றுமையுடனும் ஒழுங்குடளும் சேர்ந்து பழகும் பண்புடனும் படித்தமையாலேயே இன்று எமது கல்லூரிகளின் பழைய மாணவர்கள் பல்வேறு நாடுகளிலும் ஒற்றுமையுடன் பழைய மாணவர் சங்கத்தை நடத்தி வருகின்றனர். நாம் மென்மேலும் எங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து எமது பாடசாலைகளை முன்னேற்றுவோம்.

என்றும் நன்றியுடன்
ந.புஷ்பராஜா
பொருளாளர்.

கனடாவிலிருந்து சீதா வேஞப்பிள்ளை

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, அமெரிக்கன் மிஷன் கல்லூரி இரண்டிலும் கல்வி கற்று, பழைய மாணவர் சங்க தாய்ச்சங்கத்திலும் அங்கத்துவம் வகித்தவர். கனடா, சுவிஸ், லண்டன் வானவில் நிகழ்வில் கலந்து கொண்டவர். இவ்வாண்டும் 'சுவிஸ்' வானவில் வெற்றிபெற வாழ்த்துகிறார்.

லண்டனிலிருந்து பொறியியலாளர் இராசையா ஜெயராஜா

''ஊரில் நாங்கள் வாழ்ந்த மகிழ்வான வாழ்வை-பெற்றுக் கொண்ட பெறுமதியான கல்வியை நினைவூட்டும் வகையில் கனடா, லண்டன், சுவிஸ் என ஒவ்வொரு நாட்டிலும் வானவில் கண்டுகளித்தேன் என வாழ்த்தி இவ்வாண்டு சுவிஸ் வானவில் நிகழ்வில் மீண்டும் கலந்து கொள்கின்றார்.

நியூசிலாந்திலிருந்து த.விஜயகுமார்

ஆளுக்கொரு பக்கம் வாழ்வை அமைத்துக் கொண்டாலும் ஆளாக்கி அறிவூட்டி, ஆளுமையை வளர்த்த அமெரிக்கன்மிஷன் கல்லூரியை நினைத்து தன் நண்பர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கின்றார்.

இலங்கையிலிருந்து கே.சபாரத்தினம்

''எனது இனிய கல்லூரி நண்பர்கள் எங்கள் கல்லூரியை நினைத்து நட்பை வளர்க்கும் நோக்குடன், கல்லூரிக்கு உதவி செய்யும் எண்ணத்துடன் எடுக்கும் வானவில் நன்கு சிறக்க வாழ்த்துகின்றேன்'

- **கே.சபாரத்தினம்**
செயலாளர்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கொழும்பு

லண்டனிலிருந்து.....

''சுவிஸ் வானவில் மலரும் வானவில் விழாவும் நினைவைவிட்டு நீங்காதிருக்க வாழ்த்தி மகிழ்கின்றேன்''

ஸ்ரீதரன் சந்திரவிமலா
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவி

பயனுள்ள பண்பாட்டுக் கலைவிழா

பயனுள்ள கல்வியைத்தந்த கல்விக்கூடங்களின் பெயரால் ஒன்று கூடி கலை பண்பாடு வளர்த்து, நிதியும் திரட்டி நீண்ட நோக்குடன் செயல்பட்டும் நண்பர்களின் வானவில் வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

த.உயகுமார் (ரவி)
லண்டன்

கொழும்பிலிருந்து...

''சுவிஸ் வானவில் நிகழ்வால் ஆனந்தம் எங்கெங்கும் என்றென்றும் பொங்க வாழ்த்துகின்றேன்.

உடுவை எஸ்.தில்லைநடராஜா
தலைவர்
பழைய மாணவர்சங்க கொழும்பு கிளை



சுவிஸிலிருந்து பாபு - கோபு - சோதி - ஜெகன் - மகான்
என பலர் வாழ்த்துகின்றபோதும் நேரநெருக்கடியால் முழுமையாக
இணைக்க முடியவில்லை.

- மலர்க்குழுவினர் -

வானவில் அட்டையில்...

மேலிருந்து வலப்பக்கமாக வட்டமாக படங்கள்....

எஸ்.எஸ்.செல்வத்துரை
கே.ரி.ஜோன்
எஸ்.றெபர்ட் நவரத்தினம்
கே.சிதம்பரப்பிள்ளை
எஸ்.வினாயகமூர்த்தி
வெ.தி.செல்வரத்தினம்
ந.அனந்தராஜ்
எஸ்.தில்லையம்பலம்
செல்வி.கிருபைமலர்.மதியாபரணம்
செல்வி.கிரேஸ்.மங்கையர்க்கரசி
செல்வி.றூத்.ஜெயமணி மேன்
திருமதி.கனகமணி இரத்தினசாமி
திருமதிபாக்கியலஷ்மி இராஜேந்திரசிங்கம்.

சுவிஸ்
வானவில் 2011

காலம்

19.06.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00மணி

இடம்

Gemeinds chaaftzentrum Unteraffoltern
Bodenacker 25
8046 Zurich

நிகழ்ச்சி நிரல்

- மௌன வணக்கம்
- மங்கல விளக்கேற்றல்
- கல்லூரி கீதங்கள்
- வரவேற்புரை ☞ சந்திரசேகரம் ரவிச்சந்திரன்
- தலைமையுரை ☞ வி.இரத்தினகுமார்
- விருந்தினர் உரை ☞ கலாநிதி த.வசந்தகுமார் (கனடா)
  - ☞ இ.ஜெயராஜா (பொறியியலாளர், லண்டன்)
  - ☞ வை.அழகலிங்கம் (பொறியியலாளர்,ஜேர்மனி)
  - ☞ இ.முத்துரத்தினானந்தன் (பொறியியலாளர்,இலங்கை)
  - ☞ உடுவை எஸ்.தில்லைநடராசா (இலங்கை)
- நடனம்
- நாடகம்
- விவாத அரங்கு
- நகைச்சுவை நிகழ்வுகள்
- நன்றியுரை ☞ சி.விமலாம்பாள்

சுவிஸ் வானவில்

சுவிஸ் வானவில் 2006 முதல் தொடர்கிறது.. முழுமையான காட்சிகள் காண இணையவும்
www.uduppiddy-amc-gs-ppa.ch

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி தகவல்கள் சில

Fழத்திருமணி நாட்டில் பெண்களுக்கென தனியாக இயங்கி வரும் பாடசாலைகளினுள் வடமாகாணத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ள யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி குறிப்பிடத்தக்கது. அமெரிக்க மிஷனறியினரால் ஆரம்பிக்கப்பட்டு ஆளுமை மிக்க பல அதிபர்களால் வழிநடாத்தப்பட்டு இன்று வரை தனக்கென தனி முத்திரை பதித்துக் கொண்ட இக்கல்லூரியின் வரலாற்றை, அதன் சாதனைகளை ஒருமுறை மீட்டுப் பார்ப்பதில் இக்கல்லூரியின் பழைய மாணவி என்ற வகையின் நான் பெருமிதமடைகின்றேன்.

இவ்வகையில் 1868இல் 17 மாணவிகளுடன் அமெரிக்கப் பெண்மணியான செல்வி. ஹரியட் ரவுண்ஸன்ட் அம்மையார் தலைமையில் விடுதிப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. எமது பாடசாலை மாணவியர் 1872ஆம் ஆண்டு முதல், அரசினரால் நடாத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றினர். 1882 இல் ரவுண்ஸன்ட் அம்மையார் கர்த்தருக்கள் ஆறுதல் பெற்றுக்கொள்ள திருமதி R.C. ஹேஸ்ரிங்ஸ் அம்மையார் 1882இல் கல்லூரியை பொறுப்பேற்றுக் கொண்டார். 1891 இவ் இவர் அமெரிகக்கா செல்ல, அவ்விடத்திற்கு திருமதி. பெல், திருமதி. சிமித் அம்மையார் முதலியோர் நியமிக்கப்பட்டு சிறப்பாக வழிநடத்தினார். இவர்களின் பின் 1895 இல் முதலியோர் நியமிக்கப்பட்டு சிறப்பாக வழிநடத்தினார். இவர்களின் பின் 1895இல் பிறவுண் தம்பதியினர் கல்லூரியைப் பொறுப்பேற்றதுடன் அதன் தரத்தை உயர்த்துவதற்காகக் கல்லூரியில் ஆங்கிலம் கற்பிக்கும் வசதியை ஏற்படுத்தினர். 1905இல் திரு. பிறவுண் அவர்களின் மறைவினைத் தொடர்ந்து கல்லூரியின் வளர்ச்சி தேக்கமடைந்தது. இதன் காரணமாக இக்கல்லூரி உடுவில் மகளிர் கல்லூரியுடன் இணைந்து செயற்பட வேண்டி ஏற்பட்டது. மீண்டும் 1908 இல் கனம் டிக்சன் தம்பதியினரும் தொடர்ந்து திருமதி. ஹிச்கொக் அவர்களும் கல்லூரியைப் பொறுப்பேற்றுக் கொண்டமையால் மீண்டும் பாடசாலைச் செயற்பாடுகளில் உத்வேகம் காணப்பட்டது.

1881 தொடக்கம் 1896 வரை ஆங்கிப் பரீட்சைகள் உயர்ந்த தரத்துடன் நடாத்தப்பட்டன. 1912இல் பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்ட உவார்டுட் அம்மையாரின் காலத்தில் 564 மாணவிகள் கல்வி கற்று 265 பேர் நல்ல முறையில் வெளியேறினர். இக்காலத்தில் 31 ஆசிரியர்கள் கல்வி கற்பித்தனர். இவ்வாறாக பல்வேறு இடையூறுகளின் மத்தியிலும் கல்விச் சுடர் வீசிய இக்கல்லூரி 1981 ஆடி 19ம் திகதி தனது அரை நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடியது. இக்கொண்டாட்டத்தின்போது பாடசாலையின் தலைவியாக W.E ஹிச்கொக் அம்மையார் இருந்தார். அவரைத் தொடர்ந்து திரு.திருமதி மில்லர் ஆகியோர் பாடசாலைப் பொறுப்புக்களை ஏற்று நடத்தினர். இவர்களின் தன்னலமற்ற சேவையினால் இப்பிரதேசப் பெண்களிடையே கல்வி தொடர்பான விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது.

இவர்களைத் தொடர்ந்து செல்வி. மத்தாய் கேரள நாட்டுப் பெண்மணி பாடசாலையைத் தலைவியாக பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது காலத்தில் தொழில் முன்னிலைக் கல்வி (Juniour Demostic Science) என்ற கல்வி அமைப்பு விரிவுபடுத்தப்பட்டது. இவரது காலத்தில் பண்டிதர் ஜவஹர்லால் நேரு, செல்வி இந்திராநேரு (அன்று), விஜயலக்சுமி பண்டிட் ஆகியோர் இங்கு வருகை புரிந்ததாக இக்கிராமத்தின் முதியவர்கள் மூலம் அறிய முடிகின்றது. மேலும் மாணவிகளின்

வாசிப்பு பயிற்சியைத் தூண்டும் நோக்கில் நூல்நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டதுடன் அழகான தமிழ், ஆங்கில நூல்களும் தருவிக்கப்பட்டன.

செல்வி மத்தாய் அவர்களைத் தொடர்ந்து செல்வி மதியாபரணம் அவர்கள் பாடசாலை அதிபராக கடமையேற்றார். முதன்முறையாக ஒரு சுதேசியின் கட்டுப்பாட்டின் கீழ் எமது பாடசாலை நிர்வகிக்கப்பட்டது. இக்காலத்தில் ஆங்கிலமொழி மூலம் மாணவர்களில் 13பேர் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றி அவர்களில் 12பேர் சித்தியடைந்தனர். மாணவிகளிடையே கலைத்திறனை மேம்படுத்த வேண்டுமென்ற இவரது பெருமுயற்சியினால் பெரியமண்டபம் ஒன்றும் இக்காலத்தில் அமைக்கப்பட்டது. அத்துடன் இவரது காலப்பகுதியில் எமது பாடசாலை மாணவியர் கூடைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணத்திலேயே சிறந்த குழுவாகத் தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டிக்காகக் கொழும்பு சென்றனர் இக்குழுவிற்குப் பயிற்சி அளித்த பெருமை திருமதி றோஸ்மலர் மதியாபரணம் அவர்களையே சாரும்.

1946இல் செல்வி ஜீ.எம்.லீ. வன்னியசிங்கம் அவர்கள் எமது பாடசாலை ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டமையைத் தொடர்ந்து பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. இருமொழிப் பாடசாலையாக இருந்த எமது பாடசாலை ''உடுப்பிட்டி மகளிர் ஆங்கிலப் பாடசாலையாக" மாற்றம் பெற்றது. மின்சாரப் பாவனையைக் கிராம மக்களே அறிந்து கொள்ளாத நிலையில் பாடசாலைக்கு மின்வசதியும் ஏற்படுத்தப்பட்டது. மேலும் 100 x 200 சதுர அடி பரப்பினைக் கொண்ட பிரதான கட்டடம் அமைக்கப்பட்டது. 1954இல் ஒழுங்கு செய்யப்பட்ட ''காணிவல்" களியாட்ட விழாவின் மூலம் திரட்டப்பட்ட நிதியினைக் கொண்டு சகலவசதிகளும் கொண்ட இரசாயன ஆய்வுகூடம் ஒன்றுக்கான அடிக்கல் அவ்வருடம் கார்த்திகை மாதம் 13ம் திகதி அன்றைய அமெரிக்க தகவல் தொடர்பு இயக்குநர் Mr.G.Huntington Damon அவர்களால் நாட்டப்பட்டது. இடைநிலைப் பாடசாலைக்கட்டடங்களும் இவரது காலத்தில் புனரமைக்கப்பட்டன. நவீன வசதிகளுடன் கூடிய மனையியல் ஆய்வுகூடமும் அமைக்கப்பட்டது. பாடசாலையில் விழாக்களை நடாத்துவதற்கு கல்லூரி மண்டபம் போதாமையால் திறந்த வெளியரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டது. நூல்நிலையமும் இக்காலத்தில் விஸ்தரிக்கப்பட்டது.

பௌதிக வளவிருத்தியுடன் மட்டும் நின்றுவிடாது இணைப் பாடவிதானச் செயற்பாடுகளும் இவரால் முன்னெடுக்கப்பட்டன. இவ்வகையில் 'பிருத்விராஜ்' என்ற வரலாற்று நாடகம் மாணவிகளால் நடிக்கப்பட்டு யாழ் நகர மண்டபத்தில் மேடையேற்றப்பட்டதுடன் பலரது பாராட்டையும் பெற்றுக் கொண்டது. அத்துடன் நின்று விடாது கொழும்புத் திட்டக் கண்காட்சியிலும் எமது பாடசாலையின் நடனக்குழு பங்குபற்றி முதற்பரிசையும் தட்டிக் கொண்டது.

உடற்பயிற்சியிப் போட்டிகளிலும் மாவட்டநிலையில் பல பரிசில்களை எமது கல்லூரி பெற்றுக் கொண்டது. இலங்கை வானொலியினால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி, வெண்பா, வாசிப்புப் போட்டி, குறுவினாப்போட்டி (ஆங்கிலத்தில்) ஆகியவற்றிலும் எமது மாணவியர் கலந்து கொண்டு கல்லூரித் தாய்க்கும் பெருமை சேர்த்தனர். சாரணீயப் பயிற்சி கற்பிக்கப்பட்டு மாணவிகளிடையே நற்பண்புகள் வளர்க்கப்பட்டன.

இவை யாவற்றிற்கும் மேலாக இவரது பணிகளுக்கு மகுடம் வைத்தாற்போல பாடசாலைக்கீதம் இவரது காலத்திலேயே எழுதப்பட்டது. பாடசாலைக்கென ஒரு கொடி, சின்னம், பாடசாலையின்

மகுட வாக்கியம் போன்றனவும் மிஸ்லீ அவர்களின் காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறாக அகப்பணியும் பூரணத்துவமும் மிக்க சேவையாற்றிய அம்மையார் தனது காலத்தின் பின்னரும் தனது சேவையைத் தொடர்ந்து செய்யக் கூடிய ஆளுமை மிக்க ஒரு அதிபரைத் தனது காலத்திலேயே உருவாக்கிவிட்டுச் சென்றார் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டேயாக வேண்டும்.

ஆம்! இத்தகைய பெருமைக்குரியவர் யாருமல்ல. கல்லூரியின் வரலாற்றில் பொற்காலத்தை உருவாக்கித் தந்த செல்வி R.J. மான் அவர்களேதான். 1948 தொடக்கம் 1974 வரை 26 வருடங்கள் கல்லூரிக்கு அயராத சேவை புரிந்துள்ளார். அதிலும் குறிப்பாக 1960 தொடக்கம் 1974 வரை 1968 மே மாதம் 7ஆம் திகதி எமது கல்லூரி ஒரு நூற்றாண்டை நிறைவு 15 வருடங்கள் இவர் அதிபராகச் சேவையாற்றிய காலங்கள் நினைவில் நீங்காதவை. இவரது பணிகளில் இன்றுவரை போற்றுதற்குரியது யாதெனில் விளையாட்டுத் துறையில் எமது பாடசாலை முன்னணிக்கு இட்டுச் சென்றமையாகும். எமது பாடசாலை வளவின் தென்மேற்கு எல்லையில் குளமும் கட்டையுமாக இருந்த நிலப்பரப்பைச் சமதரையாக்கி உடற்பயிற்சிக்கு ஏற்ற மைதானமொன்றை உருவாக்கியமை இவரது சாதனைக்குச் சான்றாகும். வடமராட்சியிலேயே இயற்கை வளங்களுடனும் சுற்றுமதிலுடனும் அமைந்த பாடசாலை மைதானம் எமது கல்லூரியிலேயே அக்காலத்தில் அமைந்திருந்தது. 1970 இல் அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் எமது மாணவிகள் மத்தியபிரிவு, கீழ்பிரிவு என்பவற்றில் முதலிடங்களைத் தட்டி கொண்டனர். இதற்குக் காரணமானவர் இப்பாடசாலையின் பழைய மாணவியும் அன்றைய உடற்கல்வி ஆசரியருமான செல்வி. பாக்கியம் முத்து ஆவார். இன்று தொடக்கம் விளையாட்டுத்துறைக்கு இப்பாடசாலையில் உறுதியான தளம் இடப்பட்டது என்பதுவும் அதுவே. எமது பாடசாலையில் பாரம்பரிய தகைமை என்பதுவும் இன்றைய பாடசாலைச் சமூகத்திற்குக் கோடிட்டுக் காட்ட வேண்டிய செய்தியாகும்.

விடுதி வசதி அமையப் பெற்றமையினாலும் ஒழுக்கத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் இலக்கணமாக விளங்கியமையாலும் தூர இடங்களிலிருந்தும் மாணவிகள் எமது கல்லூரியை நாடி வந்தனர். ஆசிரிய வளப் பற்றாக்குறையால் தளம்பல் நிலையிலிருந்த க.பொ.த(உ/த) கலைப்பிரிவு வகுப்புக்கள் அதிபரின் முயற்சியால் புத்துயிர் பெற்றன. வசதிக் கட்டண முறையில் திறமைமிக்க ஆசிரியர்களை நியமித்தமையின் மூலம் 1978ஆம் ஆண்டு தொடக்கம் மீண்டும் பல்கலைக்கழக கலைத்துறைக்கு மாணவிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவரது பதவிக் காலத்தில் குறிப்பிடத்தக்க அம்சமாக அமைவது 1970இல் கல்லூரிக்கு பான்ட் வாத்தியத் தொகுதியொன்று பெறப்பட்டதுடன் அவற்றைப் பயிற்றுவிக்க ஆசிரியையும் நியமிக்கப்பட்டமை ஆகும். கல்லூரி நிகழ்வுகளில் மட்டுமன்றி யாழ் மாவட்டத்தில் நிகழ்ந்த வெவ்வேறு நிகழ்வுகளிலும் எமது பான்ட் வாத்தியக்குழு கலந்து கொண்டு மெருகூட்டியது. ஆண்டுதோறும் நிகழ்ந்த சாரணர் பயிற்சிப் பாசறைகளில் சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டலோடு மாணவிகள் கலந்து கொண்டனர். செல்வி V.புவனேஸ்வரி அவர்கள் நடன ஆசிரியையாகக் கடமை புரிந்த காலத்தில் ''சாகுலநந்தம்'' என்ற நாட்டிய நாடகம் அகில இலங்கையில் முதற்பரிசைத் தட்டிக் கொண்டமை இக்காலத்தில் கலைத்துறை வளர்ச்சிக்குக் கட்டியங் கூறுவதாக அமைந்தது. இவ்வாறாக பல்வேறு ஆற்றல் மிக்க செல்வி R.J.மான் அவர்கள் 4 ஆண்டுகள் ஆசிரியராகவும் உப அதிபராகவும் 15 ஆண்டுகள் ஆற்றிய பணிகள் இன்றும் கல்லூரி சமூகத்தினரால் நினைவு

கூரப்பட்டு வருகின்றன. இத்தகைய தலைவி 1974இல் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலைக்குப் பதவியுயர்வு பெற்றுச் சென்றமை எமது கல்லூரிக்குப் பேரிழப்பாகும்.

தொடர்ந்து 1975 தொடக்கம் 1978 வரை திருமதி. க.இரத்தினசாமி அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். இவர் குறுகிய காலமே கடமையாற்றினார். ஆயினும் நிறைவான பணிபுரிந்தார். நூலகத்திற்கான புதிய கட்டடமும் அதனோடு இணைந்த வகுப்பறைகளும் அமைக்கப்பட்டன. தாதி, உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டார். 1977இல் H.N.C.E விஞ்ஞான வகுப்புக்களும் அமைக்கப்பட்டன. 1976 தொடக்கம் 1981 வரை ஆண் மாணவர்கள் இங்கு கல்வி கற்றனர்.

திருமதி.க.இரத்தினசாமி அவர்களின் பின் திருமதி.பா.இராஜேந்திரசிங்கம் 1978இல் அதிபராகப் பதவியேற்றார். இவர் தனது மாணவப் பருவத்தின் பெரும்பகுதியையும், ஆசிரியப் பணியின் முழுமையையும் இக்கல்லூரியிலேயே கழித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1980இல் மீண்டும் எமது மாணவியர் அகில இலங்கை ரீதியாக உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர். அக்காலத்தில் செல்வி. க.நேசமணி அவர்கள் உடற்பயிற்சி ஆசிரியராக இருந்தார். இக்கல்லூரியில் இருந்து முதன்முதலாக பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு இரு மாணவிகள் தெரிவு செய்யப்பட்டனர். 1985ஆம் ஆண்டு உயர்தர வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. முதன்முதலாக 1987இல் புதிய மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டது. சகல துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருந்த எமது கல்லூரிக்கு 1987இல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது ஏற்பட்ட பேரிழப்பு அனைவரையும் தாங்கொணாத்துயரில் ஆழ்த்தியது.

எரியுண்டும் இடியுண்டும் சிதிலமாகிக் கிடந்த எமது கல்லூரி அன்னைக்கு எஞ்சியிருந்தவை வானுறமேலோங்கிய மரங்களும் வரையாது வாரி வழங்கிய மாணவச் செல்வங்களும் அவர்களிடத்தே நிலையாகிப் போன கல்விச் செல்வங்களும் மட்டுமே! தளராத உறுதியுடன் எமது அதிபர் அவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசிரியர்கள். நலன்விரும்பிகள் உதவியோடு மைதானத்தின் ஓரமாக இரு கொட்டில்களை அமைத்துக் கொடுத்தார். இவ்வேளையில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளையின் உதவியும் கிடைத்தது. தற்காலிக அமைதிச் சூழலில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் துரதிஷ்டவசமாக 1987இன் இறுதியில் இந்திய இராணுவமுகாமாக அமைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எமது கல்லூரிக்கு ஏற்பட்டது. ஆயுத பாணிகளாக இராணுவத்தினரின் நடமாட்டத்தின் மத்தியிலும் பயமும் பீதியும் நிறைந்த காலகட்டத்தில் கல்வி கற்க வேண்டிய நிலை அன்று மாணவராக இருந்த எம்போன்றோருக்கு ஏற்பட்டமையை இன்றும் என்னால் மீட்டுப் பார்க்க முடிகின்றது. இக்காலத்தில் கடமையாற்றிய அதிபரின் அசாத்தியத்துணிச்சல் ஆசிரியர்களையும் மாணவிகளையும் தொற்றிக் கொண்டதில் வியப்பேதும் இல்லை. இத்தகைய இன்னல்கள் இடையே 1989ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழ்த் தினப்போட்டியில் கட்டுரை ஆக்கத்தில் மாகாண மட்டத்தில் மாணவி ஒருவர் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1990ஆம் ஆண்டு தற்காலிக இடப்பெயர்வின் பின் கல்லூரி மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது. 1991 ஆம் ஆண்டு மாசி மாதம் இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி.R.J.மான் அவர்கள் அமரத்துவம் அடைந்தார்கள். 1992ஆம் ஆண்டு யூலை மாதம் பாடசாலை அபிவிருத்திச்

சபை கல்வித் திணைக்களத்தின் புதிய நியமனங்களுக்கு அமைய அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. 1992 ஒக்டோபர் 18இல் எமது பழைய மாணவர்கள் சங்கம் மீண்டும் புனரமைக்கப்பட்டது. 1993இல் எமது கல்லூரித் தாய்க்கு 125 ஆம் ஆண்டு நிறைவடைந்தமையைக் குறிக்கும் வகையில் பழைய மாணவர்கள் சங்கத்தின் உதவியுடன் ஆண்டுவிழாக் கொண்டாட்டம் இடம்பெற்றது. அன்றைய தினம் கல்லூரியின் வரலாற்றுத் தொகுப்பு நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. 1993ஆம் ஆண்டு மாசி மாதம் 27ஆம் திகதி இக்கல்லூரியுடன் 50 ஆண்டுகள் இணைந்திருந்த திருமதி.பா. இராஜேந்திரசிங்கம் பிரியாவிடை பெற்று சென்றார். ஆயினும் அவரது பணிகள் பழைய மாணவர் சங்கத் தலைவி என்ற வகையில் தொடர்ந்தும் எமது கல்லூரிக்குக் கிடைத்தன.

1993ம் ஆண்டு எமது பாடசாலைக்கு குறிப்பிடத்தக்கதோர் ஆண்டாகும். ஏனெனில் இவ்வருடத்திலேதான் எமது பாடசாலை 125 ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடிய அதேவேளை திருமதி.பா.இராஜேந்திரசிங்கம் அவர்கள் அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ள அவரது பணியைத் தொடர்வதற்கு திருமதி. இரஞ்சிதம் குட்டித்தம்பி அவர்கள் அதிபராகக் கடமையேற்றுக் கொண்டார். இவ்வாறு மூன்று நிகழ்வுகளும் சம காலத்தில் நிகழ்ந்தன.

1993 மாசி 28ஆம் திகதி திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி அவர்கள் அதிபராகக் கடமையேற்றார். ஆயினும் 1985.04.01 இல் இருந்தே அவர் எமது பாடசாலையின் ஆசிரியராக இணைந்து கொண்ட நாள் தொடக்கம் சிறந்த நிர்வாகத்திறனும் கற்பித்தலில் உத்வேகமும் உடையவராக விளங்கினார். பாடசாலையின் பல்வேறு சாவல்களுக்கும் ஈடுகொடுக்கக் கூடிய ஆளுமைத் திறனை உடையவராக விளங்கியமையால் தான் போலும் முப்பத்தியாறு வயதிலேயே இக்கல்லூரியின் அதிபர் என்ற நடிபங்கினை இவரால் நன்கு ஆற்ற முடிந்தது. 1987 இல் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் எமது பாடசாலையின் வளங்களைச் சூறையாடிச் சென்றன. ஆயினும் பல சிரமங்களை எதிர்கொண்டு பாடசாலையின் மறுசீரமைப்புப் பணிகளை ஆரம்பித்தார். குறுகிய காலத்தில் வெற்றியும் கண்டார். இன்று கல்லூரியில் வானளாவிய உயர்ந்து நிற்கும் கட்டடங்களும், பல்வேறு உயர் நிறுவனங்களில் பதவி வகிப்போரும் இவர் தம் அயராத அரும்பணியின் வித்துக்களேயாகும்.

இவரது காலத்தில் நாடகமன்றம், சமூகவிஞ்ஞானமன்றம், கிறிஸ்தவ மன்றம், இந்துமன்றம், சுகாதாரமன்றம், கணிதவிஞ்ஞான மன்றம், ஆங்கில, தமிழ் இலக்கிய மன்றம், உயர்தர மாவணர்மன்றம், மாணவர் மன்றம் முதலியன மன்றச் செயற்பாடுகளின் மூலம் மாணவிளின் பல்வேறு ஆளுமைகளும் வெளிப்படுவதற்கு களம் அமைத்துக் கொடுத்தார். உடற்பயிற்சிப் போட்டியில் எமது பாடசாலைக்குரிய பெருமையைத் தக்க வைத்துக்கொள்ளும் வகையில் பாடசாலையின் உடற்பயிற்சித்துறைக்கு நாளும் பொழுதும் உரமூட்டும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்தார். இவ்வகையில் பெண்களுக்கான கிரிக்கட், கபடி முதலான அணிகளை அமைத்ததுடன் ஆரம்பகாலங்களில் நிரந்தர உடற்கல்வி ஆசிரியர் இல்லாத நிலையிலும் வெளியில் இருந்த துறைசார் ஆளணியினரை வருவித்து அவர்களுடன் தானும் நின்று மாணவிகளுக்கான பயிற்சிகளை வழங்கி சந்தர்ப்பங்கள் பலவற்றை நான் கல்வி கற்கும் காலத்தில் கண்டு பிரமித்திருந்தேன்.

21வது யாழ்ப்பாணம் என்ற பெயரில் எமது கல்லூரியில் இயக்கி வந்த சாரணிய இயக்கம் இடையில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாகச் செயற்படாதிருந்தது. 1993இல் மீண்டும் அதற்குப் புத்துயிர் அளித்து சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில் செயற்படுத்தினார்.

மேலும் நேரந்தவறாமை, எளிமை, சிறந்த திட்டமிடல், தீர்மானங்களை எடுத்தலும் செயற்படுத்தலும் மாணவர் மற்றும் ஆசிரியர்களின் தனியாற்றல்களை இனங்கண்டு ஊக்குவித்தல் அன்பும் கண்டிப்பும் நிறைந்த மென்மையான தொனி போன்ற பல்வேறு பண்புகளை அவரிடம் கற்கும் காலத்திலும், அவரின் கீழ் கற்பிக்கும் காலத்திலும் நான் தரிசித்திருக்கின்றேன்.

இவரது காலத்தில் பாடசாலையின் விளையாட்டுத்துறை, கலைத்துறை போன்ற சகல துறைகளிலும் பல்வேறு சாதனைகளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில் தமிழ்த்தினப்போட்டிகளில் கட்டுரை வரைதல், பாவோதல் முதலியவற்றில் மாணவிகள் தேசிய மட்டம் வரை பங்குபற்றினர். அத்துடன் உயர்தர மன்றம், நாடகமன்றம் ஆகிய மன்றங்களினால் நூல், சஞ்சிகை ஆகியன வெளியிடப்பட்டன.

உடற்பயிற்சிப் போட்டிகளில் வலயம் மற்றும் மாவட்ட மட்டங்களில் மாணவர்கள் சிறப்பாக விளையாடியதுடன் தேசிய மட்டம் வரை சென்று பாடசாலைக்கு நற்பெயரை ஈட்டித் தந்தன.

சாதனைகள் :

விளையாட்டு

2001 - தேசிய மட்டத்திற்கு 2 மாணவிகள் தெரிவு செய்யப்பட்டனர்.
கட்டுரை வரைதல் - தமிழ்த்தினப்போட்டி - தேசிய மட்டம்

2008 HNB சிறுவர் உரிமை - சிறுவர் ஆக்கம் - தேசிய மட்டம் 1ஆம் இடம்

2009 - நூல்வெளியீடுகள் - உயர்தர மன்றம் ''சுடர்''
- நாடக மன்றம் ''நாடகம் நாட்டியம்''
- நூலக வாசகர் வட்டம் - ''கலங்கரை''

இத்தகைய அர்ப்பணிப்பு மிக்க சேவையாற்றிய அதிபர் அவர்கள் 2010.04.25 முதல் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்திற்குப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்ல இந்நாள் வரை எமது கல்லூரியின் பிரதி அதிபரும் பழைய மாணவியுமான திருமதி.L.N.யோசப் அவர்களின் தலைமையில் பாடசாலை கல்வி நடவடிக்கைகள், ஒழுக்கம் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. மேலும் பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு அவர்களின் உன்னத சேவைக்கு ஊக்கமளிப்பதாக அமைகின்றது.

எமது பாடசாலையின் பழைய மாணவியான திருமதி.L.N.யோசப் அவர்கள் பாடசாலை மாதாவின் மீதுள்ள மிகுந்த பற்றினால் வெளிநாடுகளிலிருந்து வரும் பழைய மாணவிகளின் தரிசனத்தின்போது, பாடசாலை மாதாவை வளர்ப்பது பற்றிய கருத்துரைகளை முன்வைப்பார். பழைய மாணவர் சங்கத் தலைவியாகவும், தன்னலம் கருதாத சேவை மனப்பான்மையையும் கொண்டமைந்த எமது இன்றைய அதிபர் அவர்களின் வழிகாட்டலில் பல மாணவர்களின் சாதனைகள் பலவற்றை எதிர்பார்ப்பதோடு அவர்களின் சேவை சிறக்கவும் மாணவர்கள் எல்லோரும் நற்பிரசைகளாக விளங்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ரேணுகா ராம்தாஸ்

கல்வி பெற்றது உருப்பிட்டியில்...

கடமையாற்றுவது உலகெலாம்...

S.Thillanadarajah-Sri Lanka

V.Sornalingam-Canada

சந்திப்போம்... சர்வதேச ஒன்றிய ஒன்றுகூடலில்

Y.Alagalingam- Germany

M.Thangarajah -Australia

T.Vasanthakumar-Canada

R.Jeyarajah-UK

S.Jeyaseelan-Australia

இணையவும்

www.uamcollege.com

அல்லது

www.ugirlscollege.com

புலருமா புலம்பெயர் வாழ்வு?

அந்தச் சிறுவன் ராகுலன் தன் பேத்தியாரை அழைக்கிறான்.

அம்மம்மா நான் நாளைக்கு பள்ளிக்கூடத்துக்கு சாப்பாடு கொண்டுபோகவேணும். மறுநாள் பேத்தியார் மிக ஆவலுடன் சாப்பாடு செய்து கொண்டிருக்கிறாள். தன் பாடசாலை ஆயத்தத்தைச் செய்து விட்டு மீண்டும் பேத்தியாரிடம் வந்த ராகுலன் அம்மம்மா எனக்கு நேரமாச்சு நான் பள்ளிக்கூடம் போகவேணும். பேரனின் அவசரத்தை உணராத பேத்தியார் பேரன் தன் சாப்பாட்டைக் கொண்டு போய் நண்பர்களுக்கும் அம்மம்மாவின் சாப்பாடு என்று நண்பர்களிடம் காட்டி சாப்பிடப் போகிறான் என்ற மட்டற்ற மகிழ்ச்சியில் சமைத்துக் கொண்டிருக்கிறாள். வழமையாய் பேரனுக்கு காலைச் சாப்பாட்டை மட்டும் ஆயத்தப் படுத்திக் கொடுப்பாள். இன்று முதன் முதல் பாடசாலைக்கு கொண்டுபோகக் கேட்டுவிட்டான் என்று தன்னை மறந்து சமைக்கிறாள். அதிகாலை ஐந்து மணியிலிருந்து ஏழுமணிக்கு பேரன் சாப்பாடு கேட்கப் போகும் வரை சமைக்கிறாள். ஏழு மணிக்குக் கொடுக்க வேண்டிய காலைச் சாப்பாடும் கொடுக்கப்படவில்லை. பேரனுக்கு நேரம் தாண்டி ஏழரை மணியாகிவிட்டது. சாப்பாடு தயார் நிலையில் இல்லை. பேத்தி மணியம் கடையில் முதல் நாளே சாப்பாட்டுக் கரியர் வாங்கிவந்து கழுவிக் காயவைத்து பேரனுக்குச் சாப்பாடு கொடுத்து விட ஆயித்தப்படுத்தியிருந்தாள். ஏழு முப்பது மணி அம்மம்மா நான் போகவேணும். பேத்தியும் கொஞ்சம் பொறு கொஞ்சம் பொறு கறி எல்லாம் ஆயத்தம் சோறு அவிந்து கொண்டிருக்கிறது. பேத்தியாரை ஏமாற்றத்துடன் பார்த்த ராகுலன் என்ன சோறோ பேரன் விசனத்தையும், அவசரத்தையும் அலட்சியம் செய்த பேத்தியார் சமைத்துக் கொண்டே இருக்கிறாள். அவள் மனதில் பேரன் தன் சாப்பாட்டை நண்பர்களுடன் மகிழ்ந்து சாப்பிடுவதாக நினைத்துக் கொண்டேயிருக்கிறாள்.

அம்மம்மா பசிக்குது என்று கேட்ட ராகுலன் கடிகாரத்தின் பெரிய கம்பி வேகமாக நகர்வதாகப் பார்க்கிறான். அவன் கண்களில் கண்ணீர் வழிய சுவரில் தொங்கும் தாயின் படத்தை உற்று நோக்குகிறான். பாடசாலை பாக்கை தோளில் போட்டுக் கொண்ட ராகுலன் தாயின் படத்தைப் பார்த்தபடியே காலைச் சாப்பாடும் இல்லை, கொண்டு போகவும் சாப்பாடு இல்லை என்ற முடிவோடு பாடசாலை புறப்பட ஆயத்தமாகிறான். கிச்சினில் பாத்திரங்களுடன் போராடும் அம்மம்மாவையும் அவசரத்தில் ஏற்பட்ட ஒழுங்கீனத்தையும் பார்த்த அவன் ஒரு கிண்ணத்தில் பைப்பில் தண்ணி ஏந்தி குடித்து விட்டுப் புறப்படுகிறான். கதவு திறக்கும் சத்தம் கேட்ட அம்மம்மா சாப்பாட்டைக் கொண்டுபோக நிற்கும்படி மன்றாடுகிறாள். நேரமாகிவிட்டதென்றே கூறிக் கொண்டு புறப்பட்டு விட்டான் அவன். பழைய கட்டிடமொன்றின் இரண்டாம் மாடியில் பார்வதியம்மாள் தன் பேரன் தன்னுடன்தான் இருக்கவேண்டுமென்று அதிகாரிகளுடன் போராடி தாயை இழந்த பேரனின் வளர்ப்பு உரிமையைப் பெற்றிருந்தாள். படிகளின் ஓடிக் கொண்டே இறங்கி அவன் போகவும் அவனைக் காத்து நின்று ஏற்றுவது போல பஸ்சும் புறப்பட்டது. பேரன் பசியோடு போவதை உணர்ந்து பரிதவிக்கிறாள் அவள். பேத்தி பார்வதியால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. அவளுக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. ஏக்கத்துடன் சுவரில் தொங்கும் மகளின் படத்தைப் பார்க்கிறாள். மகள் தன்னைக் கோபமாகப் பார்ப்பது போன்ற குற்ற உணர்வு அவளுக்கு. ஏன் பிள்ளைக்கு சாப்பாடு கொடுக்காமல் பாடசாலைக்கு அனுப்பினாய் என மகள் கோபிப்பது போல உணர்கிறாள்.

எப்படியாவது பேரனுக்குச் சாப்பாட்டைக் கொடுத்து விடவேண்டும் என்ற உணர்வு அவளுக்கு அவளின் உணர்வின் வேகத்திற்கேற்ப அசைய அவளின் வயது இடங்கொடுக்கவில்லை. சுறுசுறுப்பாக கரியலில் சோறையும் அடுக்கடுக்காகக் கறிகளையும் போட்ட அவள் கரியரை ஒரு பிளாஸ்ரிக் பாக்கில் வைத்துப் போட்டுக் கொண்டு பாடசாலைக்கு போய் பேரனிடம் கொடுத்து விடவேண்டும் என்ற ஆவலுடன் விரைகிறாள்.

பாவம் பார்வதி எட்டு வருடங்களாக அங்கு வாழ்ந்தாலும் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள இரண்டு மூன்று கடைகளையும் கொஞ்சம் தள்ளியுள்ள Migros உம் தான் அவளுக்குத் தெரியும். பஸ்சில் தனியப் போயோ பிற மொழியாளர்களுடன் பேசியோ பழக்கமில்லாத அவளுக்கு கடந்த ஆறு மாதங்களுக்கு முதல் வரை தற்போது படமாக சுவரில் தொங்கும் அவள் மகளே எல்லாம். இப்போது அவள் பேரனே அவள் உலகம். பஸ்சைப் பிடிக்க ஓடிய அவள் எங்கே போவதென்று புரியாது அங்கே வந்து கொண்டிருந்த சாந்தியிடம் கேட்கிறாள் ராகுலனின் பாடசாலைக்கு எப்படிப் போவது என்று. இயந்திர வாழ்வின் எடுத்துக்காட்டாக பிரசன்னமான சாந்தி, பார்வதியம்மாவின் ஏக்கத்தைப் புரியாமல் தான் அவசரமாக வேலைக்குப்போவதாகக் கூறி சென்றுவிட்டாள். ராகுலனின் பாடசாலையைக் கண்டு பிடிக்க தன்னோடு எடுத்து வந்த அவனுக்கு எப்போ வந்திருந்த கடிதத்தை அங்கு நின்ற ஒருவரிடம் காட்டி தனக்கே உரிய பாசையில் கேட்கிறாள் அவர் ஒரு பஸ்சில் ஏற்றிவிடுகிறார்.

பஸ்சில் சென்ற அவள் மற்றவர் கூறியபடி பிறிதொரிடத்தில் இறங்குகிறாள் அவளுக்கோ ஒன்றுமே புரியவில்லை முன்பொருமுறை பேரன் ராகுலன் பாடசாலைக்குக் கூட்டிச் சென்ற ஞாபகத்தில் அங்கும் இங்கும் பார்க்கிறாள் அவளுக்கு எல்லாக் கட்டடங்களும் ஒரேமாதிரியாகத் தெரிகிறது. பேரனின் பசி அவளின் வயிற்றைத் துழைப்பதாகக உணர்கிறாள். தெருவோரம் உள்ள கட்டடத்தில் பொருந்தியிருந்த மணிக்கூடு எட்டுநாற்பது காட்டுகிறது. பேரன் ஒன்பது மணிக்கு தான் கொண்டு போகும் காலைச் சாப்பாட்டை சாப்பிடுவதாகக் கூறியதை நினைத்துப் பார்க்கிறாள். தன்னோடு கொண்டு வந்த பேரனின் புத்தகத்தையும் வைத்திருந்த கடிதத்தையும் காட்டி வழியில் நின்றவரிடம் கேட்க அதை புரிந்து கொள்ளாத அவர் புத்தகக் கடையைக் காட்டிவிடுகிறார். கடையில் தூங்கிய மணிக்கூடு ஒன்பது மணி காட்டுகிறது. பார்வதி அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் மீண்டும் மீண்டும் ராகுலனின் பாடசாலை பற்றியே தனக்குத் தெரிந்த பாசையில் கதைத்துக் கொண்டிருக்கிறாள பலன் கிடைக்கவில்லை. கடைக்கு வெளியே வந்த அவள் பேரனின் பசியை நினைத்து பதறுகிறாள்.

பாடசாலையில் பசியுடன் பிரசன்னமாகியிருக்கும் ராகுலனின் சோம்பலை அவதானித்த ஆசிரியர், அவனின் குடும்ப நிலைமையையும் அறிந்திருந்ததால் ஆசிரியர் அவனை அன்போடு அழைத்து வினவுகிறார். அவன் காலையில் ஒன்றுமே சாப்பிடாமலும், காலைச் சாப்பாடு கொண்டு வராமலும் வந்திருந்ததை அறிந்த அவர் அவனை அழைத்துச் சென்று ஆசிரியர் தங்கும் அறையில் அவனுக்கான காலையுணவைக் கொடுக்கிறார். பேரன் ராகுலன் பசியால் துடிப்பதாக உணரும் பார்வதியம்மா தன் இயலாமையால் உணர்ச்சி வசப்பட்டு மூச்சையுற்று விழுகிறாள். அங்கு நின்ற முதலுதவி அளித்தவர்கள் அவளை அம்புலன்சில் வைத்தியசாலைக்கு அனுப்பி விடுகிறார்கள். வைத்தியசாலையில் பேரனின் பேரை உச்சரித்தபடி இருந்த பார்வதி அம்மாளிடமிருந்து அவர்களால் எந்தத் தகவலையும் பெற முடியவில்லை. உடலில் சுகயீனம் எதையும் அவதானிக்க முடியாத வைத்தியர் அவள் தொடர்ந்தும் அழுவதைக் கண்டு அவளை மனநோய் வைத்தியசாலைக்குக்

கொண்டுபோக உத்தரவிடுகிறார். மனநோய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பார்வதி அம்மாவை வெளியில் செல்ல அனுமதி மறுக்கப்படுகிறது.

பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்த ராகுலன் வீடு பூட்டியிருப்பதைப் பார்க்கிறான். எங்குமே போகாது தன் வரவை மட்டுமே தினமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற அம்மம்மாவைக் காணாமல் அவன் மனம் கலக்கம் அடைகிறது. அவனுக்கு எங்கே போவதென்று புரியவில்லை. சற்றுத் தொலைவில் வசிக்கும் சுந்தரம் மாமா வீட்டுக்குச் செல்கிறான். அங்கு அவரின் வீட்டு மணியை அழுத்துகிறான். மது போதையில் தொலைபேசியில் யாருடனோ கோபமாக உரையாடிக் கொண்டிருந்த சுந்தரத்திடம் அம்மம்மா வந்தாரா எனக் கேட்கிறான். அச்சிறுவனின் பரிதவிப்பைப் புரியாத சுந்தரம் தொலைபேசியில் உரையாடிக் கொண்டே இல்லை என்ற ஒரு சொல்லுடன் கதவைச் சாத்தி விடுகிறார். களைப்புடன் எங்கே செல்வதென்றறியாத ராகுலன் தன் வீட்டு வாசலில் பூட்டிய கதவின் முன் இருக்கிறான். சூரியன் மறைந்து இருள் பரவ அவன் மனதிலும் ஒரு வித பயம் படர ஆரம்பித்தது. அவனை அறியாமலேயே அவன் கண்களில் இருந்து கண்ணீர் சொரிந்தது.

சற்றுத் தூரத்தில் வசிக்கும் அவன் வகுப்பு மாணவனான கிறிஸ்ரியானின் வீட்டு மணியை அழுத்துகிறான். அங்கு வந்த கிறிஸ்ரியானின் தாயார் ராகுலனின் கண்களில் இருந்து சொரியும் கண்ணீரைக் கண்டு அதிர்ச்சி அடைகிறாள். அவனை அன்போடு உள்ளே அழைத்துச் செல்கிறாள். அவ்வமயம் கிறிஸ்ரியான் வீட்டில் இல்லை. அவன் தந்தையுடன் உலாத்தச் சென்றுவிட்டதாகத் தாய் கூறுகிறாள். ராகுலன் நடந்தவற்றைக் கூறினான். ராகுலனிற்கு மாற்றுடையும் கொடுத்து, சாப்பாடும் கொடுத்த கிறிஸ்ரியானின் தாய் வ்பிரான்சிஸ்கா அவனை ஆறுதல் படுத்துகிறாள். ரகுவின் தாயின் அகால மரணத்தின் பின் ராகுலனின் மீது வ்பிரான்சிஸ்கா பாசமாக இருந்தாள்.

வைத்தியசாலையில் பார்வதி அம்மாவுக்குச் சிகிச்சை அளிக்க வைத்தியர் ஒரு மொழி பெயர்ப்பாளரை அழைத்திருந்தார். மொழிபெயர்ப்பாளரிடம் தான் இருக்கும் இடத்தை அறிந்து கொண்ட பார்வதி அம்மா அதிர்ச்சி அடைந்து அமைதியிழந்தாள்.

தன்னை பேரனிடம் அழைத்துச் செல்லும்படி சத்தமிட்டாள். வாய்க்கு வந்தபடியெல்லாம் புலம்பி அழுதாள். பார்வதி அம்மாளின் நிலமையை அவதானித்த வைத்தியர் அவனை அமைதிப்படுத்த அமைதிப்படுத்தும் மருந்து கலந்து தண்ணீரைக் கொடுக்கிறார். மொழிபெயர்ப்பாளரும் தண்ணீரைக் குடித்து ஆறுதலாயிருக்கும்படி கூற களைப் படைந்திருந்த பார்வதி அம்மா தண்ணீரென நினைத்து ஒரே முடக்கில் குடித்து விடுகிறாள். உணர்வுகளை அமைதிப்படுத்தும் மருந்து தன் சாதனையைப் புரிய பார்வதி அம்மா அமைதியாகத் தூங்குகிறாள்.

மறுநாள் ராகுலனை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற கிறிஸ்ரியானின் அம்மா வகுப்பாசிரியரிடம் நடந்தவற்றைக் கூறுகிறாள். ரகுவைப் பாதுகாக்கக் கருதி ஆசிரியர் பிள்ளைகள் பாதுகாக்கும் அலுவலகத்திற்கு தகவல் கொடுக்கிறார். பார்வதி அம்மா மனநோயாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடுள்ள தகவலைப் பெற்றுக்கொண்ட அவர்களும் தமது பொறுப்பில் ராகுலனை அழைத்துச் சென்று அனாதைப் பிள்ளைகள் பாதுகாக்கும் இல்லத்தில் ஒப்படைக்கிறார்கள். அம்மம்மாவைக் காணாத ராகுலனின் உள்ளம் பாசமிகு அம்மம்மாவைத் தேடியது. சட்டத்தால் வரையறுக்கப்பட்ட பாசத்தைச் சொரியும் இல்லத்தில் அவன் உள்ளம் தேடும் அம்மம்மாவிடம் அனுபவித்த அரவணைப்புக் கிடைக்கவில்லை.

விழித்துக் கொண்ட பார்வதி அம்மா அங்கும் இங்கும் பார்த்துவிட்டு ராகுலனைத் தேடினாள். அறையின் வெளியே போக முற்பட்ட அவளை பூட்டிய கதவு மறுத்து விட்டது. ஒப்பாரி வைத்தே அழத் தொடங்கி விட்டாள். அவள் மீண்டும் மனநிலை குழம்பி இருப்பதாகக் கருதிய மருத்துவர் அவளுக்கு அமைதிப்படுத்தும் மருந்து கொடுக்க உத்தரவிடுகிறார். பலாத்காரப்படுத்தியே மருந்து கொடுக்கப்படுகிறது. மயங்கி விட்டாள் பார்வதி அம்மா. அவள் விழித்த போது கையில் வைத்திருந்த ராகுலனின் புத்தகம் கீழே கிடந்தது. முதலுதவிக்காக ஓடிவந்த வைத்தியர் அந்தப் புத்தகத்தை எடுத்தபோது அதனருகே சர்க்கரை வியாதிக்கான மருத்துவ அட்டையைக் காண்கிறார். பார்வதி அம்மாவின் உணர்ச்சி வசப்படும் தன்மைக்குக் காரணத்தைப் புரிந்து கொண்ட வைத்தியர் தான் அவளுக்கு தவறான மருந்தைக் கொடுத்து விட்ட குற்ற உணர்வுடன் அவசர சிகிச்சை அளித்து அமைதியாக உறங்க வைக்கிறார்.

மறு நாள் பிள்ளைகள் பராமரிப்பு இல்லப் பொறுப்பாளர் ஏற்பாடு செய்த கூட்டத்தற்கு அழைத்து வரப்படுகிறளாள். அங்கே ராகுலன் தங்கும் அறை, மற்றப் பிள்ளைகளுடன் சாப்பிடும் இடம், பாடசாலை வீட்டு வேலை செய்யும் இடம் என்பவற்றைக் காட்டி பிள்ளைகளை தாங்கள் சிறப்பாகப் பராமரிக்கிறோம் என்று அவளுக்குக் காட்டி பெருமைப் பட்டுக் கொண்ட பாராமரிப்பு இல்லத்தின் அதிகாரிக்கு பார்வதி அம்மாள் தான் கூறுவதில் கவனம் இல்லாமல் வேறு எதையோ தேடுவதை அவதானித்து ஏமாற்றமடைந்தார். பார்வதி அம்மா எதையோ பறிகொடுத்த உணர்வோடு ராகுலனை எப்போ காணுவேன் என்ற ஆதங்கத்தோடும் நடைப்பிணமாக வந்து கொண்டிருந்தாள். கூடவே வந்திருந்த மொழிபெயர்ப்பாளரிடம் எங்கே என்னை பிள்ளை ராகுலன் என கோபத்துடன் கேட்டாள். தன் பிள்ளையை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போக தன்னுடன் விடும்படி கேட்டாள். சற்று நேரத்தில் பாடசாலை ஆசிரியரும் அங்கு வந்து சேந்தார். பாடசாலை ஆசிரியரை பார்வதி அம்மா கண்டதும் அவரின் பின் ராகுலன் வருகிறானா! எனத் தேடினாள். அவன் வராதது பார்வதி அம்மாவுக்கு மீள முடியாத ஏமாற்றமாக இருந்தது. முன்பு போன்ற உற்சாகம் தற்போது அவளில் இல்லை. தொடர்ந்து அரச நிர்வாகத்தின் பிள்ளைகள் பாராமரிப்புப் பொறுப்பாளரும் வந்து சேர்ந்தார். கூட்டத்தில் ராகுலனின் எதிர்காலம் பற்றிய தீர்மானத்திற்காக இவர்கள் அனைவரும் இன்று கூடியிருக்கிறார்கள். ராகுலனின் பராமரிப்பு இனிமேல் அரசாங்கம் பொறுப்பேற்பதாக பார்வதி அம்மாளுக்குக் கூறப்படுகிறது. அதற்காக தகைமை பெற்ற பாராமரிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததும் அத் தீர்மானத்தைப் புரிந்து கொள்ளாத பார்வதி அம்மாள் தன் பேரனை வீட்டுக்குக் கூட்டடிச் செல்ல வேண்டுமென்றும் அவன் எங்கே என்றும் கேட்டாள். பார்வதி அம்மாளின் பாசத்தையும் அன்பு மிகுந்த உணர்வோடு அவன் மீது உயிரையே வைத்திருக்கும் பார்வதி அம்மாளின் நிலமையை சட்டத்தை மட்டும் படித்துக் கொண்டு மாத இறுதியில் வரும் மாத ஊதியத்தை எதிர்பார்த்து அங்கு வீற்றிருந்த அதிகரிக்கு புரிந்திருக்க நியாயமில்லை. அதைத் தொடர்ந்து அதிகாரி தெரிவிக்கையில் மாதம் இருமுறை பார்வதி அம்மாள் இல்லத்தில் வந்து சந்திக்க முடியும் என்றும் இரு நாட்களுக்கு ஒரு முறை தொலைபேசியில் கதைக்க முடியுமென்றும் அவளுக்கு தெரிவிக்கப்பட்டது. இத்தனையையும் ஆமோதித்த வகுப்பு ஆசிரியர் ராகுலன் பசியோடு பாடசாலை வந்ததையும், அவன் தனிமையில் இருப்பதையும் காரணமாகக் காட்டி பார்வதி அம்மாள் ராகுலனை பராமரிக்கும் தகமை இழந்து விட்டதாக ஆதாரமாகக் காட்டி பிள்ளையை அவளிடமிருந்து பிரிக்கும் அதிகாரியின தீர்மானத்திற்கு வலுவூட்டினார். தன் பேரனை தன்னிடமிருந்து பிரிக்க இத்தனை கல்விமான்களும் கூடியிருப்பதை நினைத்து கலங்கிய அவள் தான் யாருக்காக உயிரோடு வாழவேண்டும் என்று நினைத்தாளோ அதைப் பறிகொடுத்த உணர்வோடு ரகுவை

தன்னிடம் விடும்படி கோரி மன்றாட்டமாக அழுதாள். நிலமையை அவதானித்த அதிகாரி விபரீதமாகப் போய்விடுமோ என எண்ணி தன் தொலைபேசில் ஏதோ கதைக்கிறார். சற்று நேரத்தில் அங்கு வந்த இருவர் அவளை அழைத்துச் செல்ல முற்படுகிறார்கள. அவள் மறுக்கவே பலாத்காரமாக வெளியே கொண்டு போகவே அங்கு விரைந்து வந்திருந்த அம்புலன்ஸ்சில் ஏற்றப்பட்டு மனநோயாளிகள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுகிறாள். ராகுலனிற்கு அவன் அம்மம்மா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவன் தொடர்ந்தும் பிள்ளைகள் பராமரிப்பு இல்லத்திலேயே வாழவேண்டுமென்று கட்டளை இடப்படுகிறது. அம்மம்மாவின் பாசத்திற்காக ஏங்கிய அவன் உள்ளம் சட்டத்தின் பிடிகளின் இறுக்கத்தினால் சிறிது சிறிதாக நொருங்குகிறது. அவன் வாழ்க்கை பாசமிகு உறவிலிருந்து நிரந்தரமாகப் பிரிக்கப்படுகிறது.

இது சுவிற்சலாந்தில் நிகழ்ந்த ஒரு உண்மை நிகழ்வின் பிரதிபலிப்பு. இது போன்ற மனஉழைச்சல்களை சந்தித்துக் கொண்டிருக்க தினமும் அழுதுகொண்டிருக்கும்

தாய்மார் கூட வேறு வழியின்றி விரக்தியுடன் வாழ்வதையும் சட்டத்தின் பிடியிலிருந்தும் தப்பித்துக் கொள்ள நாட்டைவிட்டு வெளியேறும் சம்பவங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்களாக உள்ளன. (இது போன்ற துன்பங்கட்கு உள்ளாக்கப் படுபவர்கள் மிகக் குறைவான விகிதாசாரமே இருந்தாலும் நாம் சற்றும் எதிர்பாராத துயர்நிறை முடிவுகளாக சட்டத்தின் துணையுடன் நிறைவேற்றப் படுகிறது. இங்கு பெற்றோர் பிள்ளைகளைக் கண்டிக்க கற்றுக் கொள்ள வேண்டும். சொர்க்கபுரியாம் சுவிற்சலாந்தில் காசை இலக்காகக் கணக்குப் பார்க்கும் ஒருகணம்தான் சிலவேளை சொர்க்கமாகத் தெரியும். கணக்குப் பார்த்து இலங்கையில் முதலீடு போட்டு பங்களா கட்டி அப் பங்களாவில் கற்பனையில் வாழும் பலர் இங்கே இன்று. மேற்கத்தைய நாடுகளில் மறுமணம் என்பது தாராள மணம் என்பதாகிவிட்டது. இதனால் கூடுதலாக பிள்ளைகள் பாதிக்கப் படலாம் என்பதால், பிள்ளைகளைப் பாதுகாக்க அரச பொறுப்பாளர்களும் பராமரிப்பு இல்லங்களும் நிறையவே உண்டு. பிள்ளைகள் தாம் அடக்கப்படுவதாக கருதினால் 24 மணிநேரமும் உதவியாளர்களை அழைக்க முடியும். சில பிள்ளைகள் பாசமிகு பெற்றோரின் நல்வழிப்படுத்தும் கண்டிப்பையும் , பெற்றோரின் அடக்குமுறையென விபரித்து பெற்றோரை விசாரணைக்குட்படுத்தி அவஸ்தைக்குட் படுத்தும் அவலங்களும் இடம்பெறுகிறது.

சுவிற்சலாந்து சொர்க்கம்தான் சுவிஸ்மனநிலைக்கு மாறிவிட்டால் மட்டும். தரப்படுத்தலில்லாத கல்வி, உழைப்பிற்கு முன்னுரிமை, உணரக்கூடிய சமத்துவம், தன்னிறைவு, தனிமனித பாதுகாப்பு, புலம்பெயர்விற்கு வித்திட்ட ஏக்கங்கள்

இவை, இங்கு ஓரளவு எட்ட முடிந்தாலும் குடியேறிய முதற் சந்ததியால் சொந்த நாடு கலாசாரம் என்ற ஏக்கம் மேலோங்கியுள்ளதால் இது முடியாதுள்ளது. இவர்கட்கு புலம்பெயர் வாழ்வில் புலருமா விடியல்.?

- சந்திரசேகரம் இரவிச்சந்திரன்

பொய்

பொய் உரைக்காதே, பஞ்சமாபாதகங்களில் ஒன்று பொய். பொய் கூறாமல் இருப்பதே செய்யும் பெரும் தர்மமாகும். இயற்கையிலேயே எவரும் பொய் கதைக்க விரும்புவதில்லை. பொய் சொல்லக் கூடாது என மற்றவர்க்கு அறிவுரை கூறும் நம்மில் பலர் 'ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லை' என்பது போல் செயற்படுவதைக் காணலாம். இங்கு நான் உண்மை கூற வேண்டும் என்னவென்றால் பாடசாலையில்தான் நான் இதைப் பற்றி ஆராய்ந்தேன் ஆசிரியரின் கோரிக்கைக்கமைய நான் ஏதாவதொன்றைப் பற்றி எழுதி பலர் எழுதியவற்றை தொகுத்து மற்றவர்கட்கும் விளங்கப்படுத்த வேண்டும் பாடசாலைப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இத் திட்டம் அனைத்து மாணவர்களும் மேற்கொள்ள வேண்டும் என் உள்ளக் கிடக்கையைப் பற்றி ஆசிரியரிடம் கூறினேன். அவர்தான் எனக்கு Frankfurt University இல் Mr. Schmid என்பவர் மேற்கொண்ட ஆய்வைப் பற்றி வாசிக்கும்படி அவ் Web address ஐத் தந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் தமிழில் படித்தளவிற்கு பொய் கூறும் சூழ்நிலைகளால் பெரிய பாதிப்புக்கள் எழுதப்படவில்லை. மாறாக பொய் கூறும் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்கள் பல சுட்டிக்காட்டப் பட்டிருந்தன. அப்போதுதான் வீட்டில் நிகழ்ந்த, நிகழும் சம்பவங்களை ஒருமுறை நினைவு கூர்ந்தேன். மனம் அமைதியிழந்திருந்தது. ஏன் இப்படி என்று. ஆனால் அவ் ஆய்வறிக்கையில் உள்ளது போன்று சந்தர்ப்பங்கட்கேற்ப பொய் கூறப் படாதிருந்திருந்தால் நான் என் தந்தையோடு பழகும் காலம் மேலும் குறைந்து போயிருக்கும். அதில் தற்கால நிகழ்வுகளை மேற்கோள் காட்டி ஆய்வு அறிக்கை எழுதப்பட்டிருந்தது. கூறிய பொய் என்னவென்றால் தந்தை எங்கேயென்று யார் தொலைபேசியில் கேட்டாலும் சொல்லக் கூடாது என்ற கட்டளையை நான் கடைப்பிடித்தமை. தந்தை எங்கேயென்று தெரிந்தாலும் கேட்பவர்கட்கு நான் தெரியாதென்றே கூறுவேன். பாடசாலையில் இவ் இதுபற்றி நான் எழுதியதை பின் ஒரு சந்தர்ப்பத்தில் வாசித்துவிட்ட என் தந்தை என்னை விட அமைதியிழந்திருந்ததை அவதானித்தேன். அவர் என்னைக் கண்டிக்கவில்லை ஆனால் அவ் University ஆய்வறிக்கையை தானும் வாசித்துவிட்டு உண்மையாக இருந்தாலும் திருக்குறளின் அழகான பாகங்களை விளங்கப்படுத்தியிருந்தார். திருக்குறளிலும் ஆபத்திற்கு பொய்யுரைக்கலாம் என்ற அம்சம் 2000 ம் ஆண்டல்ல 2000 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்டிருந்ததை சுட்டிக் காட்டி தமிழில் இல்லாதது எதிலும் இல்லை என புளகாங்கிதமும் அடைந்து கொண்டார்.

பஞ்சமாபாதகங்களில் ஒன்று பொய் என்றால் நம்மில் பலர் பஞ்சமாபாதகங்களில் குறைந்தது ஒன்றை தினமும் செய்து கொண்டேதான் இருக்கிறோமா? நம்பகத் தன்மையற்ற இன்றைய உலகில் பொய்யுரைக்காமல் வாழத்தான் முடியுமா?

எதற்காக எத்தனை தரம் பொய் உரைப்பது. எப்பொழுதும் உண்மை உரைப்பது நல்லதா? எவ்வளவு நல்லது நாம் பொய் என உணர்ந்து கொள்வது. பொய்யான புராணக்கதைகளின் ஏற்றுக் கொள்ளக்கூடிய தன்மை எப்படி உருவானது. அதி உன்னதமான தர்மமான இதைக் கடைப்பிடித்தால் மகிழ்ச்சியாக வாழலாம் என்றால் ஏன் இதைக் கடைப்பிடிக்கக் கூடாது? இதைக் கடைப்பிடித்தால் என்ன நிகழும். உண்மை கதைக்க ஏன், எச்சந்தர்ப்பத்தில் அச்சப்படுகிறோம்!

பொய்யைப்பற்றி பொய் என்ற தலைப்பில் Germany, Frankfurt பல்லைக் கழகத்தில் ஓர் ஆய்வு நிகழ்த்தப்பட்டது. அதன்போது பொய் என்பதற்கு ஒரு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டது.

பொய் என்றால் என்ன?

பொய் என்பது நோக்கம் கருதிக் கூறப்படும் ஒரு உண்மையற்ற தகவல், அதன் மூலம் ஒரு பிழையான கருத்தை திணிக்கும் செயல் என்று வரையறுக்கப்படும். (Schmid/Frankfurt University 2000)

ஆகவே பொய் என்பது எப்போதும் விரும்பப்படாத ஒரு அம்சமாகும். ஆனால் மனிதனுக்கு மனிதன் சூழ்நிலைக்கு சூழ்நிலை பொய் என்ற ஒரே கருத்துக்குரிய சொற்பதம் மாறுபட முடியும். ஒரு பொய் உரைப்பவர் மூலம் அப்பொய் நோக்கம் கருதி கூறும்போது பாதிக்கப்பட்டவர் அதை விருப்பப்படாத செயலாகக் கருதிக் கொள்வர். உதாரணமாக ஒரு பொய் ஆனால் பொய்யாக உணரப்படாத சம்பவங்கள் பல. அதே நேரம் கட்டாய தேவைக்காக இப்பொய் தேவையென்ற பரிணாமம் பெற்றுக் கொள்வதையும் காணலாம். இது தேர்தல் விஞ்ஞாபனங்களில் உரைக்கப்படும் வாக்குறுதிகள் பெரும்பான்மையானவை பொய்யுறுதியுரைகளாகும். தேர்தல் விஞ்ஞாபனங்களில் உரைக்கும் பொய் உறுதிஉரைகள் அத்துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவே கருத முடியும். ஏனெனில் அதே பொய் உரை உறுதிமொழிதான் பிரபல்யம் வாய்ந்த அரசியல்வாதிகளின் திரும்பத் திரும்பப் பேணப்படும் வெற்றிக்குரிய வழிகளாகக் காணமுடிகிறது. இன்றைய உலகில் வலிமைமிக்கவர்கள் பொய் கூறலாம் என்ற நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. நலிந்தவர்கள் தம் பாதுகாப்பிற்காகக் கூறினாலும் அவன் சமூகத்தில் பொய்யன் என அடையாளப்படுத்தப்படக்கூடிய அபாயகரமான சூழ்நிலைகளும் ஏற்பட்டுள்ளது.

பிறிதொருவகையில் ஒரு பிள்ளைக்கு பெற்றோர் கூறும் கதைகள் உதாரணமாக காக்கா பாட்டுப்பாடி வடை போட்ட கதை பிள்ளையை சந்தோசப்படுத்திய பொய்களாகும். எனவே சில நடைமுறைகளைக் கடைப்பிடிக்க நோக்கம் கருதிக் கூறும் ஏமாற்று நடைமுறைகள் இவை பொய் ஆனால் மாற்றப்பட முடியுமா?

பொய் என்பதற்கு முதற் கூறப்பட்ட வரையறையின்படி ஒருவர் நோக்கம் கருதாமல் தெரிவிக்கும் பிழையான தகவல்களும் உள்ளடக்கப்படலாம். உதாரணமாக ஒருவர் தொழில்நுட்பத்தைப் பற்றி அல்லது ஒரு வழியைப் பற்றி பூரணமாகப் பெற்றிராத தகவல்கள் பிறிதொருவருகுக்குக் கூறும் போது இச் சூழ்நிலை ஏற்படுகிறது. உதாரணமாக ஒரு வழிப்போக்கன் இன்னொரு வழிப்போக்கனிடம் நேரத்தைக் கேட்கிறார். அவர் தனது கடிகாரம் நின்றுவிட்டதை உணராமல் நேரத்தைக் கூறுகிறார். சிறிது தாமதித்து தான் பெற்றுக் கொண்ட தகவல் பிழை என்பதை உணரும் அவர் மற்றவர் கூறியது பொய் என உணர வாய்ப்புண்டு.

பொய் என்ற சொல் உருவெடுப்பது அவரின் மூளையில் இருந்துதான். அவர் அதை தேவை கருதி நம்பியே உரைக்கிறார். எனவே அச்சூழ்நிலையில் அவர் ஒருவரை ஏமாற்ற அல்லது அதைப் பொய்யென உணராமல் உரைக்கப்படுவதாகும். ஒருவரை ஆத்திரம் கொண்டு இன்னொருவர் துரத்தி வருகையில் அவர் ஒழிந்து கொள்ள உதவிவிட்டு துரத்தி வந்தவர் ஒழிந்தவர் பற்றிக் கேட்கும் போது தெரியாது எனக் கூறி அவரைக் காப்பாற்றி வைப்பது தெரிந்து கூறிய பொய்,

ஆனால் அது பொய்யாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படுவது மட்டுமல்ல அவரின் செயல் தர்மமாகப் பார்க்கப்படுகிறது.

ஏன் பொய்யுரைக்கப்படுகிறதென்பது பற்றி அதிகம் ஆராயாது போனாலும் அவர் எத்தனை தரம் பொய் உரைக்கிறார் என்பதைத் தவிர அவர் அதைவிட பல மடங்கு உண்மைகளை சொல்கிறார் என்ற கருத்து கவனிக்கப்படுவதில்லை. பொய் என்பது அனைவராலும் உரைக்கப்படுவதுதான். ஆனால் ஒருவர் உரைக்கும் பொய்யின் விகிதாசாரம் அவர் உரைக்கும் உண்மையின் விகிதாசாரத்திலும் அதிகப்பட்டால் அந்நபர் நம்பிக்கை அற்றவராகி விடுகிறார். (இதுவும் இன்றைய உலகில் அவரின் அந்தஸ்தைப் பொறுத்ததாக உள்ளது.)

ஒருவர் தன் தனிப்பட்ட வாழ்வின் காவல் அரண் எனக் கருதியே பொய் உரைக்கிறார். அல்லது அவர் பொய் உரைக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளார் என்பதை இன்றைய விவரணமாகக் கொள்ளலாம். உதாரணமாக ஒரு தெரிந்தவர் கடனாகப் பணம் கேட்கிறார். மற்றவருக்குப் புரிகிறது அவருக்கு அப்பணம் அவசியமில்லை. ஒரு அவசியமற்ற தேவைக்கு கடன் கேட்பதாக உணர்கிறார். இச்சமயத்தில் அவர் என்னிடம் பணம் உண்டு ஆனால் நான் தரமாட்டேன் என உண்மை கூறுவதிலும் பார்க்க நான் வைத்திருந்ததை அவசர தேவைக்குப் பயன்படுத்தி விட்டேன் தற்போது இல்லை எனப் பொய் கூறுவது இரு பக்கமும் சாதகமான விளைவை ஏற்படுத்தும். அதை விடுத்து உண்மை கூறவேண்டும் என்று பணம் உண்டு நான் தர விரும்பவில்லை எள்று உண்மையான உணர்வைத் தெரியப்படுத்தும் போது கோபம், நட்பு முறிவு போன்ற பாதகமான விளைவை ஏற்படுத்தும். இச் சூழ்நிலையில் கூறப்படும் பொய் தனிப்பட்ட வாழ்வை பாதுகாக்கும் செயலாக அமையும். பல ஆய்வு அறிக்கைகளின் முடிவில் ஆஏன்களை விட பெண்களே கூடுதலாக பொய் கூறுபவர்களாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பெண்களே ஆண்களை விட பொய்யினால் பாதிக்கப்படுவதாகக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

‘எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு’

பொய்யைத் தவிர்ப்பவன் சமுதாயத்தில் சான்றோனாகக் கருதப்படுவான் என்பது வள்ளுவன் வாக்கு. நாமும் அதற்கேற்ப வாழ்வோமாக!

- இரத்தினகுமார் சங்கீர்னன்

அக்காமாரும் வாத்தியாரும்.....

எனது சிறு வயது ஞாபகங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்திற்கு எனது நன்றிகள். ஏற்கனவே முன்னைய இதழ்களில் கீழ் வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆசிரியைகளை வாத்தியார் அக்காமார் என்று அழைப்பதை உடுவை தில்லைநடராஜா நினைவு கூர்ந்திருந்தார் என்பது உங்களுக்குத் தெரிந்ததே.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் K.T.John அதிபர் காலத்திலும் S.S. செல்வத்துரை அதிபர் காலத்திலும் கல்வி பயின்றேன். அவர்களின் நினைவுகள் இன்றும் பசுமரத்தாணிபோல் என மனதிலிருக்கிறது. இவர்களைப்பற்றியும், மேல் வகுப்பு ஆசிரியர்கள் பற்றியும் இறைவனுக்குச் சித்தமானால் வரும் வானவில் மலர்களில் எழுதுகிறேன். இன்று கீழ் வகுப்புப்பற்றியே எழுதுகிறேன். 1952ல் பாடசாலையில் சேர்ந்ததும் முதலில் நான் சந்தித்தது மேரியக்கா, நேசமணியக்கா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட ஆசிரியைகளைத்தான்.

இதில் நேசமணியக்கா எனது தாயாராவார். இவர் என் தாய் என்பதாலும் செல்லப்பிள்ளை என்பதாலும் நேசமணியக்காவின் வகுப்பில்தான் என் கல்வியை தொடங்கினேன். எனது ஊரிலே பலர் அவரிடமும் மேரி அக்காவிடமும் தான் தமது ஆரம்பக்கல்வியை தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. மிகவும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக சின்னத் தங்கக்கா இராசம்மா நினைவு கூறலாம். சின்னத் தங்கக்கா கணபதிப்பிள்ளை மாஸ்டரின் மனைவியாவார். இராசம்மாக்கா அதிபராக நீண்ட காலம் கடமையாற்றிய செல்லத்துரை மாஸ்டரின் மனைவியும் ஆவர். அந்த நாட்களிலேயே பிறிஸ்டல் மட்டையில் எழுதி எண், எழுத்து போன்றவையே காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். சித்திரங்களை, படங்களைக் காட்டித்தான் எங்களுக்கு விளங்கப்படுத்துவார்கள்.அந்த நாட்களில் வாய்ப்பாட்டை பாடமாக்கும் முறை ஒரு அலாதிதான். ஈரொண்டு இரண்டு. ஈரெண்டு நான்கு என்று ஒரு ராகத்துடன் பாடமாக்குவோம். ஒருவர் முன்னுக்கு நின்று சொல்ல நாங்களெல்லாம் அதைத் திருப்பிச் சொல்வோம். இந்த முறையில் படித்ததனாலோ என்னவோ இரண்டாம் வகுப்பிற்கு வரும் பொழுது வாய்ப்பாடு தலை கீழாகப் பாடம். அது இன்று எமக்கு கல்கூலேற்றரின் அவசியமின்றி மனக்கணக்குச் செய்ய உதவுகிறது என்றால் அது மிகையாகாது.

அடுத்து எனது ஞாபகத்திற்கு வருவது வேலுப்பிள்ளை வாத்தியார் ஆறுமுக வாத்தியார் இதில் எனது காலத்தில் வேலுப்பிள்ளை வாத்தியார் கீழ் வகுப்பு தலைமை ஆசிரியராக இருந்தவர். இவரை சிலர் பெரிய வாத்தியார் என்றும் கூப்பிடுவார்கள். அடுத்ததாக ஆறுமுக வாத்தியார் பற்றி கூறுவதானால் நாங்கள்

மேல்வகுப்புக்குச் சென்றபின் கீழ் வகுப்பு தலைமையாசிரியராக கடமையாற்றியவர். சைக்கிளில் வரும் அவரின் திருநீறு அணிந்த முகம் இன்றும் என் மனக்கண்முன் ஆடுகிறது. இவர்கள் இருவருமே நல்லாசிரியர்களும் தலைமைத்துவப் பண்புகளும் நிறைந்தவர்கள். இவர்களது ஊக்கத்தால் தான் எனக்கு பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றும் ஆர்வம் ஏற்பட்டது.

அடுத்ததாக கந்தவன வாத்தியார் பற்றி சொல்லலாம். மிகவும் எளிமையானவர். பாடங்களில் கூடுதல் கவனம் எடுப்பதோடு, அது மாணவர்களுக்குப் புரிந்ததா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்வார். புஷ்பமக்கா, ரட்னசிங்கம் மாஸ்ரரின் மனைவியுமாவார்.

இவர்களை நாங்கள் அக்காமாராகவும் வாத்தியாராகவும் அடையாளம் காணப்பட்டாலும நாம் மாணவர் ரீச்சர் என்றுதான் அழைத்தோம். ஆனால் ஊரில் இன்றும் நேசமணியக்காவீடு, மேரியக்காவீடு, ஆறுமுகவாத்தியார்வீடு என்றுதான் அடையாளப்படுத்தப்படுகிறது. உதாரணமாக என்னை நேசமணியக்காவின் மகன் என்றுதான் கூறுவார்கள்.

இந்த அக்காமாரையும், வாத்திமாரையும் நினைவுவரும் அதே நேரம் 4ம், 5ம் வகுப்புகளுக்குப் பொறுப்பானவர்களை நினைவு கூரல் பொருத்தமானதே. இவர்கள் மேல் வகுப்புக்குப் படிப்பித்ததனாலோ என்னவோ ரீச்சராகவும், மாஸ்ரராகவும் அடையாளப்படுத்தப்பட்டார்கள். அவர்களில் சற்குணராஜா மாஸ்டர், அருளானந்தம் ரீச்சர் சந்திரசேகரன் மாஸ்டர் ஆகியோரைக் குறிப்பிடலாம். இதில் சற்குணராஜா மாஸ்டர் புங்குடுதீவைச் சேர்ந்தவர். அருளானந்தம் ரீச்சர் அருளானந்தம் மாஸ்டரின் மனைவியாவார். சந்திரசேகர மாஸ்டர் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர்.

இதைவிட எம்பெருமான் சேர் (வரைதலும்) சரஸ் ரீச்சர் சங்கீதத்திற்கும், தம்பிராஜாமாஸ்டர் ஆங்கிலத்திற்கும் வந்து போவார்கள்.

இவர்கள் எல்லோருடைய பங்களிப்பும் இன்றும் எங்களை சமுதாயத்தில் ஒரு நல்ல இடத்தில் இருக்கக்கூடியதாக அமைந்துள்ளன. இவர்கள் பலர் அமரர்களானாலும் இன்றும் எங்கள் மனதில் முக்கிய இடங்களில் இருக்கிறார்கள். சிலரை தவற விட்டுவிட்டேனோ தெரியாது. அப்படித் தெரிந்தால் அடுத்த முறை எழுத சந்தர்ப்பம் கிடைத்தால் நிச்சயமாகக் கூறி விடைபெறுகிறேன். எமது கல்லூரிக்கு ஆக்கபூர்வமாக உதவி வரும் சுவிஸ் இதயங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

இ.முத்துரத்தினானந்தன்
முன்னாள் பிரதிப் பொதுமுகாமையாளர்
இலங்கை மின்சார சபை
பழைய மாணவர்.

இலங்கை வந்த சுவிஸ்சர்லாந்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஹோட்டல் வெஸ்டனில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி கொழும்புக்கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும், சுவிஸ்குமாருக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைத்தலைவர் உடுவை தில்லை நடராஜா விருது வழங்குவதையும் படங்களில் காணலாம். (நன்றி-வீரகேசரி)

சுவிற்ஸர்லாந்திலிருந்து இலங்கை வந்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஹோட்டல் வெஸ்ரேனில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி கொழும்புக் கிளையின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் பத்திரிகையாளர்களும் பழைய மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.
(நன்றி - தினக்குரல்)

இலங்கை வந்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் சங்க சுவிஸ்லாந்து கிளை உறுப்பினர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பில் உள்ள ஹோட்டல் வெஸ்ரேனில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்வில் பத்திரிகையாளர் ந.வித்தியாதரன், உரையாற்றுவதையும், "சுவிஸ் வானவில்" சிறப்பிதழைத் தயாரிக்க பெரிதும் ஒத்துழைத்த சுவிஸ் கணா.கணபதிப்பிள்ளை, சுவிஸ் குமார் ஆகியோருக்கு கொழும்பு கிளைத் தலைவர் உடுவை தில்லை நடராசா விருது வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (நன்றி - சுடர் ஒளி)

பண்பைக் காட்டும் பதிவொன்று



வில்லிசைக் கலைஞன் உடுப்பிட்டி யோகன்





வில்லிசைக்கலைஞன் "வானம்பாடி" **உடுப்பிட்டி யோகன்** உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சிறுவனாக இருந்த போதே ஆசிரியர் அருள்.எம்பெருமானால் அடையாளம் காணப்பட்டு, பின்னர் ஆசிரியர்.ஆனந்த ராசாவாவின் ஆதரவு பெற்று வில்லிசைக்குழுவை ஆரம்பித்தபோது, **"வானம்பாடி வில்லிசைக்குழு"** எனப்பெயரிட்டதற்கு நன்றி தெரிவித்து இணையம் ஈமெயில் எமக்குத்தெரியாத காலத்தே அனுப்பிய அஞ்சலட்டை.

சிறுவயதில் புகழோடு வாழ்ந்து-இளவயதில் இறைவனடி இணைந்த இளம் கலைஞன்! இன்றிருந்தால் வானவில் நிகழ்வுகளில் வானம்பாடியாக வில்லிசைப்பான் !!

அந்த வெற்றி நாள் - ஒரு பதிவு

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியின் நிகழ்வுகளையும் சாதனைகளையும் பார்க்கும்போது கேட்கும்போது மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் தரும் அதேவேளை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ் கென்னடி கூறிய வார்த்தைகள் என்னை உறுத்தும்

''நாடு என்ன செய்தது எனக் கேட்பதை விட்டு - நீ
உன் நாட்டுக்கு என்ன செய்தாய் என்று உன்னையே கேள்''

கல்லூரி தான் எல்லாமே தந்தது. வாழ்வில் எனக்குக் கிடைத்த இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி யாவற்றிற்கும் கல்லூரி அன்னையே மூலகாரணம் என்பதை நன்கு அறிந்தவன், உணர்ந்தவன்.

எனது கல்லூரிக் கொடி உயரப் பறந்திட்ட அந்தநாள் - 1968 டிசெம்பர் 5ம் திகதியை நினைத்து இன்னும் இனித்திடுவேன். எமது அணியினது வெற்றி நிகழ்வுக்கு ஒருபதிவு வேண்டுமென்ற அவா நிறைவேறுகிறது இங்கே...

எமது கல்லூரியிருந்து பல்கலைக்கழக விஞ்ஞானத்துறைகளுக்கு அதிகளவு அனுமதி கிடைக்கத்தொடங்கிய காலம் - விஞ்ஞானப்போட்டியில் நவீன விஞ்ஞானிக்கேடயமும் சாரணய ஜம்போரியில், உடற்பயிற்சியில் இலங்கையில் முதலிடமெனச் சாதனைப் பட்டியல் நீண்ட அதே காலத்தில் JSSA (யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்) நடாத்திய சுற்றுப் போட்டியில் உதைப்பந்தாட்டச் சம்பியனாகியதும் ஒரு வரலாற்று நிகழ்வுதான்.

உதைப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகளில் கல்லூரியில் அதிகளவு கவனம் செலுத்தப்பட்ட காலத்தில் விளையாட்டுத்துறைப் பயிற்றுவிப்பாளர்களாக, எமது எதிர்கால விழிகாட்டிகளாக, வரலாற்று நாயகர்களாகத் திகழ்ந்தவர்கள் சிலரை இங்கு குறிப்பிடாது விட முடியாது.

திரு. ஜெயராஜா விளையாட்டுத்துறை உடற்கல்வி ஆசிரியர், விளையாட்டுத்துறை முழுவதற்கும் பொறுப்பாக (Prefect of Games) இருந்தவர். உடற்பயிற்சி அணி இலங்கையில் முதலிடம் பெறவும் மெய்வல்லுனர் போட்டிகளை செவ்வனே நடத்தவும் விளையாட்டுக் கலாச்சாரம் (Sports Culture) எவ்வாறானது என்பதை வாழ்ந்து காட்டிய பெருமகன்.

திரு.நேசதுரை ஒரு பட்டதாரி ஆசிரியனாக மட்டும் இருக்கவில்லை. உதைப்பந்து, கால்ப்பந்து விளையாடுவதில் விண்ணன். ஒரு சிறந்த கோல் காப்பாளன். எமது சம்பியன் அணியின் பயிற்றுவிப்பாளன். அணியின் தலைவனாக எவ்வாறு இருக்கவேண்டுமெனச் சொல்லித் தந்தவர் ஒரு பயிற்றுவிப்பாளனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்வுகளையும் கொண்டு அணியோடு தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

திரு.சண்முகசுந்தரம் ஒரு விஞ்ஞான பட்டதாரி. இரசாயனப் பாடம் கற்பிப்பதில் அன்றும் இன்றும் முதலிடம். உதைப்பந்து, கிரிக்கெற் அணிகளின் பயிற்றுவிப்பாளர். அதேநேரம் மெய்வல்லுனர் நேரக் கணிப்பாளர்களில் முதல் வரிசையில் உள்ளவர்.

திரு.எம்பெருமான் ஆசிரியர் ஒரு பல்கலை வித்தகர். சித்திரம், நாடகம், விளையாட்டு, ஆங்கிலம் எனப் பல்துறைகளிலும் முத்திரை பதித்தவர். உதைப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளராக அவர் நடத்திய பயிற்சி வகுப்புகளின் சிறப்பை பல வருடங்களின் பின் அறிந்து கொண்டேன். 15 வருடங்களின் பின்பு விளையாட்டு அமைச்சு நடத்திய விசேட உதைப்பந்து பயிற்சியில் ஜேர்மனி பயிற்சியாளர் திரு.பாப்பே (Pape) எம்பெருமான் சேர் சொல்லித்தந்த அதே பாடத்தை நடத்தியது வியப்பைத் தந்தது. எமது ஆசான்களின் திறமைக்கு வேறென்ன சான்று வேண்டும்?

மாச் (Match) இருக்கும் தினம் எமக்கு திருவிழா நாள்தான். மைதானப் பராமரிப்பாளர் (Ground Boy) மணியண்ணைதான் பின்னணி. பந்துக்குக் காத்தடித்து, வாய்கட்டி, டபின் பூசிக் காயவைத்து ஒழுங்குபடுத்துவதே அவருக்கு ஒரு தனிக்கலை. எமது பந்து அன்று விளையாடத் தெரிவு செய்யப்பட்டால் அதிர்ஷ்டம் என்ற நம்பிக்கை. பெரிய அசிட் போத்தல்களில் ஓவல்டின், தேசிக்காய் கரைசல்கள குளுக்கோஸ் போட்ட தேசிக்காயத் துண்டுகள் தயாரிப்பதில் ஒரு தனிப்பக்குவம். எமது விளையாட்டுக்காலத்தில் மணியண்ணையும் மறக்கமுடியாத பாத்திரம்.

சண்முகாவெட்டை மைதானம் ஒரு பக்கம் மணல், பந்து உருளாது, மறுபக்க மூலை பள்ளம், மழை வந்தால் வெள்ளம், நீரிறைக்கும் யந்திரத்தினால் வெள்ளம் இறைச்சு பல தடவை மாச் விளையாடினோம். மைதான அகலம் போதாது, கோணர் அடித்தால் சில நேரம் அடுத்த பக்கத்தையும் தாண்டும். மைதானத்துக்குக் கரையிலுள்ள வேலிகளுக்குமேலாலை எமக்கு உற்சாகமூட்டும் பெண் ரசிகைகள் அந்தநேரம் மணலோ கள்ளமோ எதுவும் தெரியாது. சண்முகாவெட்டை தான் எங்கள் ஒலிம்பின் ஸ்ரேடியம். மார்சுக்கு போகும் வாகனம் தட்டிவான். பாடிப் பாடி வானிலை அடிக்க அந்த மாதிரி.... மாச் முடிந்து திரும்பி வரயுக்கை வான் கூரையிலே படுத்து வருவதில் ஒரு தனி இன்பம். இப்ப நினைத்தால் பயத்தில் தலைசுற்றும்.

வதிரித்தோல் பூட்ஸ் (Boots) தான் அந்தநாள் ஸ்பெஷல் காலணி. அடிக்கட்டைத் தோல் ஆணி அடிக்கடி கழரும். அதாலை காயங்களின் அடையாளங்கள் இப்பவும் இருக்கு.

எங்கடை கல்லூரிக் கொடி நிறங்கள் சிவப்பு, மஞ்சள், பச்சை. நாங்கள் புதிதாக வாங்கி அணிந்த யூனிபோர்ம் (Jersey) உடம்பு முழுவதம் சிவப்பு, கை பச்சை, பொக்கற் மஞ்சள் நிறம். இதுக்கு ஒரு பின்னணி இருக்கு. அதிபர் திரு. செல்லத்துரை உப அதிபர் திரு. றொபேர்ட் நவரட்ணம். அந்த நாளில் அரசியலில் ஒருபக்கம். ஆனால் விளையாட்டு ஆசானக்ள் மறுபக்கம் இவர்களிடையே ஒரு பனிப்போர் எல்லாம் கல்லூரியின் வளர்ச்சி நோக்கியேதான்.

1967ம் ஆண்டு JSSA அரை இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியிடம் தோற்று வெளியேறும்போதே சபதம் போட்டம். 1968ம் ஆண்டு மூன்றாம் தவணை முதல்நாளே சண்முகாவெட்டையிலே பயிற்சி ஆரம்பித்தது. நேசதுரை சேரின் பேச்சு இடி. அரவணைப்பு அத்தனையும் கலந்த அந்த பயிற்சியினால் அந்த வருடம் எந்த மாச்சிலும் தோல்வி இல்லை.

எமது அணியிலை ஒவ்வொரு வீரனிடமும் தனித்தனித் திறமைகள் இருந்தது. பலம் வாய்ந்த எமது அணி போன இடமெல்லாம் கலக்கியத.

சுற்றப் போட்டியில் கால், அரை, இறுதிப் போட்டிகள் அனைத்தும் துரையப்பா விளையாட்டரங்கிலே தான் நடைபெற்றது. ஒவ்வொரு மார்ச்சுக்கும் எமது கணித ஆசிரியர் எப்பிரகாம் சேர் வாடகைக் காரில் வந்து மைதானத்தின் மேற்குப் பக்கத்தில் (கோடைப் பக்கத்தில்) சிகரட்டோடு இருந்து எமக்கு உற்சாகமூட்டியதும் ஆட்டம் முடிய மைதானப்படிகளால் இறங்கி வந்து கைதந்து பாராட்டிவிட்டுப் போனதும் மறக்கமுடியாது. அந்தக் காலத்தை இன்று நினைக்க... அழுகைதான் வரும். அந்த நாட்கள் அடுத்த பிறப்பிலும் இனி வராது.

இறுதிப்போட்டிக்கு முதல்நாள் பயிற்சி முடிந்தபின் அணித்தலைவன் என்ற வகையில் நேசதுரை சேரின் அறிவுரைகள், கருங்கல்லில் செதுக்கியவையாக இன்றும் எனக்கு நல்ல ஞாபகம். மைதானத்திற்குள் எவ்வாறு உட்செல்வது,நடுவர்கள் பூவா தலையா பார்க்கும்போது இடைவேளையின் போது, போட்டி முடிவடைந்து வெளியேறும்போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்ற விளக்கங்கள் யாவுமே கல்லூரியினக் மதிப்பைப் பேணுவதற்கான கவனம் எத்தகையானது என்பதற்கான நிருபணம். எனது அணியிலிருந்த அனைவரும் திறமையான வீரர்கள். ஒத்துழைப்பு ஒன்றிணைவு அணிசேர் 'முயற்சி எல்லாம் அற்புதம்.

மாச் தினத்தன்று ஒரே பரபரப்பு. மணியண்ணையின் அன்பு கலந்த வெருட்டல்கள், ஆசிரியர்களது வாழ்த்துக்கள், நண்பர்களது வேண்டுதல்களோடு தட்டிவான் துரையப்பா விளையாட்டரங்கை நோக்கி விரைந்தது. எமக்கிடையே அமைதி - மாச்சில் வெல்ல வேண்டுமென்ற ஒரே எண்ணம் மட்டும்.....JSSA உதைப்பந்து சுற்றுப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படும். பிரபல பாடசாலைகள் அனைத்தும் தவறாது கலந்துகொள்ளும். உதைப்பந்தாட்ட ரசிகர்களுக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு உலகக் கிண்ண (World Cup)ப் போட்டி போல ஆர்வம். இச்சுற்றுப் போட்டிகள் தொடர்ந்து பல வருடங்களாக நடந்தாலும் எமது கல்லூரி இறுதிப் போட்டியில் கலந்து கொள்வது இதுதான் முதல் சந்தர்ப்பம். எம்மோடு மோதம் அணி எதிரணி நெல்லியடி மத்தியகல்லூரி. அந்த அணியில் சில வீரர்கள் இலங்கை அணியில் பின்பு விளையாடியவர்கள். இரண்டு அணிகளும் வடமராட்சியைச் சேர்ந்ததால் வடமராட்சி ரசிகர்கள் கூட்டம் விளையாட்டு அரங்கை நிறைந்ததிருந்தது.

மைதானத்துள் நுழைந்து பூவா தலையா பார்த்து, இடம் எடுத்துப்போட்டி தொடங்க இன்னும் சிறிது கணமிருக்க.....வழமையாக ஏப்ரகாம் சேர் இருக்குமிடத்தை பார்க்கிறேன். அதே இடத்தில் சிகரெட்டும் கையுமாகவிருக்கிறார் நேசதுரை சேர். ஏனைய ஆசிரியர்கள், நண்பர்கள்..... வாழ்க்கையில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஒன்றிரண்டுதான் வரும். ரசிகர்களின் கோஷம் வானை முட்டியது.

இரண்டு அணிகளும் சளைக்காது மோதின. எமது அணி முதல் கோல் போட்டது. எதிரணி வீரர்களின் மூர்க்கதனமான தாக்குதல், அவர்கள் ஒரு கோலடித்துச் சமமாக்கினர். இச்சுற்றுப்போட்டியில் இரு அணிகளும் இதுவரை தோற்கவில்லை. போட்டி முடிவும் 2 -2 எனச் சம நிலையில் முடிந்தது. நியாயமான முடிவு என இரு அணிகளும் நினைத்திருக்கும் அவ்வாறானதொரு ஆட்டம், இரு அணிகளும் சம்பியன் என அறிவிக்கப்பட்டன. இரசிகர்கள் கூட்டம் மைதானத்துள் வந்த இரு அணிவீரர்களையும் தோளில் வைத்துக் கூத்தாடினார்கள்.

ஏப்ரகாம் அதே புன்னகையுடன் வருவதைப் பார்த்தேன். அல்ல, அதனைப் பார்த்திருந்தேன். யாருடைய தோளிலோ இருந்த நான், பாய்ந்து சென்றேன். உறுதியாகக் கைகொடுத்து Welcome Captain - Weldone Boys சொன்னது இன்றும் என் மனதில் பசுமையாக.....

பாடசாலையிலிருந்து எடுத்த வந்த கல்லூரிக் கொடியை உயர்த்திப் பிடித்தபடி வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டோம். நேசதுரை சேரிடம் கொடுத்து அவரைத்தோளில் தூக்கி ஆடினோம். எமது கல்லூரித்தாயின் தலைக்கிரீடத்தில் மேலுமொரு வைரக்கல்.

கடின உழைப்பு, விடாமுயற்சினால் ஆங்கிலம், விளையாட்டு என 4 வருட விசேட பயிற்சிகள் பல்கலைக்கழகத்தில் பட்டம், பட்டமேற்படிப்பு, முதுமாணி என 6 வருடங்கள். அதனாலே கல்வியில், திட்டமிடலில் பணிப்பாளர் பதவிகள் வந்து சேர்ந்தன. வடக்குகிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகளை நடத்திய பெருமை அத்தோடு தலைமைத்துவத்தில் சுவிற்சலாந்து, ஜேர்மனி, இஸ்ரேல், பிரான்சு, நெதர்லாந்து, தாய்லாந்து, டென்மார்க் என ஏழு நாடுகளில் பயிற்சிக்கு புலமைப்பரிசில் என முழு மனிதனாக்கியது. யாவும் தந்தது என் கல்லூரி வகுப்பறைகளும் மைதானங்களும்.

எனது இப்பதிவு எனது கல்லூரி பழைய தற்போதைய எதிர்கால மாணவர்களுக்கு சமர்ப்பணமாகட்டும்.



த.அருணகிரிராஜா.



- லண்டனில் உடுப்பிட்டி மகளிர் -

வசந்தகால பசுமை நினைவுகள்

எமது கல்விக்கூடங்கள் இரண்டும் உடுப்பிட்டிக் கிராமத்திற்கும், அதை சூழ்ந்துள்ள கிராமங்களுக்கும் இரு அரும்பெரும் பொக்கிசங்களாகும். நூற்றாண்டுகள் கடந்தும் விருட்சம் போல் இன்று வரைக்கும் கிளைகள் பரப்பி நிற்கின்றன. எமது பிரதேசத்தில் ஏற்பட்ட அக்கினிப் பிரவாகச் சூழ்நிலையில் அதன் வேர்கள் அறுக்கப்பட்ட போதும் தாய்மண்ணில் நின்று அவற்றைத் தாங்கி புத்துயிர் ஊட்டி மீளவும் நிலை நிறுத்த அயராது உழைத்த புண்ணிய ஜீவன்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

எமது பாடசாலைகளில் கல்வி பயின்றவர்களில் பலர் நாட்டில் மிக முக்கிய திணைக்களங்களில் அதி உயர் பதவியில் பணியாற்றுவது எமது பாடசாலைகளுக்கு பெருமை சேர்ப்பதோடு மட்டுமல்லாது அவற்றின் மகிமையையும், கற்பிக்கும் திறனையும் எடுத்தியம்புகின்றது. பல வருடங்களின் பின் அண்மையில் என் கல்வித் தாயின் மண்ணில் என் கால்கள் பதிந்த போது கண்கள் பனித்தன. ஏன் நெஞ்சுக்குழியில் ஒரு வித அமுக்கம் ஏற்படுவதை உணர்ந்தேன். நெஞ்சு கனக்குது என்பார்களோ? அடுத்த கனம் என் மனத்திரையில் கறுப்பு வெள்ளைக் காட்சியாக பசுமையான, இனிமையான அந்த நாள் ஞாபகங்கள் உருண்டோடின. அன்றைய நுழைவாயில், அந்த தண்ணீர்குழாய், எப்போது ஒலிக்கும் எனக் காத்திருக்கும் அந்த மணி, அந்த யப்பான் மரம், அந்த 5ம் வகுப்பு நாடகமேடை, எம்மை எல்லாம் கலங்க வைக்கும் அதிபரின் அலுவலகம், யன்னல் கம்பிகளின் இடுக்கே தெரியும் வினாயகமூர்த்திமாஸ்ரரின் முகம், அவர் காணும் முன்பே அவ்விடத்தைத் தாண்டும் அனுபவம், மணியண்ணையின் சிற்றுண்டிச்சாலை, அந்த விஞ்ஞானகூடங்கள் இவையெல்லாம் எங்கே? எங்கே? ஓ! கால்நூற்றாண்டின் பின் அல்லவா என் கல்வித்தாயை தரிசிக்க வந்திருக்கின்றேன் என்ற கூச்ச உணர்வோடு என்னைச் சுதாகரித்துக் கொண்டேன். அடுத்த கனமே உன் கல்வித்தாய்க்கு நீ என்ன செய்தாய் என எங்கிருந்தோ ஒரு அசரீதிக் குரல் என் காதுகளில் ஒலித்தது. ஒரு கணம் மௌனித்து குற்ற உணர்வோடு தலைகுனிந்தேன். உண்மைதான் நம்மில் எத்தனை பேர் எமக்கெல்லாம் கல்வியூட்டிய தாயை திரும்பிப் பார்த்தோம். குறைந்தது அவள் நலமாக, வளமாக இருக்கின்றாளா என்ற சேதி அறிய முயற்சித்தோம்.

கடந்த வருட பரிசளிப்பு விழாவில் கலந்து அதை கண்டு களிக்கும் சந்தர்ப்பம் கிடைத்த போது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். குறைந்த வசதிகளைக் கொண்டு மிகவும் நேர்த்தியாகவும், தரமாகவும் விழாவை நடாத்தியமை என்னை மிகவும் கவர்ந்தது. எல்லோருடைய ஒற்றுமையும், ஒத்துழைப்பும், புரிந்துணர்வுமே அவ்விழாவிற்கு மிகவும் பக்க பலமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக அதிபர் திரு.தர்மலிங்கம் அவர்கள் எந்தவித சஞ்சலமும் இன்றி எல்லோரையும் உள்வாங்கி அனுசரித்து, உபசரித்துச் செல்வது மட்டுமல்லாமல் மிகவும் எளிமையான, மற்றவர்களை மதிக்கும் மனிதராகப் பார்த்த போது என்னை வியப்படைய வைத்தது.

சுவிஸில் எமது இரு பாடசாலைகளின் பால் அன்பும், அக்கறையும் கொண்ட நல்ல உள்ளங்களால் பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டு இங்கு வசிக்கும் இரு கல்லூரிகளின் பழைய மாணவ, மாணவிகளை ஒருங்கிணைத்து நாம் கல்வி கற்ற கல்விக்கூடங்களிற்குக் எம்மால் இயன்றதைச் செய்வதற்குக் ஓர் அரிய வாய்ப்பினை வழங்கித் தன் பணியினை மிகவும்

நேர்த்தியாகவும், செழுமையாகவும், நெறிப்படவும் ஆற்றி 6ம் ஆண்டில் காலடி பதித்துள்ளது. குறிப்பாக என்னையும் இதில் இணைத்துக் கொள்வதற்கு உந்துதலாக இருந்த திரு. கணபதிப்பிள்ளை (கணா), மற்றும் எல்லோருக்கும் இம் மலர் ஊடாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுவிஸ் பழைய மாணவர் சங்கக்கிளை வருடம் தோறும் வானவில் விழாவை மிகவும் சிறப்பாக நடாத்துவதுடன் அவ்விழாவின் ஊடாக புலம்பெயர் தேசத்தில் விரைந்த வாழ்க்கை ஓட்டத்தின் மத்தியில் நாம் எல்லோரும் சந்தித்துக் கொள்வதற்கும், அந்தப் பள்ளிப் பருவ இனிமையான, பசுமையான நாட்களை நினைவில் மீட்டிப் பார்ப்பதற்கும் மட்டுமல்லாது எமது அடுத்த தலைமுறையினரை எமது கல்லூரிகளின் பால் ஈர்ப்பதற்கும், அவர்களிற்குக் எமது கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை எடுத்தியம்புவதற்கும் வழி சமைக்கின்றது.

கடந்த வருட வானவில் விழாவில் எங்கள் தந்தை அமரர் திரு. பண்டிதர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை அவர்களின் 37 வருடகால கல்விச் சேவைக்காகவும், கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிக்காகவும் அவரை நினைவு கூர்ந்து பாராட்டி இருந்தார்கள். திரு. சந்திரசேகரம்பிள்ளை ஆசிரியரையும் பாராட்டியிருந்தார்கள். இந்த நிகழ்வு எமது சங்கத்தின் மனிதநேய வெளிப்பாட்டை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டியது. இத்தருணத்தில் பழைய மாணவர் சங்க சுவிஸ்கிளை நிர்வாகத்தினருக்கும், அச்சங்கம் சார்ந்த அனைவருக்கும் அன்னாரின் குடும்பத்தின் சிரம் தாழ்த்திய வணக்கத்தையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதோடு எனது நினைவுகளையும் இம் மலரில் பதிவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

வேலுப்பிள்ளை ஞானேஸ்வரன்
முன்னாள் உபதலைவர்

சாதனைகள்

தூரம்பாய்தல்

மிருகங்களில் அதி கூடிய தூரம் பாயும் மிருகமாக கங்காரு உள்ளது. இது அதிகூடிய தூரமாக 13 மீட்டர் பாய்ந்தாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. Australia இல் இம் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தூரம் பாயும் மனித சாதனையாக உலகில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளமை Mike Powel என்ற அமெரிக்க வீரர் செய்த சாதனையே. இவர் 1991 ம் ஆண்டு 8.95 மீட்டர் பாய்ந்தமையே அதே போல கலீனா என்ற ரஷ்சியப் பெண் பாய்ந்த 7.52 மீட்டர் ஆகும்.

கடமை

தொன்றுதொட்டு மனித இனம் பூமியில் நாகரீமடைய மூலகாரணமாக இருக்கும் விடயங்களில் **கடமை** என்னும் பதமும் ஒன்று என்றால் அது மிகையாகாது. அவரவர் செய்யவேண்டிய பணிகளை உரிய காலத்தில் செவ்வனே செய்து முடித்தலே கடமை என சுருங்கப் பொருட்படுத்தலாம்.

மனிதகுலத்தின் கடமை அன்னையிலிருந்தே ஆரம்பிக்கிறது. ஈன்றெடுத்த அன்னையானவள் தன் பெற்ற மழலையை எந்த பிரதிபலனையும் நோக்கில் கொள்ளாது ஊணுறக்கத்தை மறந்து பேணி வளர்க்கின்றாள். ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாலும் குழந்தை அழுகிறது என்றால் துள்ளி எழுகின்றாள். இது இயற்கை தாய்மைக்கு கொடுத்த கடமை உணர்வு. வானத்தில் வட்டமிடும் பருந்துகளின் மூலம் குஞ்சுகளுக்கு ஆபத்து வருமென அறிந்து கோழி தன் குஞ்சுகளை எப்படியெல்லாம் பாதுகாக்கிறது என்பதனை பார்க்கும்போது இயற்கை ஐந்தறிவு ஜீவன்களுக்குக் கூட கடமையுணர்வை எப்படி ஊட்டியிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

தாய்க்கு அடுத்ததாக தந்தையின் கடமை. ஒவ்வொரு குடும்பத்திலும் கண்கூடாகத் தெரியும் விடயம்.

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

எனும் குறளின் மூலம் வள்ளுவன் தந்தையின் கடமையை தெள்ளத் தெளிவாக விளக்கியிருக்கிறான்.

ஆசிரியர் என்பவரின் கடமை சமுதாயத்தின் அத்திவாரமாக திகழ்கிறது. இன்று நாம் சமுதாயத்தில் காண்கின்ற ஒவ்வொருவரும் அன்று ஆசிரியர் என்கின்ற சிப்பியால் செதுக்கப்பட்டவர்கள். அந்த சிப்பிகளின் கலைக்கூடமாக திகழ்வது பாடசாலை. அந்த வகையில் எம்மையெல்லாம் செதுக்கிய சிற்பக் கூடங்களாகிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மற்றும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்காக பழைய மாணவர்களாகிய நாம் அவைக்காக விழா எடுப்பதும் அவற்றின் வளர்ச்சிக்காக பாடுபடுவதும்

''நின்றுதளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைதலையாலே தான் தருதலால்''

என ஔவை மூதுரையில் குறிப்பிடுவதற்கு ஒப்பானது.

அன்று சமுதாயத்தில் அங்கமாக உள்ள ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை எப்படி செய்தார்கள் என்பதை பொறுத்துதான் இன்று நாம் படிக்கும் சரித்திரம் அமைந்திருக்கிறது. செய்யவேண்டியவற்றை உரிய முறையில் செய்ததால் மாத்திரம் சரித்திரத்தில் மாற்றங்கள் ஏற்படவில்லை. செய்யவேண்டியவற்றை உரிய முறையில் செய்யாததனாலும் சரித்திரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டதை நாம் காண்கின்றோம்.

உலகத்திலே புகழ்பெற்ற கிரேக்க நாகரீகம் வீழ்வதற்கும் அவர் வழிவந்த கிரேக்கநாடு அண்மையில் பொருளாதாரத்தில் வங்குரோத்து நிலையை அடைந்ததும், தற்போது அது ஏனைய ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார உதவியில் தங்கியிருப்பதும், தலைவர்களாக இருந்தவர்கள் தமது கடமைகளை உரிய காலத்தில் சரிவர செய்யாததன் விளைவே ஆகும்.

இன்று நாம் வாழும் மேலைத்தேய நாடுகளில், அவர்களின் வளர்ச்சிகளில் பொதிந்துள்ள இரகசியம் **அனைவரும் தத்தம் கடமைகளை சரிவர செய்து முடித்தல்** என்பதே. நாட்டை ஆள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதியிலிருந்து வீதியைத் துப்பரவு செய்யும் தொழிலாளி வரை தம் கடமைகளை சரிவரச் செய்யும் நாடுதான் முன்னேறிய நாடுகளாக இருக்கின்றன.

ஆகவே **எம் உணர்வு எம் கையில்** என்பதன் உட்பொருள் எமது முன்னேற்றத் திற்கான எம் கடமைகளை நாம் சரிவர செய்ய வேண்டுமென்பதே.



இந்திரசித்து சிவசோதிலிங்கம்
பழைய மாணவன்
உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி
சூறிச்
சுவிற்சர்லாந்து.

வெள்ளவத்தை பஸ் நிலையத்தில் நின்றவருக்கு மற்றவர் சொன்னார் :-

"நீங்க கோல் றோட்டாலை நேரே போனால் பம்பலப்பிட்டி வரும்"

நின்றவர் கன நேரமாக அசையாமல் நிற்பதைக்கவனித்த பின் மற்றவர் கேட்டார் :-

"ஏன் நீங்க பம்பலப்பிட்டிக்குப் போகயில்லையா?"

நின்றவர் சொன்னார்:-

"நீங்க தானே சொன்னீங்க - பம்பலப்பிட்டி வரும் எண்டு. அது தான் நான் நிக்கிறன்"

வருங்காலத்திற்கான சக்தி வழங்கும் முதல்கள்

மனித நாகரீகங்கள், மனித வாழ்க்கைத் தரங்கள் முன்னேற்றமடைவதற்கும், அவற்றைக் குறையவிடாது பேணுவதற்கும் சக்தி வழங்கும் முதல்கள் (Sources of energy) தொடர்ச்சியாகக் குறைவடையாமல் இருப்பது அவசியமாகும். போதிய அளவிற்குச் சக்தியைப் பயன்படுத்துவதனாலேயே நாகரீகம் இப்போதய வளர்ச்சியடைந்த நிலையில் இருக்கின்றது. நாகரீகம் வளர்ச்சியடைவதற்கு முக்கிய காரணியாக இருந்தது கைத்தொழில் புரட்சியாகும்.

கைத்தொழில் பரட்சி ஏற்படும்வரை மனிதனதும் விலங்குகளினதும் வேலைகள், காற்றையும் நீரையும் கட்டுப்படுத்தி உபயோகத்திற்குக் கொண்டு வருதல் ஆகியன நாகரீகத்திற்குரிய பிரதான சக்தி வழங்கல்களாக இருந்தன. கைத்தொழில் புரட்சி விருத்தியடைவதற்கு முக்கிய காரணியாக இருந்தது நிலக்கரியும், பெற்றோலிய எண்ணெய்களுமாகிய சுவட்டு எரிபொருட்களாகும். ஆரம்ப காலத்தில் வீடுகளிலும் கைத்தொழில்களிலும் நிலக்கரிதான் வெப்பத்திற்கும் வலுவிற்கும் பயன்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் மிகக்குறைவாக இருந்த நிலக்கரியின் பயன்பாடு, கைத்தொழில் புரட்சியின் உத்வேகம் முனைப்படைந்தபோது விரைவாக அதிகரித்தது.

இருபதாம் ஆண்டின் முற்பகுதியிலேயே பெற்றோலிய எண்ணெய் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. புதிய, புதிய கண்டுபிடிப்புகள் மிக விரைவாகப் பெருகின. எண்ணெய் மிக அதிக அளவில் மலிவாகக் கிடைத்தது. இந்த எண்ணெய் இல்லாதிருந்திருப்பின் அகத்தகன இயந்திரம் ஒருபோதும் கிடைத்திருக்க முடியாது. மேலும் நிலம், நீர், வான் போக்குவரத்துக்களில் ஒருபோதும் புரட்சியும் ஏற்பட்டிருக்க மாட்டாது. பல கைத்தொழில்களுக்கும், வீட்டுத்தேவைகளுக்கும் எண்ணெய்தான் மிக வசதியான எரிபொருளாக வந்தது. பல சேதன இரசாயனப் பதார்த்தங்களின் கைத்தொழில் தயாரிப்புகளுக்குரிய அடிப்படைப் பதனிடப்படாத பதார்த்தமாகவும் அது அமைந்தது. ஆதலினால் அதன் நுகர்வு எல்லையை மீறி உயர்ந்து சென்றது. 1960ஆம் ஆண்டளவில் அனேக கைத்தொழில் நாடுகளில் மிக முக்கியமான சக்தியின் மூலப்பொருளாக எண்ணெய் நிலக்கரியின் பாவனையை ஏறக்குறைய முற்றாக நீக்கிவிட்டது. பத்து வருடங்களின் பின் புதிய எண்ணெய்க் கிணறுகள் கண்டுபிடிக்கப்படுவதைவிட எண்ணெயின் நுகர்வு வீதம் மிக அதிகளவாக இருக்கக் காணப்பட்டது. வருங்கால சக்தியின் தேவை தொடர்ந்து இவ்வாறு இருக்கமாட்டாது என்பதற்கான முதலாவது அபாய அறிவிப்பாக இது இருந்தது. பூமியின் கீழ்ப் பகுதியில் ஒரு குறித்தளவு எண்ணெய் தான் இருக்கின்றது. 1970ம் ஆண்டு வரை 15% நுகரப்பட்ட எண்ணெய் அடுத்த பத்து ஆண்டுகளில் மேலும் 15% நுகரப்பட்டது. இப்போது அதன் நுகர்வு வீதம் மேலும் அதிகரித்துள்ளது. 2050ம் ஆண்டிற்குமுன் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து எண்ணெய் வழங்கல் நின்றுவிடும் என மதிப்பிட்டிருக்கிறார்கள்.

நிலக்கரியின் நிலை இந்த அளவிற்கு மோசமானதாக இல்லை. ஏனெனில் நுகர்வின் அளவு மிகக் குறைவு, மற்றது எண்ணெயின் அளவை விட அது ஏறக்குறைய இருபது மடங்கு கூடியதாய் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எப்படியிருந்தாலும் 2500ம் ஆண்டளவில் 80% நிலக்கரி நுகரப்பட்டு விடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆதலினால் எமக்குக் கிடைக்கக் கூடிய இச்சக்தி

வழங்கல் முதல்களை இப்பவேனும் பாதுகாக்கத் தொடங்குவது இன்றியமையாததாகும். எமது சிந்தனையில்லாத மேலதிக நுகர்வுகளுக்குப் பதிலாக, புத்திசாலித்தனமான எரிபொருட்களின் பாவனைக்கு நாம் நமது எண்ணங்களைத் திருப்புதல் அவசியமாகின்றது. அர்த்தமற்ற, அனாவசியமான, சக்தி வீணாக்கல்களை நாம் தவிர்க்க முயலவேண்டும். அதில் ஒன்று - வீடுகளில், காரியாலயங்களில், பாடசாலைகளில், தொழிற்சாலைகளில் மேலதிக மின்பாவனைகளும், மேலதிக வெப்பமேற்றல்களும் கையாளப்படுகின்றன. உதாரணமாகக் கைத்தொழில் வளர்ச்சியடைந்த குளிர் நாடுகளில் கட்டிடங்களை வெப்பமாக்குவதற்கு அதிகளவு சக்தி பயன்படுத்தப்படுகின்றது. வீடுகளைத் தகுந்த முறையில் காவலிடுவதன் மூலமும், வீட்டினுள் அதிக சொகுசைத் தரும் வழமையான வெப்பநிலையை விட, தாங்கக் கூடிய சிறிதளவு குறைந்த வெப்பநிலையை, பக்குவமடைந்த மனத்துடன் அதை ஏற்றுக் கொண்டு கையாளுவதன் மூலமும் பயன்படுத்தும் சக்தியின் அளவை ஏறறக்குறைய 20% இனால் குறைக்கக் கூடியதாய் இருக்கும் எனக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் மிக அதிகளவு வீணான எரிபொருள் பாவனையாளர்களில் மிக முக்கியமான ஒன்று தனியார் வாகனங்கள் போன்றவையாகும். இவ்வாகனங்களில் 10 - 20% வரையிலான எரிபொருள் மாத்திரம் வாகனத்தை இயக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. மின்சக்தியினால் வாகனம் இயக்கப்படும்போது சக்தியின் வீண்விரயம் குறைவாக இருக்கும். வருங்காலத்தில் இவ்வாகனங்களிலிருக்கும் குறைந்த வினைத்திறன் உடைய அகத்தகன இயந்திரங்களை மின்கலங்கள் ஒதுக்கித்தள்ளும் என நாம் நம்பலாம்.

கைத்தொழில்களில், மின்சக்தி பிறப்பித்தலில், வீடுகளை வெப்பமேற்றலில், வாகனங்களை இயக்குவதில், விலைமதிக்க முடியாத எண்ணெய், எதிர்பார்க்க முடியாத அளவிற்கு வீண்விரயம் செய்யப்படுகின்றது. இத்தேவைகளுக்கு எண்ணெயின் பெறுமதி ஆகவும் கூடியதாக உள்ளது.

ஏனெனில் மனிதனுக்குத் தற்சமயம் அவசியம் தேவைப்படும் மருந்து வகைகள், கிருமிநாசினிகள், சாயப்பொருட்கள், செயற்கை நார்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு எண்ணெயை ஒரு வழங்கும் முதலாகக் கட்டாயம் பாதுகாக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. மின்னை உருவாக்குவதற்கு நிலக்கரியும் பயன்படுத்தலாம். ஆதலினால் மின்பிறப்பாக்கலுக்கு எண்ணெய்க்குப் பதிலாக நிலக்கரியைப் பயன்படுத்தல் ஒரு பொருத்தமான சிந்தனையாகும். ஆனால் கூடிக்கொண்டு வந்த மின்சக்திக்கான கிராக்கி, அணுஉலைகளினால் மின் உருவாக்கலை வேண்டுகின்றது. எண்ணெயிலிருந்து மின் உருவாக்கலைவிட, அணு உலைகளினால் மின் உருவாக்கல் மலிவாக இருக்கின்றது. வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளில் அணு உலைகளிலிருந்தே 50% இலும் கூடிய அளவு மின்சக்தி பெற்றுக் கொள்கிறார்கள். சுவட்டு எரிபொருட்களும் அணுச் சக்திக்கான யுரேனிய தாதுப்பொருட்களும் வரையறுக்கப்பட்ட முதலீட்டு மூலவளங்களாகும். இவை விரைவாகக் குறைந்து கொண்டு போகும் சக்திவழங்கும் முதல்களாகும். இந்தக் குறைந்து கொண்டு போகும் பிரச்சினைக்கு இப்போது நாம் முகம்கொடுக்க வேண்டியுள்ளோம். இதற்காக வருங்காலச் சக்திவழங்களுக்கான பல்வேறு வகையான சாத்தியக்கூறுகள் சிந்திக்கப்பட்டுள்ளன.

நீர் மின்னிலையங்களினால் உருவாக்கப்படும் மின்சக்தியின் அளவு இவ்வுலகத்தில் 1% ஆகவே இருக்கின்றது. பல இடங்களில் இவ்வாறு மின் உருவாக்கலை அதிகரிக்கக் கூடிய

வாய்ப்புகள் உண்டு. நீர் மின் உருவக்கம் பிரதானமாக அது இருக்கும் இடத்துக்குரியதாகவே இருக்கும். உகந்த எல்லா இடங்களிலும் இதை விருத்தி செய்வதன் மூலம் நீர் மின் உருவாக்கத்தை இருமடங்கு அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடலில் ஏற்படும் உயர்தலும், வற்றலும் அதிகளவு சக்தியைக் கொண்டுள்ளது. தாழ்கதியுடைய மின் பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தி இச்சக்தியையும் மின்சக்தியாக மாற்றலாம். ஆனால் இது ஒரு சிறந்த சக்தி முதலாக இருக்காது எனக் கருதுகிறார்கள்.

சூரியனிலிருந்து நேரடியாகப் பெறப்படும் கதிர்வீசல்தான் எங்களுக்குக் கிடைக்கக் கூடிய, வற்றாத, மிகப்பெரிய சக்தி வழங்கல் முதலாகும். அரிசோனா பாலைவனத்தில் விழும் சூரியசக்தியின் ஏறக்குறைய 1/10 பங்கு, முழு ஐக்கிய அமெரிக்காவுக்குமான சக்தியை வழங்கப்போதுமானதாகும் என விஞ்ஞானிகள் கணித்திருக்கிறார்கள். இருந்தும் சூரியக் கலங்களின் விலை மிக உயர்வாக இருப்பதனால் சூரியக் கதிர்வீசலை நேரடியாகப் பயன்படுத்திச் சக்திபெறுதல் மிகக் குறைவாகவே இப்போது உள்ளது. சூரிய சக்தியை ஒரு தகுந்த சக்தி முதலாக மாற்றுவதற்கான, ஒரு உகந்த, மலிவானமுறை ஒன்றை வளர்ச்சிக்குட்பட்ட தொழில்நுட்பம் இதுவரை வழங்க முடியவில்லை.

ஏனைய எரிபொருட்களைவிட ஒரு அலகுத் திணிவுக்கு அதிகளவு கூடிய வெப்பத்தை, ஐதரசன்வாயு கொடுக்கின்றது. வருங்காலத்தில் ஐதரசன் ஒரு எரிபொருளாக, கூடிய பங்கெடுக்கும் சாத்தியக் கூறுகள் அதிக அளவிற்குக் காணப்படுகின்றது. அதாவது வாயு நிலையில், இந்த நூற்றாண்டிற்கான, விருப்பத்திற்குரிய எரிபொருளாக இருக்கக் கூடும். இது எரியும்போது நீர் மாத்திரம் விளைவாகப் பெறப்படும். இது சூழலை மாசுபடுத்தாது. ஆனால் இப்போது அதிகளவு பயன்பாட்டிலுள்ள சுவட்டு எரிபொருட்களினாலும் அணு உலைக்கழிவுகளினாலும் எமது சூழல் அதிகளவு மாசடைதலுக்குபட்டுக் கொண்டிருக்கிறது.

ஐதரசன் எரியக் கூடியவிதத்தில் தானியங்கு ஊர்திகளின் இயந்திரங்கள் மாற்றியமைக்கக் கூடியதாக வரலாம். இப்போது மாதிரி வாகனங்கள் தாயரிக்கப்பட்டு பரீட்சார்த்த நிலையில் உள்ளன. ஆனால் இதிலுள்ள முக்கிய பிரச்சினை என்னவெனில் எண்ணெயைப் போல் இது ஒரு ஆரம்ப சக்தி முதல் அல்ல. மற்றய சக்தி முதல்களைப் பயன்படுத்தியே இதைப் பெறவேண்டியுள்ளது. இப்போது நிலக்கரியையும் கீரையும் அல்லது ஐதரோகாபனையும் நீரையும் பயன்படுத்தியே, ஐதரசன் பெறப்படுகிறது. அணு உலைகளிலிருந்து அல்லது சூரிய ஒளிர்மின்கலங்களிலிருந்து பெறப்படும் மின் சக்தியைச் சக்தி மூலமாகப் பயன்படுத்தி, மின்பகுப்பதன் மூலம் நீரிலிருந்து ஐதரசன் பெறப்படலாம். இப்போது தகுந்த ஒளி இரசாயனத் தாக்கங்களின் மேல் சூரிய சக்தியை நேரடியாகப் பயன்படுத்தி நீரை ஐதரசனாகவும் ஒட்சிசனாகவும் மாற்றவதற்கு ஆய்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் பச்சைத் தாவரங்கள் சூரிய சக்தியைப் பயன்படுத்தும் அளவை விடக்கூடிய வினைத்திறனுடன் சூரிய சக்தியை இரசாயன சக்தியாக மாற்றுவதற்குச் சில வழிமுறைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இம்முறைகளைப் பயன்படுத்தியும் ஐதரசனை அதிக அளவிலும் மலிவாகவும் தயாரிக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். எனினும் போட்டியிடக்கூடிய விதத்தில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி மலிவாக ஐதரசனைத் தயாரித்தல், இப்போது நாம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சனையாகவே இருக்கின்றது.

1992 அந்தநாள் நடந்தனவை

ஒளிவிழா

வாணிவிழா

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பதிவுகளிலிருந்து...

முடிவுறமாட்டாத சூரிய சக்தி அணுக்கரு உருகலின் மூலமே வருகின்றது. ஒரு ஐதரசன் குண்டு வெடிக்கும்போது எவ்வாறு சக்தி உருவாகின்றதோ, சரியாக அதுபோலவே சூரிய சக்தியும் உருவாகிறது. மிக மிக உயர்ந்த அமுக்கங்களிலும், மிக மிக உயர்ந்த வெப்பநிலைகளிலும் சடப்பொருட்கள் மோதுகைக்குட்படுவதனாலேயே கரு உருகல் நிகழ்கிறது. மிகச் சிறிய அணுக்களோ கரு உருகலுக்குட்படக் கூடியதாய் இருக்கும். சூரிய சக்தியின் பெரும்பகுதி, பாரஐதரசன் அணுக்கள் (துத்தேரியம்) உருகலுக்குட்பட்டு ஈலியம் அணுக்கள் உருவாவதனாலேயே தோன்றுகின்றது. இந்த உருகல் முறையினால் சூரியனின் மேற்பரப்பிலிருந்து ஒரு வருடத்தில் காணப்படும் சூரிய சக்தி 250 மில்லியன் மில்லியன் மில்லியன் தொன்களின் எண்ணெயின் சக்திக்குச் சமனாகும் எனக் கணித்திருக்கிறார்கள்.

இப்புவியின் மேற்பரப்பில் இத்தகைய உருகலினால் பெறப்படும் சக்தியைக் கட்டுப்படுத்தி உபயோகத்திற்குக் கொண்டுவர முடியுமானால் மாத்திரம், நாம் எப்போதைக்குமான, எமது சக்திப் பிரச்சினையைத் தீர்த்து விட்டதாகக் கருதக் கூடியதாய் இருக்கும். ஒரு தொன் கடல் நீரில் 34 பதுத்தேரியம் காணப்படுகிறது. இது 200 தொன் எண்ணெயினால் உருவாக்கப்படும் சக்திக்குச் சமமானது. இதிலுள்ள மற்றைய நன்மை என்னவென்றால் கரு உருகலின்போது உண்டாகும் விளைவுகள், அணு உலைகளில் உண்டாகும் விளைவுகளைப் போல் கதிர்த்தொழிற்பாடு உடையவையல்ல. ஆதலினால் சூழல் மாசடையும் வாய்ப்பே இல்லை. உண்மையில் இனி எப்போதாவது, இத்தகைய கட்டுப்படுத்தி அடக்கி ஆளக்கூடிய கரு உருகல் முறை, சாத்தியமாகுமா என்பதை எதிர்வு கூற முடியாது. இதிலுள்ள முக்கிய பிரச்சனை என்னவெனில் கரு உருகலை நிகழ்த்துவதற்கு 120 மில்லியன் பாகை செல்சியஸ் வெப்பநிலை தேவை. அதாவது ஒரு அணுக்குணடு வெடிக்கும் போது தோன்றும் வெப்பநிலையாகும். இதுவரை இத்தகைய உயர்த்தப்பட்ட வெப்பநிலைகள் அடையப்படாவிடினும் கருஉருகல் தாக்கங்களைத் தொடர்ந்து பேணக்கூடிய வெப்பநிலைகளுக்குக் கிட்டிய வெப்பநிலைகள் பரிசோதனை ரீதியில் அடையப்பட்டுள்ளன. இதற்கான பூரணதாக நிபந்தனைகள் கிட்டிய காலங்களில் அடைய முடியும் என நினைக்க கூடியதாய் இருக்கின்றது.

அணுக்குண்டு வெடித்தலின்போது உண்டாகிய அதிகளவு சக்தியை அடக்கி ஆள்வதற்கு அணு உலைகள் உருவாகியது போல், ஐதரசன் குண்டு வெடித்தலின்போது உண்டாகும் அளப்பெரிய சக்தியை அடக்கி ஆள்வதற்கு மிக விரைவாக விருத்தியடைந்து வரும் தொழில்நுட்பம், கிட்டிய வருங்காலத்திலேனும் ஒரு விடை பகருமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆதலினால்

எல்லையில்லா சக்தியைக் கொண்டிருக்கக் கூடிய உலகம் இதுவரை ஒரு கனவாக இருப்பதனால், அதுவரை எங்களுடைய வரையறுக்கப்பட்ட சக்தி மூலங்களை கூடிய புத்திசாலித்தனத்துடனும், கூடிய வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நாம் கற்றுக் கொள்ள இனியேனும் தெண்டிக்க வேண்டும்.



சண்முகசுந்தரம் ஆசிரியர்
(ஓய்வுநிலை)

"தகவல் திரட்டு" வேலைகள் ஆரம்பம்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கடந்த காலங்களில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுடன்... கல்லூரிகளில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள்.

சாதனைகள் புகழ் தேடித்தந்த மாணவர்கள் தொடர்பான விபரங்களையும் படங்களையும் தந்துதவுமாறு கேட்டபோது ஆசிரியர்.இ.பஞ்சநாதன் தொகுத்துத் தந்த விபரங்கள் இது:

இதனை முழுமைப்படுத்தி பயன்மிக்க ஆவணப்பதிவாக்க வேண்டியது நமது கடமை.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக்கிளை.

AMC STAFF
Teachers of AMC from 1939-1960 prepared by Mr.E.Panchnathan

No	Name	Details	Place
1.	Mr.K.T.John	Principal	Kerala
2.	Mr.V.R.Rajaratnam	Eng.General	Uduppiddy
3.	Mr.V.Sivapragasam	Tamil,Geog,Health	Valvettiturai
4.	Mr.K.Kanapathipillai	Maths	Thambasiddy
5.	Mr.RichardSubramaniam	Genaral Subject	Urikkadu
6.	Mr.C.Krishnar	Tamil	Valvetty
7.	Mr.S.Thambu	Art	Atchuvely
8.	Miss.PavalamKathirgamathamby	English	Immyanan
9.	Miss.PathmaGnanapiragasam	English	Uduppiddy
10.	Mr.S.R.Navaratnam	First Scienec Teacher	Uduppiddy
11.	Mr.S.S.Selvadurai	Maths,Chemisty	Kaluvam
12.	Mr.R.Singaratnnam	English,maths	Udupiiiddy
13.	Mr,T.Abraham	Maths.Physics	Vaddukoddai
14.	Mr.Soosaipillai	English	Ilavalai
15.	Mr.R.Gnanasampanthar	English,History	Manipay
16.	Mr.K.P.Ponnambalam	English,General	Mailiddy
17.	Mr.M.Velluppillai	English,general	Uduppiddy
18.	Mr.P.B.L.Leelawansa	Sinhala	Homagama
19.	Mr.S.Veluppillaai	Panditthar,Tamil	Uduppiddy
20.	Mr.K.M.Mathew	Bio.Science	Kerela
21	Mr.Arumuganathan	Eng.General	Karainagar
22.	Mr.Ratnasingam	English,Latin	Tellippalai

23.	Mr.V.Sittambalam	General	Mathgal
24.	Mr.M.Arulanandan	English,General	Uduppiddy
25.	Mr.C.Vinayagamoorthy	English	Karaveddy
26.	Mr.K.Kanagasabai	Vidvan,Tamil	Karaveddy
27.	Mr.S.Arumugam	General	Karaveddy
28.	Mr.K.Senthinathan	Tamil,General	Vathiri
29.	Mrs.Packiam Sinnathamby	General	Uduppiddy
30.	Mr.V.Ratnam	Head Master,Lower School	Uduppiddy
31.	Mr.K.Velluppillai	,, ,,, ,,	Uduppiddy
32.	Mr.k.Arumugam	Tamil Trained	Uduppiddy
33.	Mrs.Pushpam Ratnasingam	Tamil Trained	Uduppiddy
34.	Mrs.NesamanyRajaratanam	Tamil Trained	Uduppiddy
35.	Mrs.R.Selvadurai	Tamil Trained	Kaluvam
36.	Mrs.P.S.Kanapaathipillai	Tamil Trained	Kalluvam
37.	Mr.S.S.Kanapathippillai	Geog,Tamil,English	Kalluvam
38.	Mrs.Mary.Edward	Tamil Trained	Uduppiddy
39.	Mr.s.Thillainadarajah	English,History	Vaveettithuai
40.	Mr.E.J.Phillip	Maths,Science	Kerala
41.	Mr.K.C.Jacob	Maths,Science	Kerala
42.	Mr.V.S.C.Ratnasingam	Maths.arithmetic	Uduppiddy
43.	Mrs,Arumairatnam	Science	Tellippalai
44.	Mr.Thangarajah	Health	Cha aakachchri
45.	Mr.R.Vijeratnam	Maths,Science	Uduppiddy
46.	Miss.R.Kathirgamathamby	Art	Imyanan
47.	Mr.E.Panchanathan	Maths,Science	Uduppiddy
48.	Mr.V.Thambirajah	English	Immyanan
49.	Mrs.RuckmaniAriyaratnam	Maths	Valvettiturai
50.	Mr.K.Kunasingam	Maths,Science	Earlaai
51.	Mr.R.Kanadavanam	TamilTrained	Uduppiddy
52.	Mr.K.Chandrasegaram	TamilTrained	Uduppiddy
53.	Mr.N.R.Balasingam	English Upper School	Kudathanai
54.	Mr.N.S.Ratnasingam	English,General	Urumbirai
55.	Mrs. Ratnasingam		Urumbirai
56.	Mr.N.Thisaiveerasingam	General	Uduppiddy
57.	Miss.Richard	Maths	Uduvil
58.	Mrs.S.Thisaiveerasingam	English	Valvetty
59.	Mr.A.Jeyaraah	Phisical	Uduppiddy
60.	Mr.S.Sivakolunthu	History,Tamil	Uduppiddy
61.	Mr.V.K.Nallaiah	Science,Bio	Valvetty
62.	Mr.Thillaiyampalam	Maths	Uduppiddy
63.	Mrs.KamaladevyVaithialingam	General	Uduppiddy
64.	Miss.Saraswathithevy Vaithilingam	Music	Uduppiddy
65.	Mr.RagavanIyar	English	Jaffna Town
66.	Mrs.SaraswathyRagavan	English,General	JaffnaTown

67.	Mr.K.Annalingam	Maths,Science	Uduppiddy
68.	Mr.K.Thanigasalam	Chemistry,Science	Karanavai
69.	Mr.K.Shanmugasundaram	Chemistry,Science	Karanavai
70.	Mr.R.Ponnampalam	Physics,Science	Karanavai North
71.	Mr.A.Emperuman	Art	Uduppiddy
72.	Mr.K.Neelakandan	General	Uduppiddy
73.	Mrs.AlaguSubramanaiam	History,Tamil	Uduppiddy
74.	Miss.NavaratnammalKandiah	Maths,Science	Navindil
75.	Miss.LeelaSinnathurai	English	Uduppiddy
76.	Mr.S.A.Kulendran	English	Karainagar
77.	Mr.BlanchardSelvarajah	Science	Uduvil
78.	Mr.S.Anandarajah	HandWork—Clay work	Uduppiddy
79.	Mrs.Thambiaya	Biology	Uduppiddy
80.	Mr.K.Sithamparapillaai	Maths,Library	Karanavai
81.	Mr.A.Nesadurai	English	Uduppiddy
82.	Mr.K.Tiburtius	Maths,Science	Mylidddy
83.	Mr.J.Satgunaraajah	General	Pungudutivu
84.	Mr.V.Ponnudurai	Science	Uduppiddy
85.	Mr.Selvarajah	General	Pungudutivu
86.	Mr.Arumainayagam	Science	Manipay

ABLE AND HELPFUL NONTEACHING STAFF

01.	Mr.S.Meenadchisundaram Office	Polikkandy
02.	Mr.S.Selladurai Office	Uduppiddy
03.	Mr.P.MailvaganamChemsitry Lap.	Pollikandy
04.	Mr.S.Sinnadurai Physics,Bio,Chemistry lab	Valvetty
05.	Balasubramaniam, Office	Uduppiddy

எங்களை உருவாக்கியவர்கள், வலுவூட்டிய கல்விக்கூடங்கள் தொடர்பான தகவல்கள், படங்கள் சேர்த்து வைத்திருப்போரும்- சேகரித்து தர விரும்புவர்களும் தொடர்பு கொள்ளவும்

S.THILLANADARAJAH,
62-2/2, E.S.Fernando Mawatha,
Colombo-6
Sri Lanka.
Email:- uduvai@gmail.com

(உட்) பக்கத்து பள்ளிக் (கூ) குடம்

எங்கள் ஊர் உடுப்பிட்டிக்கு பெருமையையும் எங்களுக்கு பெரு மகிழ்வையும் தருவது உடுப்பிட்டிச் சந்தியில் ஒன்றையொன்று பார்த்தபடி அமைந்திருக்கும் இரு கல்லூரிகளும் தான் என்ற கருத்துக்கு மறு கருத்து இருப்பதாக நான் கருதவில்லை.

நான் ரொம்ப ரொம்ப சின்னப்பொடியனாக இருந்த காலத்திலை- ஒரு அம்பது அறுவது வருஷத்துக்கு முந்தி ஆச்சி தாத்தா எல்லாரும் அமெரிக்கன் மிஷன் கல்லூரியை பெடியங்கள் பள்ளிக்குடம் என்றும் மகளிர் கல்லூரியை பெட்டையள் பள்ளிக்குடம் என்றும் தான் சொல்வது வழக்கம்.

நானும் நாலாம் வகுப்பு வரையும் பள்ளிக்குடம் என்ற சொல்லையே சொல்லி வந்தேன். நாலாம் வகுப்பில் ஆசிரியர் கந்தவனம் பள்ளிக்குடம் என்பது பிழை என்றும் பள்ளிக்கூடம் என்பது தான் சரி எனச் சொல்லித் தந்தார். அது போல ஐந்தாம் வகுப்பில் வாங்குதல் என்பது வேறு வேண்டுதல் என்பது வேறு என ஆசிரியர் சந்திரசேகரம் சொல்லித் தந்தார். ஆசிரியர்கள் இட்ட பிச்சை என்னை தமிழில் பேசவும் எழுதவும் வைத்து வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது.

இருந்தாலும் சிறு வயதில் தாத்தாவால் சொல்லித்தரப்பட்ட "உட் பள்ளிக்குடம்" உள்ளத்தில் ஏதோ ஒரு மகிழ்வைத் தந்து கொண்டிருக்கிறது. அரிவரி முதலாம் வகுப்பில் "உட் பள்ளிக்குடம்" என்று சொல்லப்பட்டதுக்குக் காரணம் பிரதான வீதியிலிருந்து – சந்தியிலிருந்து உள்ளே தள்ளி அமைந்திருந்ததால் மகளிர் கல்லூரிக்கு 'உட்பள்ளிக்கூடம்' எனவும் ஒரு பெயர் இருந்தது.

ஆனால் எனது அம்மா மகளிர் கல்லூரியை 'இங்கிலிஷ் ஸ்கூல்' என்று தான் சொல்வார். அதற்குக் காரணம் அந்த நாளில் மகளிர் கல்லூரி **GIRLS' BILINGUAL SCHOOL** எனவும் அழைக்கப்பட்டது. ஆங்கிலமொழி மூலக்கல்விக்கு அக்கல்லூரி பிரசித்தமாக இருந்தது. அம்மா அதிகம் படிக்காவிட்டாலும் பாடசாலையுடன் அதிகம் தொடர்புள்ளவராக இருந்தார். கல்லூரி அதிபர்களாகக் கடமையாற்றிய மிஸ்லி- மிஸ் மான் என்றால் அவருக்குப் போதும். சமூகத்தில் பெரு மதிப்பக்குரியவர்களாக மகளிர் கல்லூரி அதிபர்களும் ஆசிரியைகளும் விளங்கினார்கள்.

'பெண் புத்திபின்புத்தி' என நான் கேலி செய்தாலும் மகளிர் கல்லூரி பெரும்பாலான வசதிகளையும் வளங்களையும் எமக்கு முன்பாகத்தேடிக் கொண்டார்கள்.

நாங்கள் விளையாடுவற்கு ரொம்ப தூரம் நடந்து சண்முகவளவு செல்ல வேண்டும்., அதுவும் சில வேளை இருப்பதற்காக கதிரைகள் வாங்குகளையும் தூக்கிக்கொண்டு பிரதானவீதியால் செல்ல வேண்டும். பெண்களுக்கு இந்த சிரமம் இல்லை. கல்லூரி வளவினுள்ளேயே விளையாட்டு மைதானம்.

குடிக்கிறதண்ணீருக்காக நாங்கள் கோவில் கிணறு - சோதியண்ணா வீடு - தருமரத்தினம் பிறக்கிராசி வீடு என ஓடியோடித்திரிந்தோம். அவர்கள் அப்படிபோனதை நாம் கண்டதில்லை.

பெற்றார் தினக்கொண்டாட்டம் - பரிசளிப்பு விழா என்றால் 'செல்லையா' அண்ணா வந்து மேடைபோட நாங்களும் உதவி செய்ய வேண்டும். மகளிர் கல்லூரிக்கு வசதியான நிரந்தர மேடையுடன் வெளியரங்கு இருந்தது. பெண்கள் கல்லூரியில் விடுதி வசதி இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

எமது கிராமத்தில் முதன் முதலாக மின்பிறப்பாக்கி மூலம் மின்சார வசதியைப்பெற்றதும் மகளிர் கல்லூரியே. எனது சிறு வயதில் மகளிர் கல்லூரியில் கார்ணிவல் பார்த்தது-சிறிது வளர்ந்த பின் 'விந்தாவின் விநோதங்கள்' என மந்திரவித்தை பார்த்தது- அளவை அருட்கவி வினாசித்தம்பியின் கதாப்பிரசங்கம் கேட்டது-கணித மேதை சகுந்தலா வந்து போனது எல்லாமே மகளிர் கல்லூரியில் தான்.

சில மாணவர்கள் கல்லூரிக்கு முன்பாக உள்ள புத்தகக்கடையில் நின்ற வண்ணம் என்னென்வோ வித்தைகள் காட்டியும் அவற்றுக்கு மயங்காதவர்களாகவே மாணவிகள் விளங்கினார்கள். கல்லூரி அதிபர்களும் கண்டிப்பானவர்கள். மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டிக்கு முதல்நாள் ஆண்கள் கல்லூரி அதிபர் அசெம்பிளி வைத்து "உங்கடை தலைக்கறுப்பு அங்கை தெரியக் கூடாது" என வெருட்டி விடுவார். ஆண்கள் கல்லூரியும் பெண்கள் கல்லூரியும் ஒரே நேரத்தில் முடிவடைந்தால்....என எண்ணிய மகளிர் கல்லூரி அதிபர் ஐந்து நிமிடங்கள் முன்பாக பாடசாலை முடிவடையக்கூடிய ஒழுங்கைச் செய்தார்.

சின்னண்ணையின் கார் வருவதற்கு முன் பாடசாலை சென்றவர்கள் மாலையில் அவர் காரில் அந்தக்கல்லூரி சொத்துகள் சென்றபின் தான் வீடு திரும்புவார்கள். எல்லாம் இளமை இளமையை ஈர்க்கும் இயற்கை தான் ஒரு காலத்தில்..

யாராவது ஒரு மாணவியிடம் ஒரு மாணவன் "நோட்ஸ்" கொப்பி கேட்பான் அல்லது ஒரு மாணவி விஞ்ஞான வகுப்புப்பாடத்துக்காக ஒரு தவளையையோ அல்லது ஒரு எலிக்குஞ்சையோ பிடித்துத் தரும் படி கேட்பாள். அவ்வளவு தான்.! அது போதும் கொண்டாடிக் குதூகலிக்க.

கோவில் திருவிழா என்றால் பெரியவர்கள் பக்கத்தில் இல்லாவிட்டால்- "ஐஸ் கிறீம் வாங்கித் தரட்டுமா?" அல்லது "தும்பு முட்டாஸ் வாங்குங்கோ". சில வேளை கடலைக்கொட்டை பரிமாறப் படும். கடலையை எறிந்து விளையாடியதுமுண்டு. அதெல்லாம் இன்று நினைத்தாலும் சுகம் தான்! சொர்க்கம் தான்!!

வரலாற்றுக்குறிப்பின் பிரகாரம் மகளிர் கல்லூரி பதினாறு வருடங்களுக்கு பின்னர் ஆரம்பிக்கப் பட்டாலும் பல விடயங்களில் பின்தங்காமல் முன்னேறி முன்னணிக்குச் சென்றுவிட்டனர். பிரச்சினையான நாட்களிலும் நினைத்ததை சாதிப்பார்கள் என்பதற்கு ஓர் உதாரணம்- 1993ல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 125வது ஆண்டு விழாக்கொண்டாட்டத்தின் ஒரு நிகழ்வாக – ஆவணப்பதிவாக ஒரு மலரைக் கொழும்பில் அச்சிடுவித்து பல தடைகளைத் தாண்டி ஊருக்கு கொண்டு வந்தனர்.

முன்பெல்லாம் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு- பெண்கள் உத்தியோகம் பார்க்க வேண்டுமா? ஏனக் கேட்டதுண்டு. படிப்பில் மட்டுமல்ல- தொழில் பார்ப்பதில் மட்டுமல்ல-உட் பள்ளிக்குடத்தில் படித்த நாங்கள் உலகெலாம் சென்று பழைய மாணவர் சங்கங்களையும் செயற்பட வைத்து ஊருக்கு உதவி செய்வோம் என்பதைச் செயலில் காட்டி வருகின்றனர்.

- தில்லை

புலம் பெயர் நாடுகளில் தமிழ்ப் பற்று

இலங்கைத் தமிழர் புலம் பெயர்ந்தமைக்கு நாட்டு யுத்தம்தான் காரணமல்ல. இதற்கு முதலே பலர் கல்வி, தொழில் ரீதியாக வேறு நாடுகளிற்கு சென்றுள்ளார்கள். இவற்றில் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, பிரித்தானியா போன்ற நாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. 1977ம் ஆண்டின் பின்தான் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் மற்றும் பிற கண்டங்கட்கும் புலம் பெயர்ந்தனர். ஆரம்பத்தில் பொருளாதார நோக்கத்துடன் இளைஞர்கள் புலம்பெயர்ந்தாலும் அதன் பின் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் உயிர் பாதுகாப்புத் தேடி அரசியல் தஞ்சம் கோரும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டது. யுத்தத்தால் இன ரீதியால் அல்லது மத ரீதியால் பாதிக்கப்படும் மக்களை பாதுகாக்கவென ஐக்கிய நாடுகள் சபையில் 1951ம் ஆண்டு உருவாக்கப்பட்ட மனித பாதுகாப்புச் சட்ட விதிகளுக்கமைய புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டது. உலக சரித்திரத்தில் பல மேதைகளும் அரசியல் வாதிகளும்கூட இவ்விதம் சொந்த நாட்டை விட்டு பாதுகாப்புத் தேடி வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளார்கள்.

இவ்விதம் புலம்பெயர்ந்த மக்கள் கௌரவமாக வாழ ஐக்கிய நாடுகள் அரசியல் சாசனம் வழிவகை செய்துள்ளது. இவ்விதம் புலம்பெயர்ந்த மக்கள் தாம் வாழும் நாடுகளில் தமது இனத்தின் அடையாளத்தைக் காப்பாற்றிக் கொள்ள அந்நாடுகளில் மொழி அறிவையும், மத கலாசார பழக்க வழக்கங்களையும் காப்பாற்றிக் கொள்ள பிரயத்தனம் எடுத்துள்ளார்கள். ஆரம்ப காலங்களில் பிரித்தானியாவுக்கு தொழில் வாய்ப்புத் தேடிச் சென்றவர்களிலும் பார்க்க பிந்திய காலங்களில் அரசியல் தஞ்சம் கோரி வந்த தமிழர்கள் தமிழ் அறிவைக் காத்துக் கொள்ள கூடிய முயற்சிகள் எடுத்துள்ளார்கள். இதன் பிரதிபலனே இன்று பல ஐரோப்பிய நாடுகளில் தமிழ்ப் பாடசாலைகளும் கோவில்களும் கலாசார நிறுவனங்களும் உருவாக்கப்பட்டன. இச் செயற்பாடுகள் எவ்வித பொருளாதார நோக்கமுமற்ற உணர்வு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களாகப் பார்க்க முடியும். இருந்தாலும் கட்சிகள் இயக்கங்கள் என்ற போட்டா போட்டிகள் அக் காலத்தில் இவற்றின் பின்னணியில் நிலவிய ஆதிக்க செயற்பாடுகள் இந்த உணர்வு ரீதியான செயற்பாட்டாளர்களை சோர்ந்து போகச் செய்து இச் சேவையின் தராதரத்தில் பின்னடைவு அல்லது மந்தப்போக்கு ஏற்பட்டது. முக்கியமாக ஜேர்மன், சுவிற்சலாந்து, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் இவ்வித பாதிப்பு கூடுதலாக இருந்தாலும் கனடா அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் தகைமை பெற்ற பலர் குடியேறியதால் அங்கு பாதிப்புக் குறைவாக தென்பட்டுள்ளது. இந் நிலைமைக்கு அந் நாடுகளில் உள்ள ஆங்கிலம் அரச கரும மொழியாக உள்ளமை முக்கிய இடம் பெறுகிறது. அதன்பின் ஏற்பட்ட சுயதொழில் முயற்சிகள் அடிப்படையில் இவ்வித செயற்பாடுகள் தனி நபர்களால் மேற்கொள்ளப்பட அதன் தராதரம் மீண்டும் வலுப் பெற்றது. புலம் பெயர்ந்து வாழ் தமிழ்ப் பெற்றோருக்கு தமது பிள்ளைகள் தம்முடன் கலந்துரையாட அல்லது பிள்ளைகள் தம் இனத்தவருடன் தொடர்புகளைப் பேண தமிழ்மொழி கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டும்.

அதேவேளை பெற்றோர் பிள்ளைகளுக்கு எம்மொழியில் உள்ள கதைகள் பாட்டுகள் கற்றுக் கொடுப்பதற்கு கூடிய சந்தர்ப்பமும் உருவாகிறது. வீட்டில் பெற்றோருடன் தாய்மொழிமூலம் கற்றுக்கொள்வதன் மூலம் பிள்ளைகள் பாடசாலைகளில் தகைமையுடன் பாடங்களைக் கற்றுக்

கொள்ளக்கூடிய ஆற்றலைப் பெறுகிறார்கள். தமிழ் மொழி அறிவு தமிழ் மக்களிடையே காணப்பட வேண்டும். அதுவே எமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதோடு எமது தேசத்துடனான உறவையும் ஏற்படுத்த உதவுகிறது. இன்றைய சூழ்நிலையில் தமிழ் அறிவு பாடசாலைப் படிப்பிற்கு புலம்பெயர் தேசங்களில் அவசியமா என்ற கேள்வி முன்னிறுத்தப்படுவதுடன் தமிழ்மொழிக் கல்வி பாடசாலைக்குத் தேவையான பிறமொழி கற்றலுக்கு இடையூறாக அமையுமோ என்ற அச்சம் நிலவுகிறது. தமிழ் மொழிக் கல்வி கற்பதில் சிரமப்படும் பிள்ளைகள் பிறமொழிக் கல்வியில் சுமையாகி விடுமோ என்ற அச்சம் பெற்றோர் மனதில் எழுவதாலும் மேற்படிப்புக்கு பாடசாலையில் கற்கும் மொழிகளில் உயர்வான தகைமை எதிர்பார்க்கப்படுவதால் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு பாடசாலை மொழிக் கல்விக்கே அதிக ஆர்வம் காட்டத் தூண்டுகிறார்கள். அத்துடன் தமிழ் மொழிக் கல்வியின் அறிவு மேற்படிப்பிற்கு எதிர்பார்க்கப்படாததினாலும் கல்வியில் ஏற்படும் போட்டியை கருத்திற் கொண்டு தமிழ் மொழிக்கான ஆர்வம் குன்றி வருவது அவதானிக்கப்படுகின்றது. பெரும்பாலும் பத்து அல்லது பதினொரு வயதின்பின் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு தமிழ் மொழிக் கல்வி கற்றலை இடைநிறுத்துகிறார்கள் அதனால் தமிழ் மொழி அறிவின் தரம் ஓர் அளவின் மேல் அதிகரிப்பதில்லை. இது இன்றைய பொருளாதார சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள தகமைப் போட்டிக்கு முகம் கொடுக்க வேண்டிய எமது பிள்ளைகட்கு முகம் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலையாக உள்ளது. சாதாரணமாக பதினாறு பதினெட்டு வயதுப் பிள்ளைகள் குறைந்தது மூன்று மொழிகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். எனினும் இங்கு நான்காவது அல்லது ஐந்தாவது தர முக்கியத்துவமே தாய்மொழிக்குக் கிடைக்கிறது. தாய்மொழி என நாம் கருதுவது தமிழ் மொழியே தான். எனினும் எத்தனையோ பிள்ளைகள் அந்தத் தாய் மொழிக்குரிய நாட்டையே அறிந்திராதவர்களாக உள்ளார்கள்.

தற்போதய காலம் முற்று முழுதாக மாறிவிட்டதாக ஒரு உணர்வு. எதிலும் ஒரு வர்த்தகத் தன்மை. கலை கலாச்சாரம் பாரம்பரியம் எல்லாம் அருஞ் சொற்பதங்களாக மாறிக் கொண்டு போய் விடுமோ என்ற ஓர் ஏமாற்றகரமான உணர்வு. ஏனெனில் இங்குள்ள எமது அடுத்த சந்ததியினர் ஒழுக்கம் பேணப்படவேண்டும் என்ற நோக்கில் நாம் திணிக்க முயலும் கலாச்சாரப் பழக்க வழக்கங்களை ஏளனப்படுத்தும் சூழ்நிலை, மேற்கத்திய கலாச்சார ஆதிக்கத்தின் ஈடுபாடு என்பனவே எமது ஏமாற்றத்திற்கான உணர்வாக வெளிப்படுகிறது. இச் சொற் பதங்கள் என்னுடன் இருக்கவேண்டும் என்ற விருப்பம். ஆனால் மற்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, நான் கடைப்பிடிக்கிறேனா என்பதில் இருப்பதில்லை. எமது கலாசாரத்தில் ஆண் பெண் என்ற இரு பாலாருக்கும் கலாச்சாரத் தோற்றப்பாடுகள் உண்டு. ஆனால் இன்றும் ஆணும் பெண்ணும் சம உரிமை என சட்டம் போட்டுப் போராடும் சுவிற்சலாந்தில் இங்கு வாழும் தமிழர் நாம் இன்னும் அதிலிருந்து அதிகம் விடுபடவில்லை. ஆண் ஆதிக்கத்தின் தோற்றப்பாடு எம்மை உணராமலே ஆதிக்கம் பெற்று இருக்கின்றது. உதாரணமாக பெண்கள் தான் கலாசாரக் காவிகளாக இருக்கவேண்டும் என்ற ஆண்களின் எண்ணம் பெண்களால் விருப்பமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. உதாரணமாக கலாசார நிகழ்வுகளில் பெண்கள் சேலை அணியவேண்டும் என்ற கட்டாயமான கட்டாயத் திணிப்பு பெண்கள் மட்டும்தான் கலாசாரச் சீருடை அணிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழர் சார்ந்த நிறுவன அசைவுகளில் பெண்கள் பங்கேற்கும் பின்னடைவு என்பவற்றின் மூலம் ஆண்களின் மேலாதிக்கத்தின் தன்மைகளை அவதானிக்கலாம். தமிழருக்கென்று கட்டியம் கூறும் பாரம்பரிய கலைகள் பல இருந்தாலும் அழகுக் கலைகள் பல பெண்கள் மட்டும் தான் பழக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேற்கத்திய உடைகளில் ஆண்கள் தோற்றமளிப்பது அவர்களின் கௌரவ உணர்வாகவும் பெண்களின் அவ்வித உடைகள் கலாச்சாரச்

சீரழிவாகவும் கருதப்படும் நிகழ்வுகள் இன்றைய இளம் சமுதாயத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை. எனவே எமது இங்கு உருவாகும் மூன்றாம் சந்ததியினருக்கு எமது கலாசாரத்தின் பாரம்பரியங்களை போதிக்கும் பெற்றோர்களாக எமது இரண்டாம் சந்ததியினர் இருக்கப்போவதில்லை. எனவே உருவாகிவரும் இச் சூழ்நிலையும் பண ஆதிக்கத்தால் பராமரிக்கப்படும் பாச உணர்வுகளும் எமது மொழி எமது கலாச்சாரம் என்ற அடையாளங்களிற்கு துணைநிற்கும் என எதிர்பார்க்க முடியாது. இந் நிலைமையில் தமிழ் மொழி வர்த்தக ஆதிக்கம் பெறாது போனால் அதைக் கற்கும் எம் மக்களின் அபிலாசைகளும் மழுங்கடிக்கப்படும். கல்வியின் நோக்கம் முற்று முழுதாக பணத்தின் எதிர்பார்ப்பாக மாறியுள்ளதால், அதில் மட்டுமே எதிர்பார்க்கும் அந்தஸ்து இருப்பதாக கருதும் சமுதாயமாக எமது இனமும் மாறிச் செல்வதை இங்கு காணமுடிகிறது. கலாச்சாரம் பாரம்பரியம் என்பன பேச்சளவிற்கு மட்டுமே பயன்படுகிறது. இது ஓர் ஏக்கம் மிகுந்த உணர்வாக, நாட்டின் பாரம்பரியத்தில் வளர்ந்த எம்மில் இன்று இங்கு பிரசவித்துள்ளது.

ஜெயகௌரி ஜெகநாதன்

பேச்சுத் தமிழ்

இடத்துக்கிடம் பேசப்படும் தமிழ் மொழியைப் புரிந்து கொள்ளச் சில வேளை சிரமப்படுகின்றோம்., சில வேளை சிரிக்கின்றோம். அவற்றில் சில:-

சுவிஸில் தங்கியிருந்தபோது நண்பர் சிவபாலனுக்கு ரெலிபோன் எடுத்தேன் - மறு முனையில் திருமதி சிவபாலன் சொன்னார் **"அவர் இறங்கியிட்டார்".** அதைப் புரிந்து கொள்ள சிரமப்பட்ட போது விளக்கம் தரப்பட்டது... ஒருவர் வெளியே சென்று விட்டார். வீட்டிலிருந்து வெளியே போய் விட்டார் என்று இலங்கையில் பேசுவதை **இறங்கியிட்டார்** எனவும், வெளியே புறப்பட போகிறார் என்பதை **இறங்கப்போறார்** எனவும் சொல்வார்கள். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரிக்கு முன்பாக சந்திக்கருகே ஒரு கோவில். உடுப்பிட்டி சந்திக்கு வர வேண்டிய பக்கத்து ஊரவர் ஒருவர் சரியாக வழி தெரியாததால் நவிண்டில் கிராமத்தை அடைந்ததும் **"இந்த றோட்டாலை நேரை போனால் பிள்ளையார் கோயிலிலை ஏறலாமோ?"** எனக் கேட்ட போது - கிடைத்த பதில் - **"சந்தியிலை றோட்டுக்குப் பக்கத்திலை பிள்ளையார் கோவில் இருக்கு. கோயிலிலை ஏறுறதெண்டால் ஐயரைக்கேட்டுச் செய்யுங்கோ"**

முப்பது வருடங்களுக்கு முந்தைய எனது பாடசாலையின் நினைவலைகள்

எங்கள் பாடசாலையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் இது ஒரு நடுத்தரமான பாடசாலை ஆகும். ஏழைத்தொழிலாளியின் பிள்ளை முதல் பணக்காரரின் பிள்ளை வரை எல்லோரும் ஒரேமாதிரிக் கணிக்கப்படும் ஒரு இடம் என்றால் எங்கள் பாடசாலை தான். இங்கு கல்விகற்பிக்கும் ஆசிரியர்கள் கூட எந்தவித பாகுபாடும் இன்றி மாணவர்கள் அனைவர்களையும் ஒரே முகமாகத்தான் பார்ப்பார்கள்.

எங்கள் பாடசாலைக்கு இன்னுமோர் சிறப்பும் உண்டு. என்னவென்றால் சுற்றுவட்டாரத்தில் உள்ள பல கிராமங்களில் இருந்தும் மாணவர்கள் கல்விகற்க வருகிறார்கள். வல்வெட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், அல்வாய், நெல்லியடி, கரணவாய், கரவெட்டி, நவிண்டில், இடைக்காடு, தொண்டமானாறு, அச்சுவேலி, கதிரிப்பாய், வளலாய், பருத்தித்துறை, கம்பர்மலை, கொம்மந்தறை, கெருடாவில் போன்று இன்னும் பல இடங்களில் இருந்து மாணவர்கள் எங்கள் கல்லூரியின் சிறப்பினைக் கேள்விப்பட்டு வந்து பயின்றார்கள் என்றால் கல்வியின் திறமையை என்னவென்று சொல்வது.

இது இதுமட்டுமல்ல இங்கு நடைபெறும் விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் வாணிவிழா நிகழ்வுகள் எல்லாம் மிகச் சிறந்த முறையில் நடைபெறும். இவை எல்லாம் எங்கள் நினைவுகளை விட்டு அகலாது. அகில இலங்கை ரீதியாக நடைபெறும் விடையாட்டுப்போட்டிகள், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் எனப்பல போட்டிகளில் வெற்றிபெற்று வெற்றியீட்டியுள்ளார்கள். இந்தப் பெருமை எல்லாம் பாடசாலையின் மணிமகுடம்.

இது மட்டுமல்ல எங்கள் பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் அனைவருமே முதலாந்தர பட்டதாரிகள். ஜாம்பவான்கள் என்று சொன்னால் மிகையாகாது.

கணிதம் கற்பிப்பதில் திருவாளர் வடிவேல் ஆசிரியர் அவரைத் தொடர்ந்த திருவாளர் தில்லைநாதன் ஆசிரியர், பௌதிகத்தில் திருவாளர் ஆர்.பொன்னம்பலம் ஆசிரியர், ஆங்கில பாடத்தின் திருவாளர் எம்பெருமான் ஆசிரியர், தமிழ் பாடத்தில் திருவாளர் வேலுப்பிள்ளை ஆசிரியர், திருவாளர் முத்துவேல் ஆசிரியர், புவியியல், சரித்திரபாடத்தில் திருவாளர் கணபதிப்பிள்ளை ஆசிரியர், விளையாட்டுத்துறையில் திருவாளர் நேசதுரை ஆசிரியர், திருவாளர் ஜெயராசா ஆசிரியர் போன்று பல பட்டதாரி ஆசிரியர்களால் கல்வி கற்பிக்கப்பட்டு இன்று இலங்கை உட்பட பல வெளிநாடுகளிலும் பல மாணவர்கள் விஞ்ஞானிகளாகவும் டாக்டர்களாகவும் இன்ஜினியர்களாகவும் கணக்காய்வாளர்களாகவும் ஆசிரிர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவை அனைத்தும் எங்கள் பாடசாலைக்குக் கிடைத்த மறுக்கமுடியாத பெருமையென எண்ணிப்பார்க்கிறேன். நானும் இப்படிப்பட்ட சிறப்புக்குரிய அந்தப்பாடசாலையில் படித்ததையிட்டு பெருமை அடைகிறேன்.

பாடசாலையின் அன்றைய நினைவுகளை எண்ணிப்பார்க்கும் போது காற்றில் பறப்பது போல் ஒரு உணர்வு இனம் புரியாத மகிழ்வு உண்டாகிறது. ஆகவே எங்கள் பாடசாலையை என்றுமே என்னால் மறக்கமுடியாது என்பது தான் உண்மை. எங்கள் பாடசாலை மேன்மேலும் பல பெருமைகளை பெறவேண்டும். இன்னும் பல பட்டதாரிகள் உருவாக வேண்டும். புகழின் உச்சியில் என்றென்றும் இருக்கவேண்டும் என்பது எனது ஆசை.

வாழ்க எங்கள் பாடசாலை
வளர்க நல்ல கல்வி



பழைய மாணவன்
சிவம் தம்பிப்பிள்ளை.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு நடந்து செல்வதற்காக உடுப்பிட்டிச் சந்தியிலிருந்து வீதிவழியாக சென்று கொண்டிருந்தவர் வாசிகசாலை - மொட்டைப்புளியடி தாண்டி செல்லும் போது களைத்துப்போனார். அதை அவதானித்த ஒருவர் "நீங்கள் றோட்டாலை போனால் கன தூரம். போறது கஷ்டம். "உந்த **வயலுக்கிளாலை விழுந்து போனால் கெதியாகப் போகலாம்**" என்ற போது நடந்து களைத்துப்போனவர் சிரியாமல் கேட்டார் "**விழுந்து தான் போக வேணுமோ? ஏன் நடந்து போகக்கூடாதோ?**"

இயற்கையை விஞ்சுமா மனித ஆற்றல்?

Fukushima பயங்கரம் உலகை ஸ்தம்பிக்க வைத்து விடுமோ என்ற அச்சம் ஒரு கணம் திகைக்க வைத்து விட்டது. என்னதான் மனிதன் கண்டுபிடிப்புகள் மேற்கொண்டாலும் இயற்கையின் ஒருகண அசைவுக்கு ஈடுகொடுக்க முடியாது என்பதை நவீன யுகத்தில் நிரூபித்து விட்டது. பங்குனி 12. 2011 அன்று மீண்டும் அணுக்கதிர் வீச்சின் அபாயம் யப்பானை உலுக்கியுள்ளது. இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஐக்கிய அமெரிக்க இராட்சியத்தின் அணுக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிய யப்பானின் நகரங்களில் 60 வருடங்கள் தாண்டியும் அதன் தாக்கங்களின் சுவடுகள் மறைந்து போகாத நிலைமையில் தற்போது ஏற்பட்ட அனர்த்தம் இயற்கையின் தாக்கமே காரணமாகியுள்ள சான்றுகள் உலகின் பல நாடுகளில் ஆட்சிமாற்றங்களையே ஏற்படுத்திவிட்டது. 1986ம் ஆண்டு நாம் இந் நாட்டில் (சுவிஸில்) கால் பதித்த காலம் உயிராபத்தினின்றும் பாதுகாக்கப்படலாம் என்ற எண்ணம் பதிவாக முன்பே ஏற்பட்ட அவ் அனர்த்தமும் அச்சுறுத்தியது. இங்கு வந்தது விபரீதமோ எனவும் எண்ணத் தோன்றிய சம்பவம்தான் 1986 ம் ஆண்டு சோவியத்யூனியனில் (உக்ரைன் குடியரசில்) (சோவியத்யூனியன் 1989ல் அரசியல் மாற்றம் செய்யப்பட்டது) ஏற்பட்ட Tschernobyl அணு உலை விபத்து சுவிற்சலாந்திலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியதாக மக்கள் அச்சமடைந்துள்ளதாக பத்திரிகைகள் செய்திகள் புனைந்திருந்தன. அவ்விபத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அணுக்கதிர்த் தாக்கத்திற்கு உள்ளாக்கப்படடிருந்தாலும் அனைத்து செய்திகளும் இருட்டடிப்பு செய்யப் பட்டிருந்தது. 25 வருடங்கள் கடந்தும் அங்கு பிறக்கும் உயிரினங்களில் தென்படும் அங்கவீனக் குறைபாடுகட்கு இன்றும் அங்குள்ள அணுக் கதிர் வீச்சுக்களே காரணமாக நிரூபிக்கப் பட்டுள்ளது. இன்று ஏற்பட்ட Fukushima பயங்கரமும் அதன் விளைவுகளும் இன்னமும் மதிப்பீடு செய்யமுடியாதுள்ளது.

இருந்தாலும் மனிதமூளையின் வேகம் அதை விஞ்சிவிடுமோ என்ற அளவிற்கு புதிய சாதனைகள் படைக்கப்படுகின்றன. இச் சாதனைகளின்றேல் உருமாறா உலகில் உற்பத்தியாகும் மனிதப் பெருக்கத்திற்கு உணவு, உடை உட்பட பன்மடங்காகும் நுகரிகளின் தேவைகட்கும் சௌகரியமான வாழ்க்கைக்கும் வழிசமைக்க முடியாது போய்விடும். மனிதப் பெருக்கத்திற்கு பூமியில் இடப் பற்றாக்குறை ஏற்பட்டு வவிடுமோ என்றஅச்சத்தில் விண்வெளியில் இடம் பிடிக்க மனித சஞ்சாரம் தேடப்படும் விஞ்ஞானத்தின் வளர்ச்சிக் காலம் இன்று. மூன்றாம் மண்டல நாடுகளில் தோற்றுவிக்கப்படும் வீணர்களின் வெறிச் செயல்களால் மனிதனின் ஆக்கபூர்வ சிந்னைச் செயற்பாடுகள் அழிவுப் பாதையை அலங்கரிக்கின்றன. சுவிற்சலாந்தில் ஒரு பிள்ளை படித்துப் பட்டம் பெறுவதற்கும் எம் நாடு போன்ற யுத்த அனர்த்தத்தால் அழிவுக்குள்ளான நாடுகளில் அல்லது நித்தமும் உயிர்வாழ்விற்கு ஏங்கும் சூழ்நிலையில் ஒரு பிள்ளை படித்து மேதையாவதற்கும் எவ்வளவு வேறுபாடுகள்!. இக் கஷ்டமான சூழ்நிலையில் படித்துப் பட்டம் பெறுபவர்கள் பன்மடங்கு திறமைசாலிகளதான். இத் திறமைசாலிகட்கு மேலும் வசதிகள் கிடைக்கப் பெற்றால் அவர்களும் உலகம் வியக்கும் விற்பன்னர்களாக உயர்ந்து விளங்குவார்கள்.

எனவே தங்கு தடையின்றி கல்வி வசதிகள் அனைவர்க்கும் கிடைத்து அறிவுப் பசியைப் போக்கிட நேர்மையாக உழைப்போம் நாமும். எம் மண்ணிலுமிருந்து உலக அரங்கை எட்டும் அறிவாளிகள் உருவாகட்டும் என்ற மாறா நோக்குடன் ஒன்றுபட்டு செயற்படுவோம்.. என்றும்

மேன்மைக்கு அதற்கு அத்திவாரமிடும் ஆரம்பக் கல்விதான் உறுதுணையாகும். மேலைநாடுகளில் பிள்ளைகள் பலவழிகளிலும் கல்வியறிவைதப் பெற கற்றுக் கொடுக்கப்படுகிறார்கள்.

முக்கியமாக தகமையுள்ள வாசிகசாலை, Computer உடன் Internet வசதிகளும் மற்றும் கல்வி கற்கும் சூழ்நிலைகளும் அனைத்துப் பிள்ளைகளும் பாரபட்சமின்றி அவர்களின் திறமைக்கேற்ப பயன்படுத்தும் சூழ்நிலையும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. பல மொழித் தேர்ச்சி அடிப்படைத் தேர்வின் கட்டாய நிபந்தனைகளில் ஒன்றாக்கப் பட்டுள்ளது. பல இனங்கள் வாழும் சிறு நாட்டில் இனவாதம் அகற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டவரின் பாதுகாப்பிற்காகவும் தீவிரவாதம் வளர்க்கப் படக் கூடாது என்பதற்காகவும் இனத்துவேசம் கதைத்தல் தண்டனைக்குரிய குற்றமாக சட்டத்தில் இணைக்கப் பட்டுள்ளது. இவை ஸ்திரமான அரசியலையும், பாதுகாப்பான முதலீடுகையும் உத்தரவாதப் படுத்துகிறது. இதன் பிரதிபலிப்புத்தான் வியத்தகு தொழில்நுட்பங்களின் வெளிப்பாடு.

இது போன்ற கண்டுபிடிப்புகள் வெளிக் கொண்டுவர இன்னும் எத்தனையோ ஆய்வுகளும் முயற்சிகளும் தொடர்ந்தவண்ணமே உள்ளன. அரசுகள் தமது நிதியில் ஒதுக்கீடு செய்து ஊக்குவிப்புகள் அழிக்கப்படுகின்றன. மிகவும் கவலைக்குரிய விடயம் இலங்கையில் மேற்படிப்பு தடுக்கப்படுவதுதான். படிக்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் கடமை. படித்த சமுதாயம் தான் நாட்டின் சொத்து. நாம் படித்த காலத்தில் இத் துன்பத்தை அனுபவித்திருந்தாலும் கடந்த வருடம் நாட்டிற்கு வந்தபோது அதைவிட துன்பமான செய்திகள் கல்வி விடயத்தில் மாணவர்களிடமிருந்து அறிய முடிந்தது. அதாவது சித்தியடைந்த உயர்தர மாணவர்கள் புள்ளி அடிப்படையில் உயர்கல்வி வாய்ப்பை இழந்து அடுத்த நகர்விற்கு வழிறின்றி நிற்பதுதான். தொழில் நுட்பக் கல்லூரிகள் மாணவர்களின் கல்விக்கேற்ப மேற்படிப்பைத் தொடரக் கூடிய நிறுவனங்களாக உள்ளன.

அதிஉயர் தொழில் நுட்பக் கருவியின் கண்டுபிடிப்பு Einstein இன் பின் ஒரு சகாப்தம் என வர்ணிக்கப்படுகிறது. Newton னால் முடிக்கப்படாத வினாக்கட்கு இப் புதிய கண்டுபிடிப்பு விடை பகர்ந்துள்ளது. எட்டமுடியாத சக்தியின் பரிமாணத்தை மனிதன் தன் கையடக்கத்தினுள் உருவாக்கிய வெற்றியின் சாதனை Cern - Large Hardon Collider(LHC)

நீண்டகால முயற்சியின் முடிவில் 1994ஆம் ஆண்டு மார்கழி மாதம் Cern FO இத் தொழில் நுட்பத்திற்கு அத்திவாரமிட்டது. அணுவில் இருக்கும் Proton னின் மூலம் சக்தியை உருவாக்கும் முயற்சி 1995ஆம் ஆண்டு இத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்குழுமம் Cern தொழிற்பாட்டுத் திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடு புரட்டாதி 2008 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. முதன் முறை குளிராக்கியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஒரு வருடம் தடைப்பட்டது. மீண்டும் கார்த்திகை 2009 செயற்படுத்தப்பட்ட Cern 450 GeV முதல் அளவீடாக ஆரம்பித்து 1.05 TeV சக்திப் பரிமாணத்தை எட்டியது. பங்குனி 2010 இல் 3.5 TeV எட்டியது. இதன்மூலம் இவ் ஸ்தாபனத்திற்குப் பொறுப்பாயிருந்த Rolf-Dicter-Heuer தனது வெற்றியின் திருப்தியை வெளிப்படுத்தினார். இந்நாள் பொதிகவியலின் முக்கிய பரிமாணம் பெற்ற நாளாகக் கருதப்படுகின்றது.

அதிவேக Proton இன் நகர்வின் மூலம் இச் சக்தி எட்டப்படுகிறது. இந்நகர்வின் வேகம் 99.99% ஒலியின் வேகத்திற்கு சமனானதாக உள்ளது. இத் தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்படும் அதிசெறிவு மிக்க காந்தவலயம் அதி கூடிய சக்தியை தோற்றுவிக்கக் கூடியது.

இச் சக்திப் பரிமாணத்தை நீண்ட நாட்களாக மக்கள் எதிர்பார்த்திருந்தனர். இத் தொழில் நுட்பவியலின் பரிணாமம் 14 TeV சக்தியை உற்பத்தியாக்கும் நோக்கத்தை அடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. Cern கருவியின் குழாய் 26.659km இது சுவிற்சலாந்து- பிரான்ஸ் எல்லையில் ஜெனிவா மானிலத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் செயற்பாட்டு வெப்பநிலை 1.9 Kelvin (= - 271.25 °C), அத்துடன் 120 தொன் திரவ Helium உள்ளடக்கியுள்ளது. இச்செயற் பாட்டின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்த 10080 தொன் திரவ நைதரசன் (N2) - 193.2°C இற்கு குளிராக்கும் குளிராக்கியாகப் பயன்படுத்துப்படுகிறது.

The largest machine in the world...

The precise circumference of the LHC accelerator is 26 659 m, with a total of 9300 magnets inside. Not only is the LHC the world's largest particle accelerator, just one-eighth of its cryogenic distribution system would qualify as the world's largest fridge. All the magnets will be precooled to -193.2°C (80 K) using 10 080 tonnes of liquid nitrogen, before they are filled with nearly 120 tonnes of liquid Helium to bring them down to -271.3°C (1.9 K).

The fastest racetrack on the planet...

At full power, trillions of protons will race around the LHC accelerator ring 11 245 times a second, travelling at 99.9999991% the speed of light. Two beams of protons will each travel at a maximum energy of 7 TeV (tera-electronvolt), corresponding to head-to-head collisions of 14 TeV. Altogether some 600 million collisions will take place every second.

ஒரு வீட்டில் மாமி - மருமகள் சண்டையின் உச்ச கட்டம். இருவரும் வீட்டுக்காரனிடம் சொன்னார்கள்

மாமி-(தாயார் ~ மகனிடம்) : **"மகனே! இந்த வீட்டிலை ஒண்டு நான் இருக்க வேணும். அல்லது அவள் இருக்க வேணும்"**

மருமகள்(மனைவி ~ கணவனிடம்) : **"அத்தான் இந்த வீட்டிலை நான் இருக்க வேணும் அல்லது உங்கடை அம்மா இருக்க வேணும்"**

அவன் உடனடியாகச் சொன்னான் : **"இரண்டு பேரும் வீட்டை விட்டுப் போங்கோ"**

அப்போது இருவரும் கேட்டனர் : **"இரண்டு பேரையும் அனுப்பினால்....."**

அவன் சிரித்துக்கொண்டே சொன்னான் : **"வேலைக்காரி இருக்கிறா. அது போதும்"**

“ (SIR) சேரின் சேருக்கு சேராகி, மாணவனின் மகளுக்கு மாணவனானேன்”

கிராமத்துப் பள்ளிக்கூடமான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சிறுவனாகப்படித்த அந்த நாட்களில் எங்கள் கல்லூரியில், அநேகமான ஆசிரியர்கள் ஆண்கள்., பெண்களும் இருந்தனர்., ஆனால் பெண்கள் எண்ணிக்கையில் குறைவு. இரண்டாம் மூன்றாம் வகுப்பு வரை பெண் ஆசிரியைகளை ‘அக்கா’ என அழைத்து வந்தோம். நாங்கள் கீழ் வகுப்புகளில் படித்தபோது, நாலாம் வகுப்பு வரை எல்லா வகுப்புகளுக்கும்- எல்லா பாடங்களுக்கும் பெண் ஆசிரியைகள் தான். ஆசிரியைகளை உரிமையோடு அக்கா என்று கொண்டாடிய உறவுக்கும் சில அண்ணாமாரால் முற்றுப்புள்ளியிட வேண்டியேற்பட்டது.

ஒரு நாள் உயர் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த அண்ணாமார் எமது வகுப்புக்கு வந்து – ”அக்கா” என்று சொல்லக்கூடாது., “ரீச்சர்” என்று சொல்ல வேண்டும் - என கண்டிப்பாக கட்டளையிட்டு விட்டுப் போன பின்னர் ஓரேநாளில் அக்கா சொல்லைக் கை விட்டு ‘ரீச்சர்’ என அழைக்க ஆரம்பித்தோம்.

நாலாம் வகுப்பைத்தாண்டி ஐந்தாம் வகுப்புக்கு சென்ற போது வகுப்பாசிரியராக இருந்தவர் – திரு.சந்திரசேகரம். சிலநாட்களாக எங்களுக்கு ஒரு சந்தேகம். அது என்னவென்றால் - அவரை சில மாணவர் ‘ரீச்சர்’ என சொல்லிய போது, பெண்களைத் தான் ‘ரீச்சர்’ என்று சொல்லலாம்- ஆண்களை ‘ரீச்சர்’ என சொல்வது தவறு என கருதினோம். சில நாட்களுக்குப்பின்தான் சந்தேகம் நீங்கியது- ‘ரீச்சர்’ என்று பொதுவாக ஆண்களையும் பெண்களையும் சொல்லலாம். அண்மையில் ஒரு முன்னணிப்பாடசாலை மாணவர்களோடு கதைத்துக்ககொண்டிருந்த போது, எங்களுக்கு சிறு வயதிலிருந்த சந்தேகம் இன்னும் சில மாணவர்கள் மேல் வகுப்புக்கு வந்த நிலையிலும் சந்தேகமாகவே உள்ளதைக்காண முடிந்தது..

க.பொ.த. (சாதாரணதர) ஆரம்பத்திலேயே ‘மாணவன்’ சஞ்சிகையை அச்சிடுவித்து –அதில் ஆசிரியர் என எனது பெயரையும் அட்டையிலேயே அச்சிட்டு அசத்தியதையும், சிலர் கேலி செய்தாலும் கல்லூரி ஆசிரியர்களே என்னை ‘ஆசிரியர்’ என அழைத்ததும் ஓரே அமர்க்களம்.

அது மட்டுமல்ல படி ஏறிஇறங்காமல் பணம் செலவழிக்காமல் வேலை கிடைத்ததை இப்போது நினைத்தாலும் நடந்தது கனவா என்ற சந்தேகம் வரத்தான் செய்யகிறது.

எழுத்துப் பரீட்சை முடிவுகளை வைத்து, உள்ளூர் அரசியல்வாதிகளைக்கூட சரியாகக் கேள்விப்படாமல், பத்தொன்பது வயதில் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் நிரந்தர நியமனம் பெற்றதும், எனது பெயருக்குக்கீழே தபால் பெட்டி: 517, கொழும்பு என முகவரியிட்ட கடிதங்கள் அஞ்சலில் இட்ட அடுத்த நாளே எனது கரம் வந்து சேர்ந்ததும் நினைக்கும் போது பிரமிப்பாக இருக்கிறது. அண்மையில் ‘தினக்குரல்’ பத்திரிகை 15வது ஆண்டு விழா அழைப்பிதழ், கொழும்பு அஞ்சல் பெட்டியில் சேர்க்கப்பட்டும் இருவாரங்களுக்குப்பின்னரே எனக்குக்கிடைத்தது.

எனது 19வயதிலேயே, கொழும்பில் சீருடை தரித்த சிரேஷ்ட பொலிசார் உட்பட பலர் 'சேர்' என்று கூப்பிட நான் திரும்பிப்பார்ப்பேன்:- 'என்னைத்தானோ ?அல்லது வேறை யாரையுமோ?... யாரும் பகிடிக்கு கூப்பிடுகின்றார்களோ ?'

காரணம் இல்லாமலில்லை. வேலை கிடைத்த பின்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விடுதலையில் வந்து நிற்கும் நாட்களில் ஆரம்பத்தில் படித்த கிராமத்துப் பாடசாலைக்கும், பின்னர் உயர்தரம் படித்த நகரத்துக்கல்லூரிக்கும் சென்றால் மாணவர்கள் ***அடே-போடா-வாடா*** என்று தான் கூப்பிடுவார்கள்., கதைப்பார்கள். அதில் எந்தத்தவறும் இல்லை. இறைவன் கொஞ்சம் இடத்தை மாற்றி விட்டான். கூடப்படித்தவர்கள் பாடசாலையில் இருக்க என்னை கந்தோர் வேலைக்கு அனுப்பிவிட்டார். எழுபதுகளின் ஆரம்பத்தில் விசேடகடமையாற்று வதற்காக யாழ்ப்பாண பொலிஸ் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டேன்.

யாழ்ப்பாணம் வந்த இரண்டாம் நாள் என்னைப்படிப்பித்த ஆசிரியர் ஒருவர் என்னைத் தேடிக்கொண்டு வந்தார். அவர் எனது மேசையருகே வந்த போது, கொஞ்சம் சந்தோஷம்., கொஞ்சம் பயம்., கொஞ்சம் வெட்கம். 'குட் மோர்னிங்' சேர் என்றவாறு எழும்பினேன். என்னை வலுக்கட்டாயமாக இருத்திவிட்டு அவர் நின்றதால் தான் அடுத்தடுத்து நவரச பாவங்கள் எனது முகத்தில்.

ஆசிரியர் ஆரம்பித்தார்:-'' தம்பி ஒரு உதவி அவசரமாகச் செய்ய வேணும்''

அவர் கேட்ட உதவி இது தான்-' தான் கல்விப்பணிமனையில் உதவிப்பணிப்பாளராக உயர்வு பெற்றுள்ளதாகவும், உயர்வுக்கு உதவி செய்த பணிப்பாளரின் மகள் இந்தியாவுக்கு படிக்கப்போவதற்கு இலங்கைக்கு வெளியே செல்வதற்கான அனுமதியை சி.ஐ.டி. திணைக்களத்திலிருந்து விரைவாகப் பெற்றுத்தரவேண்டும்'

அப்போது இலங்கைக்கு வெளியே செல்வதற்கு பொலிஸ் திணைக்களத்திலிருந்து (EXIT PERMIT) பெற வேண்டுமென்பது நடைமுறை. நடைமுறையை விரைவுபடுத்த என்னைப்படிப்பித்த ஆசிரியரின் மேலதிகாரி அவரை நாட, ஆசிரியர் என்னை நாடினார். ஆசிரியரின் மேலதிகாரி மேற்படிப்புக்காக தனது மகளை விரைவாக இந்தியாவுக்கு அனுப்ப விரும்பினார். அவருக்கு என்மூலம் உதவி செய்ய எனது ஆசிரியர் விரும்பினார். ஆசிரியரின் அதிகாரிக்கு உதவி செய்ய நானும் முயற்சி எடுத்தேன். செல்வாக்கைப் பயன்படுத்தும்போதும் கவனமாக இருக்க வேண்டுமல்லவா? சில விசாரணைகள்- தாமதங்கள் தவிர்க்கமுடியாதவை., கட்டுப்பாட்டுக்கப் பாற்பட்டவை.

ஆசிரியர் அவரது அதிகாரியையும் அழைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு நாலைந்து தடவையாவது வருவார். யாழ்.பொலிஸ் அலுவலக நண்பர்களுக்கு அவர்கள் அடிக்கடி வருவது வேடிக்கையாக விட்டது. என்னைப் படிப்பித்த ஆசிரியருக்கு நான் சேர் (SIR) சொல்லுவேன்., ஆசிரியர் எனது அதிகாரிக்கு சேர் (SIR) சொல்லுவார்., அந்த அதிகாரி எனக்கு சேர் (SIR) சொல்லுவார். மூன்று பேர் சுழற்சி முறையில் மாறி மாறி "சேர்" சொல்ல அலுவலக ஊழியர்களின்

சிரிப்புக்கு சொல்லவா வேண்டும்? தேநீர் குடிக்க – சாப்பிட கந்தோருக்கு வெளியே சென்று திரும்பியதும் சிற்றூழியர் என்னிடம் ஓடி வருவார்-

"மாத்யாட மாத்யாட மாத்யா வாறாங்...போறாங்" என எமது அலுவலக சிற்றூழியர் சில்வா சொன்னது எனக்கு தெளிவாக விளங்காதபோது, இன்னொரு சிற்றூழியரான செல்லையா தமிழாக்கம் செய்து- **"ஐயாவோடை ஐயாவின்ர ஐயா"** என ஆரம்பித்து

"சேர், உங்கடை சேரின்ர சேர் வந்திட்டுப்போனவர் , சேர்" என்ற போதுதான் எனக்கு என்னைத்தேடி வந்து போனவர் யாரெனத்தெரிந்தது.

இது சேரின் சேருக்கும் சேராகின என்கதை.

இனி ...

காலம் எவ்வளவு விரைவாகப்போய் விட்டது. 1992 ல் வவுனியா அரசஅதிபர். கொழும்புக்கு போகும்போதெல்லாம் ஒவ்வொருவரும் கொம்பியுட்டர் பற்றி கதைகதையாகச் சொல்வார்கள்.

எனக்குத்தெரிந்தவரை அப்போது வவுனியா அலுவலகங்களில் கொம்பியுட்டர் இருக்கவில்லை. அரசுசார்பற்ற நிறுவனங்கள் வவுனியா கச்சேரியில் கலந்து கொண்ட கூட்டத்தில்- 'Vavuniya kachcheri needs a computer' என்று வேண்டுகோள் விடுத்தேன்.

வவுனியா கச்சேரிக்கு அடுத்த நாள் கணனி வந்து சேர்ந்தது., என்ன செய்யிறது? கொம்யுட்டரை எப்படி இயக்குவது என ஒருவருக்கும் தெரியவில்லை... தேவையில்லாப் பொருளாகக்கருதி ஒரு மூலையில் தூக்கிப்போட்டப்பட்டது.

பின்பு 1994ல் பாங்கொக் நாட்டுக்கு பயிற்சி திட்டத்தில் கலந்து கொள்ளச்சென்ற போது நான் உட்பட இலங்கையிலிருந்து சென்றவர்களைத்தவிர மற்ற எல்லோரும் கணனியில் தான் எல்லா வேலைகளையும் செய்தார்கள்.

குறிப்பு எடுப்பது- அறிக்கைகள் தயாரிப்பது- அவற்றை சமர்ப்பிப்பது-விளங்கப்படுத்துவது எல்லாம் கொம்பியுட்டரில்... 'பட்டிக்காட்டான் முட்டாசுக்கடையைப் பார்த்தது' மாதிரியான நிலையில் நாங்கள்.

பயிற்சி முடிந்து வவுனியா திரும்பியதும் எனது செயலாளரை வார இறுதியில் கடமைவிடுதலையும் பணமும் கொடுத்து கொழும்பில் கொம்பியுட்டர் பயிற்சி பெற ஒழுங்கு செய்தேன். மூன்று மாதங்களுக்குள் பயிற்சியை முடித்துக்கொண்ட பின்னர் கொம்பியுட்டர் மூலம் வேலைகள் துரிதகதியில் சரியாக நடந்தது.

'எனது உதவியாளரிடம் நான் எப்படிக் கேட்டுப்படிப்பது?' என தயக்கம்., வெட்கம்.

கொழும்புக்கு இடமாற்றம் பெற்று வந்து 57 வயது நிரம்பி ஓய்வு பெற்று பென்சன் எடுக்கலாம் என எண்ணிய வேளையில்தான்- கொம்பியுட்டர் படிக்கிற ஆசையும் வந்தது. பம்பலப்பிட்டி தனியார் கணனி கல்விநிலையம் சென்று வெட்கத்தினால் எனக்குத்தெரிந்த நண்பனின் 'ராஜகோபாலின்' பெயரை எனது பெயராகச்சொல்லி பதிவு செய்துகொண்டு கணனி அறையினுள் நுழைந்தேன்.

கணனிப் பெட்டிக்கு முன்னால் என்னை இருத்திய ஒரு சிறிய பெண், புத்தகமொன்றில் ஒரு பக்கத்தைக் காட்டி, அதை அப்படியே அடிக்கச்சொன்னாள். வேலைக்குச்சேர்ந்த புதிதில் 'ரெமிங்டன்' ஆங்கில பழைய ரைப்ரைற்றிலை பலம் கொண்ட மட்டும் எழுத்தை அமத்தி அடித்தால் தான் தட்டெழுத்து கடுதாசியில் பதியும். முந்தி ரெமிங்ரன் ரைப்ரைற்றிலை எழுத்துகளில் ஏறிஇருக்காத குறைதான். முழுப்பலத்தையும் விரல்களக்கேத்தி குத்துறது. தட்டெழுத்து பழகுவதற்கு முட்டை சாப்பிட்டு உடம்பை பலப்படுத்தவேண்டும் என்ற அறிவுரையும் அப்போது வழங்கப்பட்டது.

அந்த அனுபவ நினைவுகளுடன் கொம்பியுட்டர் கீ போர்டில் எனது பலத்தைக் காட்டி அடித்தபோது சின்னப்பெண் ஓடி வந்து, "சேர்... சேர்... சொவ்றாக அடியுங்கோ. SOFT...SOFT...FEATHER TOUCH. மயில் இறகைத் தொடுறமாதிரி மெதுவாக தொட்டாலே கீ போர்ட் வேலைசெய்யும். அல்லது கொம்பியுட்டர் பழுதாகப் போடும்"-

அந்தப்பிள்ளை சொன்னதைக் கேட்டு-

எல்லாரும் என்னைப்பாக்க கொஞ்சம் வெட்கம்., இருந்தாலும் ஒருவருக்கும் என்னைத் தெரியாதெண்டு நினைப்பில் நானும் சிரித்துக்கொண்டு அந்தப் புத்தகத்திலுள்ள பக்கத்தை எழுத்தில் பொறித்தாகிவிட்டது.

அந்தச் சின்னப்பெண் கட்டளையிட்டாள்:-" இப்ப அடித்ததை சேவ் (SAVE) பண்ணுங்கோ"

நான்:-"அப்படியெண்டால்....".

அவள்:-" SAVE எண்ட இடத்திலை, உங்கடை NAME ஐ ENTER பண்ணி நீங்க அடிச்சதை SAVE பண்ணுங்கோ"

நான் தடுமாற்றத்துடன் நண்பன் ராஜகோபாலின் பெயரை எழுத்தில் பொறிக்க அவள் **"ஏன் சேர். தில்லைநடராசா எண்டு உங்கடை பெயரைப் போடுங்கோ..."**

"என்னுடைய பெயர் என்ன மாதிரி தெரியும் ?" என நான் கேட்டபோது- அவளது பதில்-

"நான் மகாலிங்கத்தின் மகள். அப்பா அடிக்கடி உங்களைப்பற்றி சொல்லுறவர். நீங்கள் தான் அவருக்கு நிதிப்பிரமாணங்கள் தாபனவிதிக்கோவை (FINANCIAL REGULATION-ESTABILSHMENTS CODE- OFFICE SYSTEM) எல்லாம் சொல்லிக்கொடுத்து அவர் சோதனையில் பாஸ் பண்ணினவர்"

பல வருடங்களுக்கு முன் கச்சேரி உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுக்காக வகுப்பு நடத்திய போது என்னிடம் படித்தவர்களில் மகாலிங்கமும் ஒருவர்.

ஆம்! மகாலிங்கம் எனது மாணவன்., பின்பு மகாலிங்கம் என்ற எனது மாணவனின் மகளுக்கு நான் மாணவன்.

நான் மாணவனாகி கணனி, மின்னஞ்சல், இணைய தளங்கள், பேஸ் புக், வீடியோ சற் (FACE BOOK- VIDEO CHAT) என சிறிது சிறிதாக படித்ததால் வேலைகள் சுகமாக அதிக வேலைகள் செய்யமுடிகிறது.

"மாத்யாட மாத்யாட மாத்யா **வானாலும், மாணவனின் மகளுக்கு மாணவன் தான்"**

- உடுவை.எஸ்.தில்லைநடராசா

கணவனுக்கு கந்தோரிலிலை சரியான வேலை நேரம் - மனைவி ரெலிபோன் செய்தாள்:-

"இரவைக்கு என்ன சாப்பாடு செய்ய?"

கணவன் :- **"புட்டு அவி"**

மனைவி :- **"புட்டுக்கு என்ன கறி?"**

கணவன் :- **"சொதி போதும்"**

மீண்டும் மனைவி :- **"சொதிக்கு என்ன போட?"**

கணவன் :- **"பொலிடோலைப்போடு"**

10 நிமிடம் கழித்து மனைவியின் ரெலிபோன் :- **பொலிடோல் போட்டுச் சொதி வைச்சிருக்கிறன்"**

20 நிமிடம் கழித்து கணவனின் ரெலிபோன் :- **நீ புட்டையும் சொதியையும் சாப்பிடு. எனக்கு கந்தோரிலை ஒரு பார்ட்டி"**

நான் தேடும் நட்பு நனவாகுமா?

தோள் கொடுப்பான் தோழன் என்பது நாம் அறிந்த மொழி. பணம் பொருள் என்றென்றெல்லாம் ஆனபின் பாசம் மிகுந்த தோழமை உலகில் பின்தள்ளப்படும் பதமாக மாறியுள்ளது. பொருளாதாரத் தன்னிறைவு பெற்ற நாம் இன்று வாழும் இது போன்ற நாடுகளில் பாசத்தின் பெறுமதி அருகிப் போவதைக் காண முடிகிறது. ஒருவரில் ஒருவர் அல்லது ஒரு சமூகத்தில் இன்னொரு சமூகம் சார்ந்திருக்கும் சூழ்நிலைகள் அருகிப் போவதையும் அவதானிக்க முடிகிறது. பொருளாதாரம் பாசத்தைத் தீர்மானிக்கும் காரணியாக உருவெடுக்கும் நவீன காலமிது. உண்மையான பாசத்திற்கும் பாசாங்குமிகு பாசத்திற்கும் வேற்றுமை கண்டறிய இக்கட்டான சூழ்நிலைகளே உதவி புரிகின்றது.

'உடுக்கை இழந்தவன் கைபோல
இடுக்கண் களைவதாம் நட்பு'

நண்பரின் தேவையை அறிந்து அதற்கேற்ப உதவும் நட்பின் செழுமையை எமது பாரம்பரியம் உணர்த்தி நின்றாலும் காலத்தின் தேவைகள் இவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்த முன்நிற்பதில்லை. புலம்பெயர் நாட்டில் சொந்தங்களின் உறவிலும் பார்க்க நட்பின் உறவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அன்றைய சமுதாயத்தில் பொருளாதாரத் தேவைகளும் நட்பின் ஆழத்திற்கு அத்திவாரமிட்டிருந்தன. நட்பின் மகத்துவத்தையும் முக்கியத்துவத்தையும் தமிழிலுள்ள பல அறிவுக் கழஞ்சியங்களாக உள்ள புத்தகங்கள் வெளிப்படுத்தியுள்ளன. யுத்தக் காரணி நம்மில் பலருக்கு அக் களஞ்சியங்களை கண்டறியும் வாய்புகளை இழக்கச் செய்து விட்டது. மேலும் குடியேறிய நாட்டில் நாட்டின் சூழ்நிலையும், உறவுகளைப் பிரிந்த ஏக்கங்களும், உறவுகள் துயருறும் அன்றாட செய்திகளும் உள்ளத்தை வளப் படுத்த மறுத்து விட்ட காரணிகளாக காண முடிகிறது. நாட்டில் காக்கிச் சட்டை போட்டவன் தான் போலிஸ்காரன் ஆனால் இங்கு பார்ப்பவர்களெல்லாம் போலிஸ்காரர்கள் மாதிரித்தான் பாசத்தை வெளிப் படுத்தும் பார்வைகளை காண ஏங்கித்தவிக்கும் எமது உள்ளங்கள்!. ஏங்கும் நாம் தேடும் நட்பு கிடைப்பதில்லை. பாடசாலை நட்பின் மகத்துவத்தை இங்குதான் நான்

உணருகிறேன். நாம் தேடும் அமைதியும் அச்சூழலில்தான். அங்குதான் நட்பும் என்னைத் தேடுகிறது. நான் தேடும் நட்பை விட என்னைத் தேடும் நட்பே வலிமை மிக்கது அதையே நான் மதிக்கிறேன்.

- கந்தசாமி இராதாகுமார் - மதன்

சில ஆண்டுகளுக்கு முன்
ஒன்றாக ஆடினோம் ... பாடினோம்...

இன்று எங்கெங்கோ...?

RATHATHIN RATHAME EN INIYA UDAN PRAPPE



அன்றைய நினைவுகளை இன்றைய இதயம் பேசுகின்றது

முன்பு நாங்கள் உடுப்பிட்டி மகளிர் பாடசாலையில் கல்வி கற்ற காலங்களை மறக்க முடியாது. இன்றும் அத்தனை பாடசாலை நினைவுகளையும் நினைத்துப் பார்க்கிறேன். எங்கள் பாடசாலை ஒரு பூந்தோட்டம். அதில் நாங்கள் பட்டாம் பூச்சிகள் போல் பறந்தோம். படித்தோம்.

அன்று கல்விகற்பித்த ஆசிரியர்கள் அனைவருமே எங்களைத் தங்கள் பிள்ளைகளைப்போல் எங்களுக்கு ஊக்கத்தையும் கல்வியையும் அறிவையும் சொல்லித் தந்தார்கள். எங்கள் பாடசாலையில் நடைபெறும் கண்காட்சி நிகழ்வு ஒரு பெரிய நிகழ்வாகும். வடமாகாணத்தில் இருக்கும் அத்தனை பாடசாலைகளிலும் இருந்து மாணவர்கள் எங்கள் பாடசாலைக் கண்காட்சியைப் பார்க்க வருவார்கள். இங்கு விஞ்ஞானம் விவசாயம் படம் வரைதல், பொறியியல் போன்ற பல செயற்பாடுகள் நிறைந்திருக்கும். அத்துடன் எங்கள் பாடசாலையில் விளையாட்டுப்போட்டிகளும் ஒரு முக்கிய நிகழ்வு. அப்பொழுதுதான் நாங்கள் அனைவரும் ஒன்று கூடி பேசி மகிழ்வோம்.அந்த நேரத்தில் எமக்குக் கிடைத்த அதிபரும் ஆசிரியர்களும் மிகச் சிறந்தவர்கள், மனிதாபிமானம் நிறைந்தவர்கள், அன்பானவர்கள், கல்விகற்பிப்பதில் கண்டிப்பானவர்கன். இவை அனைத்தையுமே மறக்க முடியாது என்பது உண்மை.

சோலைவனம் போல காட்சியளிக்கும் எங்கள் பாடசாலையில் உள்ள நிழல் தரும் பல வானுயர்ந்த மரங்கள், பலவகையான பூமரங்கள், விளையாட்டு மைதானத்தில் நிறைந்த பச்சைப்புல்வெளி இதில் எதைத்தான் நான் மறப்பது?

பலகாலம் எமக்கு வகுப்பாசிரியையாகவும் தமிழாசிரியையாகவும் இருந்த திருமதி தேவகி நீலகண்டன் அவரின் அன்பான கவனிப்பும் அறிவுபூர்வமான அறிவுரைகளும் இன்னும் அவருடன் சென்ற சுற்றுலாவும் என்றும் எம்மனதை விட்டகலாது. எமக்கு விஞ்ஞானம் படிப்பித்த செல்வநாயகி ஆசிரியையும் நினைவிலுள்ளர். எங்கள் அதிபர் காலஞ்சென்ற பா.இராஜேந்திரசிங்கம் அவர்களின் கனிவும் கண்டிப்பும் நினைவில் நிழலாடுகிறது. அங்குபடித்த பல மாணவிகள் நல்ல பதவிகளில் பல நாடுகளிலும் இருக்கிறார்கள் என்றால் எங்கள் அதிபரின் கண்டிப்பான அறிவுரைகளும் அன்பான அரவணைப்பும் தான் என்பது உண்மை.

நாங்கள் வெளிநாடுகளிலில் (சுவிஸ்) இருந்தாலும் கற்ற கல்வியை எங்கள் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கிறோம். எங்கள் பாடசாலையின் பெருமைகளை எல்லாம் பிள்ளைகளுக்குச் சொல்லும் போது அவர்கள் அதிசயிப்பார்கள்.

எங்களது கல்லூரி வாழ்க!
உடுப்பிட்டி பெண்களது கல்லூரி வாழ்க!!

திருமதி மனோகரி இராஜரட்னம்.

ஆளுமைக்கு அழகான தோற்றமும் அவசியம்
(Power of Appearance)

ஒரு பெண்ணின் தனிப்பட்ட அடையாளம் பல பக்கங்களைக் கொண்டதாக உள்ளது. பணம் ஈட்டுபவளாக, துணைவியாக, மற்றும் காதலியாக, வீட்டு நிர்வாகியாக, சமூக உறவுகளை உருவாக்குபவளாக தனியொரு சமயத்திலும் பெரும்பாலும் ஒரே சமயத்தில் எல்லாமாகவும் அவளால் திறமையாகச் செயல்படமுடிகின்றது.

எல்லாவிதமான திறமைகள் இருந்தாலும் ஒரு பெண்ணிற்கு அவளது தோற்றத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது என்ற அதிர்ச்சியான விடயத்தை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம்.

உங்களது தோற்றம் மேலும் உங்களது சுயமதிப்பை உயர்த்துகின்றது. ஒரு பெண்ணின் வாழ்க்கையில் பல்வேறு கட்டங்களில் பெறுமதிகள் (Values) மாறுபடுகின்றன. இருந்தும் இளம் நடுத்தர வயதுப் பெண்கள் நேர்முகப் பரீட்சைகள், திருமணம், துணையைத் தொடர்ந்து தங்கவைத்துக் கொள்ளல் மற்றும் நல்ல நட்புடன் பழகுவதற்கு என பல்வேறு சந்தர்ப்பங்களில் பெண்ணின் தோற்றம் முக்கியம் பெறுகிறது.

மக்கள் ஒரு புத்தகத்தை அதன் அட்டையை வைத்தே எடை போடுகிறார்கள் என்பதை உங்களால் ஏற்றுக் கொள்ள முடிகிறதா? ஆனால் உண்மை அதுதான். அட்டையை வைத்தே எடை போடுகிறார்கள்.

உ + ம் : தங்க மங்கை P.T.உஷாவை முன் அட்டையில் போடுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என பலர் சுட்டிக் காட்டினர்

அடுத்து நாம் சந்திக்கும் மனிதர்கள் சந்திப்பின் முதல் 4 நிமிடங்களிலேயே நம்மைப் பற்றிய அவர்களது கருத்தில் 90% அளவை உருவாக்கிக் கொண்டு விடுகின்றனர். உடல் அளவில் நாம் விரும்பத்தக்கவர்களா இல்லையா என்பது 10 வினாடிக்குள் தீர்மானிக்கப்பட்டு விடுகின்றது.

பெண்ணின் புத்திக் கூர்மை அல்லது சொத்து இவற்றைவிடவும் அவளது தோற்றம், உடல் இவை சம்பந்தமாக மூதாதையர்கள் ஒரு பெண்ணிடம் எதை விரும்பினார்களோ அதே உடனடி விஷயங்களைத்தான் இருபத்தியோராம் நூற்றாண்டிலும் விரும்புகின்றார்கள் என்பது அதிர்ச்சியாக இருந்தாலும் உண்மையாகவும் உள்ளது.

உ + ம் : பெண்பார்த்தல் (திருமணத்தில்)

ஒரு பெண் தனது உடல் தோற்றத்தால் மதிப்பிடப்படுகின்றாள் என்ற எண்ணமே பெரும்பாலான பெண்ணியவாதிகளுக்குக் கசப்பூட்டுவதாகும்.

சென்ற 60 ஆண்டுகளாகச் செய்யப்பட்டுள்ள கவர்ச்சி பற்றிய ஒவ்வொரு ஆய்வும் கடந்த 6000 ஆண்டுகளுக்கும் மேலாக ஓவியர்கள், கவிஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் எடுத்துள்ள அதே முடிவையே தந்துள்ளன.

மேலும் மற்றொருவரது உடல் தோற்றத்தால் பாதிக்கப்படுவது நம் மூளைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதும் மறுக்க முடியாத மற்றும் ஒரு உண்மையாகும்.

1976ம் ஆண்டு கனடா நாட்டின் .'.பெடரல் தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்த பல்கலைக்கழகம் அழகற்ற வேட்பாளர்கள் பெற்ற ஓட்டுக்களை விட அழகான வேட்பாளர்கள் 21/2 மடங்கு அதிகமாக ஓட்டுக்களைப் பெற்றார்கள் என்று ஆய்வு செய்து வெளியிட்டுள்ளது. தமது ஓட்டுக்களை அவர்கள் அது பற்றிய உணர்வு ஏதுமின்றி ஆழ்மனமட்டத்தில் செய்துள்ளனர் என்பதும் தெளிவு.

மற்றும் ஒரு அறிவியல் ஆய்வு தெரிவிப்பது என்னவென்றால் நல்ல அழகிய தோற்றம் கொண்ட நபர்களிடம் நேர்மறைக் குணங்களாகிய வாய்மை, புத்திக்கூர்மை, கனிவு மற்றும் திறமை ஆகியனவும் உள்ளன என்பது நாமாகவே எண்ணிக் கொள்கின்றோம் என்பது தான் தன் உணர்வு ஏதும் இன்றி ஆழ் மன மட்டத்தில் நாம் தீர்மானித்து விடுகின்றோம்.

இன்னுமொரு விடயம் என்னவென்றால் அழகான கவர்ச்சியான நபர்கள் தமது குறைவான கவர்ச்சியுடைய சகாக்களை விடவும் நல்ல வேலைகள் கூடுதல் ஊதியம் என்பவற்றைப் பெறுகின்றார்கள் என்பது. அத்துடன் அவர்கள் அதிகமாக நம்பப்படுகின்றார்கள் மற்றும் அதிகமான தடவைகள் விதிகளை மீறுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றார்கள். அத்துடன் குறைவான தண்டனை பெறுகின்றார்கள் என்பது. இத்தீர்மானிக்கும் செய்முறையில் கவர்ச்சியானது தாக்கம் ஏற்படுத்துவதை மறுப்பது உலகியல் ரீதியில் சரியானதாக இருக்கலாம். ஆனால் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இது உண்மை என்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

இங்கு இது இவ்வாறு இருக்க நல்ல செய்தி என்னவென்றால் நீங்கள் எவ்வாறு தோற்றம் அளிக்கின்றீர்கள் என்பது பற்றிய பல அம்சங்களின் மீது உங்களுக்குக் கட்டுப்பாடு உள்ளது என்பது. தேவையானால் அவற்றை மாற்றிக் கொள்ள உங்களால் முடியும். உங்களையே கவர்ச்சியாக ஆக்கிக் கொள்ள உங்களால் முடியும்.

உங்கள் தோற்றத்தின் பெருமளவு அம்சங்கள் உங்கள் கட்டுப்பாட்டில் உள்ளன எவ்வாறு நடப்பது, உட்காருவது, பேசுவது, உடையணிவது, ஒப்பனை செய்து கொள்வது என்று கற்றுத் தருவதற்கு பயிற்சியாளர்கள் உள்ளனர். உங்கள் எடை உங்கள் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது. மற்றும் உடற்பயிற்சி மூலம் உங்கள் உடலை வடிவமைத்துக் கொள்ள முடியும். சிகை அலங்கார நிபுணர் மூலம் சிகையை சரிசெய்ய முடியும்.

உங்கள் பல்வைத்தியர் மூலம் பல் சீரமைக்க முடியும். இப்படி எல்லாமாக உங்கள் தோற்றத்தை மேம்படுத்தி சிறப்பாக்கிக் கொள்ள உங்களால் முடியும். நீங்கள் விரும்பிய வண்ணம் தோற்றமளிக்காமல் இருப்பதற்கான சொல்லத் தகுந்த காரணங்கள் இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் எதுவும் இல்லை.

அவலட்சணமான பெண்கள் என்று எவரும் இல்லை
சோம்பேறிப் பெண்கள் மட்டுமே உள்ளனர். (ஹெலனா ரூபின்டீன்)

தோற்றமும் அழகும் ஆண்களுக்கும் அவசியமான ஒன்றுதான். ஆனால் பெண்கள் அளவுக்கு முக்கியப்படுவது இல்லை.

திருமதி.மிதிலா ஸ்ரீபத்மநாதன் (B.Com)
நிறைவேற்று அதிகாரி (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)
பணிப்பாளர் (Eurekka ஆளுமை அபிவிருத்தி நிறுவனம்)

நன்றி நவில்கின்றோம்

சுவிஸ் வானவில் 2011 நிகழ்வில்

- கலந்து சிறப்பிக்கும் கலாநிதி. த.வசந்தகுமார், இ.முத்துரத்தினானந்தன், இ.ஜெயராஜா, உடுவை எஸ்.தில்லைநடராசா, அழகலிங்கம் உட்பட வெளிநாடு களைச் சேர்ந்த பழைய மாணவர்கள்.
- சிறப்பு மலருக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், விடயதானம் செய்தவர்கள்
- இசையரங்கு, நடனவிருந்து, நாடக நிகழ்ச்சி, விவாத அரங்கில் கலந்து கொண்டோர்
- பொருளாதார உதவியளித்த வர்த்தகப் பெருமக்கள், நலன்விரும்பிகள்
- வருகை தந்து பெருமைப்படுத்தும் பார்வையாளர்கள்
- விழா சிறக்க ஒத்துழைத்த ஊடக நிறுவனங்கள், மண்டப ஒலி ஒளி வழங்கி உதவியோர்
- சில தினங்களுக்குள் மலரை அழகாக வடிவமைத்து அச்சிட்ட கொழும்பு **Fast Printers** நிறுவனம்
- மலர் வடிவமைப்பு விடயத்தொகுப்பில் உதவிய ந.வித்தியாதரன், சாரதா ஜெயக்குமார், மேனகா திருநடராஜா, பெ.ஜெகநாதன், ஞானம், உடுவை எஸ்.தில்லைநடராசா ஆகியோருக்கு மனம் நிறைந்த நன்றிகள்

கணா.கணபதிப்பிள்ளை **வி.இரத்தினகுமார்**

மலர்குழு சார்பில்

Muniyandi Villas

Indian & Ceylon Restaurant & Take Out

Zweiersrasse 55, 8004 Zurich, Switzerland
Tel : 0041 44 242 71 11 Mobile : 0041 79 678 41 20

உங்களின் வைபவங்கள் அனைத்திற்கும்
சுவைமிக்க உணவு வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

யோகாசனப் பயிற்சி வகுப்பு

நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்
என்னும்
பழமொழிக்கிணங்க

1. என்றும் இளமையுடன் வாழலாம்
2. நோயற்ற வாழ்வு வாழலாம்
3. மனதிற்கு சாந்தியைக் கொடுக்கிறது
4. சோம்பலை ஒழிக்கின்றது
5. உடலுக்கு மிகுந்த பலத்தைக் கொடுக்கிறது

இவ் வண்ணம் உடலையும் மனதையும்
ஆரோக்கியமாகப் பேணவும் மகிழ்வுடன் வாழவும் யோகாசனப்
பயிற்சி உதவுகிறது.

பயிற்சி ஆசிரியர் S RATNAM 055-615 34 24

GENERALI SCHWEIZ
Versicherungen

Peter Vögelin
Versicherungs- und Vorsorgeberater

Generalagentur Renzo Ruf
Schützengraben 21
Postfach 317, 4003 Basel
Tel. +41 (0)58 473 37 00
Fax +41 (0)58 473 37 01

Direkt
Tel. +41 (0)58 473 37 26
Mobile +41 (0)76 588 18 68
peter.voegelin@generali.ch
Tel. Schaden +41 (0)800 82 84 86

ARUN
AYURVEDA CENTER

அருண்
ஆயுர்வேத நிலையம்

எமது சேவைகள்:

சோதிட ஆலோசனைகள்
ஆன்மீகப்பயிற்சி
மூலிகை நீராவிக்குளியல்
ஆயுர்வேத மசாஜ்

எமது தயாரிப்புகள்

EATHAM
ICE TEA
ஏற்றம்
மூலிகைதேனீர்

www.arun-ayurvedacenter.ch

தற்போது சுவிசில் முன்னணி விற்பனை நிலையங்களில்
(Coop, Mannor) விற்பனையாகிக்கொண்டிருக்கிறது.

தொடர்புகளுக்கு:

ARUN-AYURVEDA CENTER GMBH
Widmerstrasse 100
CH-8038 Zürich-Wollishofen.
Tel. 044 271 12 80 / 079 261 33 31 www.eatham.ch

விரைவான சேவை

சுத்தமான சேவை

எஸ்.கே.எஸ்

SKS

தூப்புரவு செய்தல் மற்றும் இடமாற்றல் சேவைகள்

எவற்றை நன்கு சுத்தமாக்க வேண்டுமோ
அவற்றை திறம்படச்செய்ய
எமக்குத்தெரியும்.

இருப்பிடங்களிலிருந்து
இடம்மாறிச்செல்வதற்கும்

நீங்கள் தனியாகவோ,
குடும்பத்தினருடனோ
அல்லது குழுவாகவோ
பயணஞ்செய்வதற்கும்

சாரதியுடன்
அல்லது
இல்லாமல்

திறந்திருக்கும் நேரம்
Öffnungszeiten:
Montag bis Freitag
08:00 - 12:00 Uhr
13:00 - 17:00 Uhr

SKS

Adresse:
SKS Transport und Reinigung
Austrasse 49
Postfach 8469
CH-8045 Zürich

Mobile: +41 (0) 79 813 78 52
Telefax: +41 (0) 44 450 19 09
Mail: info@sks-transpor.ch
www.sks-transport.ch

VELLA KREDIT
வேலா கிறடிட்

Badenerstrasse.332, 8040 Zurich
Email : vella.g@live.com
Tel: 044 461 28 61 Fax: 044 461 28 62

www.g-vellakredit.com

சூரிச் நகரில் 1992ம் ஆண்டு முதல் முதன்மை கிரடிடராக இயங்கிய வடிவேலா வரதனின் கிறடிட ஸ்தாபனம்

மீண்டும் புதிய சலுகைகளுடன்!

சுவிஸ் நாட்டின் சட்ட திட்டங்களுடன் 1992ம் ஆண்டு முதல் 2011 இன்றுவரை

நேர்மையுடனும் நம்பிக்கையுடனும்

பல்லாயிரம் தமிழர்களுக்கு சுவிஸ் சட்ட வரைப்படி உதவிய அனுபவமே எமது பெருமை.
நீங்கள் விரும்பும் தொகையை 5000 முதல் 2 இலட்சம் சுவிஸ் பிராங் வரை பெற்றுத் தருவது

வேலா கிறடிட் மட்டுமே.

வங்கிகளின் சட்ட வரையுடன் செயல் பட்டதால் இன்று எமது கிறடிட் ஸ்தாபனம்
சுவிஸில் உள்ள 8 மாபெரும் வங்கிகளுடன் சேர்ந்து மிகவும் குறைந்த வட்டியுடன் வழங்கும்
கிறடிட் ஸ்தாபனமாக உயர்ந்துள்ளது. இப்படி 8 மாபெரும் வங்கிகளுடன் சேர்ந்து இயங்கும் ஒரே ஸ்தாபனம்

வேலா கிறடிட் மட்டுமே.

8.40% உரிய மாதங்களுக்குரிய வட்டி விபரம்.

Kredit Betrag/ கடன் தொகை	12 Monate/மாதம்		24 Monate/மாதம்		36 Monate /மாதம்		48 Monate மாதம்		60 Monate/மாதம்	
	Bank Gebühren/ வங்கி	Monats Rate/ கட்டு பணம்	Bank Gebühren/ வங்கி	Monats Rate/ கட்டு பணம்	Bank Gebühren/ வங்கி	Monats Rate/ கட்டு பணம்	Bank Gebühren/ வங்கி	Monats Rate/ கட்டு பணம்	Bank Gebühren/ வங்கி	Monats Rate/ கட்டு பணம்
20'000	987.80	1'740.65	1'729.60	905.40	2'593.60	627.60	3'429.20	489.15	4'384.00	406.40
30'000	1'331.40	2'610.95	2'594.40	1'358.10	3'590.40	941.40	5'217.60	733.70	6'579.00	609.65
40'000	1'775.00	3'481.25	3'459.20	1'810.80	5'185.40	1'255.15	6'956.00	978.25	8'771.00	812.95
50'000	2'218'60	4'351.55	4'324.00	2'263.50	6'482.20	1'568.95	8'696.80	1'22.85	10'963.00	1'016.05
60'000	2'662.80	5'221.85	5'188.80	2'716.20	7'7729.00	1'882.75	10'435.20	1'467.40	13'155.00	1'219.25
70'000	3'106.40	6'092.15	6'053.60	3'168.90	9'074.90	2'196.53	12'174.32	1'711.97	15'348.20	1'422.47
80'000	3'550.00	6'962.45	6'918.40	3'621.60	10'371.16	2'510.31	13'913.44	1'956.53	17'540.80	1'625.68

எம்மோடு சேர்ந்து இயங்கும் 8 வங்கிகள்

BANK now
CREDIT SUISSE
RAIFFEISEN
BCN
cashgate.-
GCL GENEVE CREDIT & LEASING SA
GE Money Bank
prestokredit

Groupe Mutual, Helsana, CSS, Swica, Concordia, Generali, Pax, Quantum
ஆகியவற்றின் நேரடி முகவர்கள்.

20 வது வருடத்தில்
GK Krishan GmbH

www.gk-krishan.ch

மிக குறுகிய நேரத்தில் உங்கள் தேவைகளை கண்டறிந்து என்றும் பிரச்சனைகள் வராதவாறு காப்புறுதிகளை செய்து தருகிறோம்.

Groupe Mutual, Helsana, CSS, Swica, Concordia, Generali, Pax, Quantum
நிறுவனங்களில் வேலை செய்ய விரும்பின் எம்மை நாடுங்கள்

2012ம் ஆண்டு மருத்துவக்காப்புறுதி மேலும் அதிகரிக்க இருப்பதால் முழுமையாக ஆலோசனைகளை உங்கள் இல்லம் தேடி வந்து வழங்குகின்றோம்.

வெற்றிப் பயணத்தின் மகிழ்வில் சிறப்பு திட்டங்கள் எம்மிடம் உள்ளன.

உங்கள் குடும்பத்தில் 3பிள்ளைகள் இருப்பின் 1பிள்ளைக்கு மருத்துவக்காப்புறுதி இலவசம்.

நேரடியாக எமது நிவனத்தில் ஆயுட்காப்புறுதி பெறுபவர்களுக்கு இரண்டு மாதம் தவணைக்கட்டணம் பணமாக வழங்கப்படும்.

நேரடியாக வந்து மருதுவக்காப்புறுதி செய்யும் குடும்பத்திற்கு 300CHF குட்சயின் வழங்கப்படும்.

மேலும் எமது சேவைகள்

மருத்துவக்காப்புறுதி
ஆயுட்காப்புறுதி
வாகனக்காப்புறுதி
வங்கிக்கடன்
வீட்டுக்கடன்
சட்டத்தரணி

Design & Print Service

பிறந்தநாள் அழைப்பிதழ் 0.45 இல் இருந்து...
திருமண அழைப்பிதழ் 1.10 இல் இருந்து...

மிக குறுகிய நேரத்தில் புதுவிதமாய் அனைவரும் வியக்கும் வகையில் வழவமைப்பு மற்றும் அச்சக வேலைகள் செய்துதரக் காத்திருக்கிறோம்.

பிள்ளைகள் சேமிப்பு திட்டம்

ஒரு பிள்ளைக்கு காப்புறுதி செய்தால் 3 பிள்ளைக்கு காப்புறுதி நிலையம் பணம் கட்டும்
3 பிள்ளை இருப்பின் கடைசி பிள்ளை 1இல் இருந்து 14 வயதுக்குள் இருக்க வேண்டும்
குழந்தைகளுக்கு 24 வயது வரை மட்டுமே இத்திட்டம்
பெற்றோர் வேலை இழந்து பணம் கட்ட முடியாது என்ற நிலை வரும்பொழுது தொடர்ந்து காப்புறுதி நிலையம் 24 மாதத்திற்கு பணம் கட்டும்.
குறைந்தது 4 வருடங்களுக்கு மீன்பு உங்களுக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ பணம் தேவைப்படின் 90 வீத பணம் திரும்ப பெறலாம்.
உங்கள் பிள்ளைகளுக்கு வருத்தம் ஏற்படின் காப்புறுதி நிலையம் 3 லட்சம் பணமாக வளங்கும்

வாகன சேவை

புதிய சிறிய, பெரிய வாகனங்கள் எம்மிடம் வாடகைக்கு உள்ளன
உங்கள் சொகுசான பயணத்திற்கு உடன் எம்மை தொடர்புகொள்ளுங்கள்

சிறப்பு சேவை

பூ மணவரை –மண்டபம்
முத்துமணவரை –மணப்பெண் அலங்காரம்
மண்டப அலங்காராம் –சாப்பாடு

Falkenweg 17, 6340 Baar
Tel:041 760 67 91 Fax:041 760 67 93. Mob:079 255 19 11,079 912 71 67
Web:www.gk-krishan.ch, E.Mail:info@gk-krishan.ch

மேலும் எமது சேவைகளை அறிந்துகொள்ள எமது இணை அளுத்தை நாடுங்கள்

Fast Printers : 289-1/2, Galle Road, Colombo - 06 T.P-0112362312.